# அகலமும்

# ஆழமும்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டாக்டர். ம.ரா.போ. குருசாமி

# அகலமும் ஆழமும்

முனைவர் ம.ரா.போ. குருசாமி
எம். ஏ, எம்.லிட், பி.எச்டி.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி.டி.டி.ஐ. (அஞ்சல்); தரமணி, சென்னை- 00113.

டாக்டர் ம. பொ. சிவஞானம் அறக்கட்டளைச் சொற்பொழிவு
வரிசை—2
Dr. M. P. Sivagnanam Endowment Lecture No. 2
Endowment Lecture Publication Number. 9

# BIBLIOGRAPHICAL DATA



| | |
|---|---|
| Title of the book | Akalamum Ālamum |
| Author | Dr. M.R.P. GURUSAMY M.A., M.Litt., Ph.D. |
| Publisher | International Institute of Tamil Studies, T.T.T.I (Post) Taramani, Madras-600113 |
| Publication number | 117 |
| Language | Tamil |
| Edition | First |
| Date of Publication | September, 1985 |
| Paper used | white printing |
| Size of the book | 21X14cms |
| Printing types used | 10 Point |
| Number of copies printed | 1200 |
| Number of pages | vii+111 |
| Price | Rs. 12/- |
| Printer | Jayasree printers No. 1, Sundereswarar koil st, Royapettah Madras-14. |
| Binding | Section binding |
| Artist | A. S. Velusamy |
| Subject | A study on M. P. Sivagnanam |



நூலின் கருத்துகள் முழுமைக்கும் நூலாசிரியரே பொறுப்பாவார்.
நிறுவனம் பொறுப்பல்ல.

டாக்டர். ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600113.

# பதிப்புரை

தமிழை வளப்படுத்தும் நிறுவனத்தின் பல்வேறு முயற்சிகளுள் ஒன்றாக அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் அமைகின்றன. 'அகலமும் ஆழமும்' எனும் இந்நூல் மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்களின் அறக்கட்டளைச் சொற்பொழிவாக அமைகிறது. இவ்வறக்கட்டளைச் சார்பாக வெளிவரும் இரண்டாவது நூலாகும் இது. தமிழைத் தம் உயிர்மூச்சாகக் கொண்டு வாழும் டாக்டர் ம. பொ. சி. அவர்களின் ஆளுமைத் திறனை அறுதியிடுகிறது இந்நூல். தமிழ்த்தலைவர் ம. பொ. சியைப் புதிய கோணத்தில் படம் பிடித்துக் காட்டுகிறது. முதுமையிலும் தளராது நாட்டுப்பணி, மொழிப்பணி என ஓயாது உழைத்துக் கொண்டிருக்கும் இம் மூதறிஞருக்குப் பல வாழ்க்கை வரலாறுகள் எழுந்துள்ள போதிலும் ஒரு புதுமைப் படைப்பாக இஃது ஒளிருகிறது. அன்னாரது வாக்கினைக் கொண்டே அவரை அளவிட்டுள்ள முயற்சி உள்ளுந்தோறும் இன்பம் பயப்பதாம்.

இந்நூலாசிரியர் டாக்டர் ம.ரா. போ. குருசாமி அவர்களின் முயற்சியைப் போற்றிப் பாராட்டி மகிழ்கின்றேன்.

இந்நிறுவனப்பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கட்கு மிக்க நன்றியுடையோம்.

அறக்கட்டளைச் சொற்பொழிவு நூல்களைக் கவனமாகவும் பொறுப்பாகவும் பார்த்து, செவ்வையாக்கித் தருகின்ற பொறுப்பாளர் டாக்டர் ச. சிவகாமி அவர்கட்கு என் வாழ்த்துகள்.

இந்நூலினை உரிய காலத்தில் சிறப்புற அச்சிட்டுத் தந்துள்ள ஜெயஸ்ரீ அச்சகத்தின் உரிமையாளர் பாலன் அவர்கட்கும் எங்கள் நன்றி.

சென்னை
9-9-85

அன்பன்
ச. வே. சுப்பிரமணியன்

# ஒரு சொல்

தமிழ் மொழி, தமிழகம், தமிழ் இனம்—
பண்பாடு, சமயம்,
அரசியல்

இத்தகு துறைகளிலே காந்திய நெறி பேணி—மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்னும் பழமொழிக்கு ஏற்ப சிறிய அமைப்பினைக் கொண்டு பெரிய சாதனை புரிந்து 'மகிழ் இனிது கந்தம்' என்னுமாப் போலே, என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய கற்பக மலரெனச் சீரோங்கிய சிறப்பின் மிக்க சிலம்புச் செல்வர்—டாக்டர் ம. பொ. சி. பற்றி அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்துதற்குக் கிடைத்த வாய்ப்பினை வாழ்க்கைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். இவ்வரிய வாய்ப்பினை வழங்கியுதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நெறியாளர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவு நாயகரின் ஆளுமை, பணி ஆகியவற்றினைக் கணித்துரைக்கும் தகுதி, திறமைகள் எனக்கு இருக்கிறதா என்ற ஆய்விலே ஈடுபடுவதைவிட, அப் பெருந்தகையுடன் நெடுங்காலம் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் பேறும் கிடைத்ததையே எண்ணிக்கொள்கிறேன். இவ்வெண்ணத்தின் முனைப்பிலேயே இச்சொற்பொழிவினை மேற்கொள்கிறேன். எனக்கு உற்ற சில சூழல்களால் இச்சொற்பொழிவு நிகழ்ந்திருக்கவேண்டிய நாளில் நிகழவில்லை. அமைப்பாளர்களின் அன்பார்ந்த இசைவினைப் பெற்று காலந்தாழ்த்தி இக் கடமையினைச் செய்யுமாறு நேர்ந்துவிட்டது.

ஐயா ம. பொ. சி. அவர்கட்குக் கம்பர் வாக்கினை நினைவூட்டி விட்டு அதன்மேல்தான் மேலே செல்ல விழைகிறேன்.

அறையும் ஆடரங்கும் படப் பிள்ளைகள்
தறையிற் கீறிடின் தச்சரும் காய்வரோ

பிழைகள் பொறுத்து, சிறப்புகள் இருக்குமெனின் ஏற்று வாழ்த்த யாவரையும் வேண்டுகிறேன்.

ம. ரா. போ. குருசாமி

# படையல்

புதிய தமிழகம் படைக்கும் நாட்டம்
சிலம்புச் செல்வரின் உள்ளத்திலே
கருக் கொண்டு உருவாகிவந்த தருணத்தில்

அந்தத் தெய்வீக எண்ணத்திற்குச்
செயல்வடிவம் தந்து
உலவவிட்ட கூட்டத்தை
நடத்த ஏற்பாடு செய்த*

என் தமையனார்
**திரு. ம. ரா. சண்முகசுந்தரம்** அவர்களின்
தூய நினைவிற்கு அஞ்சலி செலுத்தி

அவர்கள் திருவடிக்கண்
இதனைப்
படைக்கிறேன்

---

* 'எனது போராட்டம்'
பகுதி இரண்டின்
தொடக்கம் காண்க.

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | III |
| ஒரு சொல் | IV |
| முன்னுரை | 1 |
| பல திறன்:மூதறிஞர் கணிப்பு | 3 |
| ஆளுமை வளர்ப்பதில் எதிர்நீச்சல் | 4 |
| தனித்தன்மை | 9 |
| எல்லைப்போர் 9 | |
| காந்தியத்தின் குரல்; திண்மை 13 | |
| மோதல்:ஆயினும்... 14 | |
| திண்மையும் மென்மையும் | 18 |
| பண்பாடு 18 | |
| ஆணவர் அல்லர் 22 | |
| வரலாற்றுணர்வு | 24 |
| நாட்டு வரலாறு 24 | |
| படை நடவடிக்கை 25 | |
| இலக்கிய வரலாறு 29 | |
| வரலாற்றுணர்வின் அடிப்படை:அணுகுமுறை | 32 |
| வரலாற்றாசிரியர்களுக்கு 33 | |
| வரலாற்றுணர்வு : சமய இலக்கியம் 35 | |
| சமுதாய உணர்வு | 38 |
| குடும்பக் கட்டுப்பாடு 38 | |
| வரதட்சிணை 41 | |
| சாதிப் பாகுபாடும் வேறுபாடும் 45 | |
| சமயத்துறை | 55 |
| காந்தி வழி 55 | |
| இறையுணர்வு 55 | |
| நினைந்துருகும் அடியாரை நையவைத்தான் | 57 |
| சமய வீரம் 58 | |
| இனவுணர்வு×சமயவுணர்வு 59 | |
| சமயச் சிறைக்குள் சிக்காத சமரசம் 64 | |
| மொழிக்கொள்கை | 66 |
| எங்கும் எதிலும் தமிழ் 67 | |
| கலப்பு : கலப்படம் 73 | |
| மொழியும் வழியும் 77 | |
| பொதுமொழி 79 | |
| மாறியுள்ள சூழல் 83 | |
| அவ்பிக் அவலம் 85 | |
| காந்தியத்துக்கு வேண்டுகோள் 87 | |

இதுகாறும்...இதன் மேலும் 88
இலக்கிய அரங்கிலே 89
எழுத்தாளர் மட்டுமா? 89
சக்கையிலே எடுத்த சாறு 90
அரசியல், இலக்கியம் : புதிய மரபு 91
திறனாய்விலே புதிய உத்திகள் 91
மபொசி, இலக்கியம் : பிணைப்பு நிலை 92
குயில் ஆய்வு : விவரப் பசி 94
தலைப்பு 95
அறிவியல் செய்தி 96
குரல் வேற்றுமை 96
ஆனந்தக் குயில்-அவலக் குயில் 100
வட்டார வழக்குணர்வு தந்த விளக்கம் 101
ஆழ முகக்கினும்... 101
துணை நூல்கள்
பின்னிணைப்பு : மபொசியின் நூல்கள் 104
(கால நிரல், பொருள் நிரல்)
பின்னிணைப்பு விளக்கம் 107
அருஞ்சொல்லகர வரிசை 110

# முன்னுரை

செல்வமும் செல்வாக்கும் பெற்றிராதவர்கள் பொதுவாக வாழ்க்கையில் சிறப்படைவது இயலாது. இது பொதுவிதி, எல்லா விதிகளுக்கும் விலக்கு இருக்கும். ஆயின், இந்த விதிக்கு விலக்குக் காண்பது பெரும்பாலும் இல்லையென்றே சொல்ல வேண்டும். ‘அருள் இலார்க்கு அவ்வுலகம் இல்லை’ என்பதற்கு உவமை சொல்லவந்த வள்ளுவர் ‘பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு’[1] என்று குறிப்பிட்டுள்ளார். உவமை என்பது உயர்ந்ததன் மேற்றே என்ற விதி இவண் நினைவுகொள்ளத் தக்கது.[2] ‘இவ்வுலகத்து இன்பங்கட்குப் பொருள் காரணமானாற் போல...’ என்று இவ்வுவமை நுட்பத்தினைப் பரிமேலழகர் சுட்டிச் செல்வார்.[3] வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைக் குறைவறப்பெறாவிடினும், குறைந்த சிற்றெல்லையளவிலாவது பெறமுடியா நிலையையே ‘வறுமைக் கோடு’ என்ற பொருளாதாரக் குறியீடு சுட்டுகிறது. அந்தக் கொடிய வறுமைக் கோட்டுக்கே புகலிடமாக அமைந்த ஒரு குடும்பத்தில் குப்பத்தில் பிறந்து, ‘வளர்ந்தவர்’, நம் கருத்தை இன்று பிணித்து நிற்கும் நாயகர். ‘பொருளற்றார் பூப்பர் ஒருகால்’[4] என்று ஓரோவழி ஏற்படக்கூடிய ஆகூழினையும் திருக்குறள் சுட்டியிருப்பதை நாம் அறிவோம். ஆயின், அந்த ‘ஒளிக் கீற்று’ பளிச்சிடக் கூடும் என்ற நம்பிக்கைக்குரிய வாய்ப்பினை ஒரு சிறிது கூடப் பெறாத கொடிய வறுமைப்பிடியிலே சிக்கியிருந்த குடும்பத்திலே பிறந்தவர் நம் நாயகர் மபொசி.

தாகூர்கள் தரணியார் போற்றும் தகுநிலை பெறுவது அரிய சாதனை ஆகாது. பொருட்செல்வம் பொதுளிய அத்தகையோர் வாழ்வினை வாய்ப்புகள் வலியத் தேடிவரும். பொருட்செல்வம் இல்லையெனினும் மிகமிக அருமையாக மிகச் சிலர் குடும்பத்தில் வாய்த்த கல்விச் செல்வத்தால் வாழ்வரங்கின் ஒளி மேடையிலே

1. குறள் 247
2. தொல. உவம. -3
3. குறள் 247 பரிமேலழகர் உரை
4. குறள் 248

சற்றே உலவிடும் வாய்ப்பினைப் பெறுதல் உண்டு. இந்த இரண்டுமே எட்டாக் கனியென அங்காந்து நோக்கும் சூழலிலே சிக்கிய ஏழைச் சிவஞானம் எவரையும் ஈர்த்துப் பிடிக்கும் நிலையைப் பெற்றதுதான் அரும்பெருஞ் சாதனை யாகும்.

இந்தச் சாதனையை இவரால் எப்படிக் கைக் கனியாக்க முடிந்தது?

ஆளுமையில் அமைந்துவிடுகின்ற இயற்கைச் சிறப்பும் தளராத—இடையறாத முயற்சியால் உரமேற்றும் செயற்கைத் திறனுமே செயற்கரிய செய்யும் பெருமிதத்தைச் சேர்க்கவல்லன. மபொசிக்குக் கருவிலே வாய்த்த திரு உண்டு; ஆம், அவர்களின் அன்னையார் கருவிலே பேணி வழங்கிய திருவும், ஈன்று புறந் தந்த காலத்து ஊட்டி வளர்த்த திருவும் சிலம்புச் செல்வருக்குக் கருவிலே வாய்த்த திருவாகும்—இயற்கைச் சிறப்பாகும். அதன் மேல் வாழ்வெனும் பேரலைப் பெருக்கிலே எதிர்நீச்சலிட நேர்ந்த போது அவர்கள் மேற்கொண்ட முயற்சி வழங்கிய செயற்கைச் செல்வமும் மபொசியின் தனிப் பெருமையாகும். 'மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாஉள முன்னிற்பவை' என்ற குறளையும், 'இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கை யாகிய நூலறிவோடு உடையராய அமைச்சர்க்கு மிக்க நுட்பத் தையுடைய சூழ்ச்சிகளாய் முன் நிற்பன யாவை உள'[5] என்று அதற்குப் பரிமேலழகர் வரைந்த உரையையும் இங்கே நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

மபொசியின் ஆளுமை இயற்கை மதி நுட்பத்தையும் சேர்க்கை நூலறிவையும் கொண்டு உருவானது என்று சொல்வது பொருத்தம்தான்; எனினும், போதாது. பரம்பரை வழியில் பெற்ற மதி நுட்பமும் நூலகங்களையே விழுங்கி ஏப்பம் விட்ட சேர்க்கையறிவும் செழிப்பாகப் பெற்ற பலர் நம் நெஞ்சத் திரை யிலே நிழலாடுவார். அவர்களெல்லாம் அடையாத, அடைய முடியாத சாதனைகளை உரிமைச் செல்வமாகப் பெற்று, பல்லாற்றானும் எதிர்நிலைச் சூழலையே உருவாக்கி வைத்துள்ள சமுதாயத்தில் போற்றத்தக்க செல்வாக்கினையும் அவர் பெற்றி ருக்கிறார் என்பதனையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டி யுள்ளது.

இந்த ஆளுமைச் சிறப்பைத் தம் உரிமைச் செல்வமாக அவர் பெற்றுள்ளமையின் திறத்தினை நாம் உணர்தல் வேண்டும்.

5. குறள் 636

## பல திறன் : மூதறிஞர் கணிப்பு

பொதுவாக மனிதகுல வரலாற்றிலும் குறிப்பாகவும் சிறப்பாகவும் பாரத அரங்கிலும் மிகச் சிறப்பான இடம் பெறுபவர் மூதறிஞர் இராஜாஜி என்பதை மறுப்பார் இலர். பெருமைக்குரிய அம் மூதறிஞர்,

> "சிலருக்கு அரசியல் தெரியும்; இலக்கியம் தெரியாது; தெய்வ பக்தி அவர்களுக்குப் பிடிக்கவே பிடிக்காது. பலருக்கு இலக்கியம் மட்டும் தெரிந்திருக்கும்; அரசியல் தெரியாது. ஏதோ கட்டுரை எழுதவேண்டுமென்பதற்காக அரசியல் தெரிந்ததுபோலப் பாசாங்கு செய்வார்கள். 1905 ஆம் ஆண்டிலே நடந்ததை 1915 ஆம் ஆண்டிலே நடந்ததாக எழுதுவார்கள். இன்னும் சிலரிடம் அன்பு இருக்கும். ஆனால், அவர்களுக்கு அரசியலோ இலக்கியமோ தெரியாது. நம் மபொசி அவர்களிடத்திலே அன்பு, பண்பு, அரசியல், இலக்கியம், தெய்வபக்தி எல்லாம் இருக்கின்றன."
>
> "முன்னே பேசியவர்கள், மபொசி எனக்குச் சிஷ்யர் என்று சொன்னார்கள். ஆனால், குருவிற்கே திருமந்திரம் சொல்கிற சிஷ்யர்களும் உண்டு, ஆனால் ஒன்றும் அன்பு குறைந்து விடாது."
>
> "ஒருவர் அரசியலில் இருந்தாலும், அன்பு, பண்பு, தெய்வபக்தி ஆகியவற்றைக் கைவிடக் கூடாது. நம்முடைய வாழ்க்கையை எதிலே செலுத்துகிறோமோ அதிலே முழுக் கவனம் வேண்டும். மபொசி அவர்கள் அப்படித்தான் வாழ்க்கை நடத்துகிறார்கள்."[6]

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் கரம் ஏந்தும் துலாக் கோல் பொன் நிறுக்கும் தராசு; நடு முள் இம்மி இப்பால் அப்பால் அதிர்ந்தாலும் ஆயிரமாயிரம் ரூபாய்க்குச் செலவு வைக்கும். எத்துறையிலும் துலாக் கோற் கணிப்பிலே எச்சரிக்கையுடைய மூதறிஞரின் கணிப்பு, மபொசியின் ஆளுமையின் தனித்தன்மையினை நமக்கு ஒருவாறு சுட்டிக் காட்டுகிறது.

ஆளுமைக்குப் பல்துறைத்திறன்கள் ஊட்டும் தனிசிறப்பினைச் சிலம்புச் செல்வர் உணர்ந்தவர். தம் வாழ்வின் அமைப்பிலே

---

6. சக்கரவர்த்தி இராச கோபாலாச்சாரியார் : மபொசியின் 55 ஆம் ஆண்டு பிறந்த நாள் (16-7-60) விழாவில் பேசியது. (மபொசி மணிவிழாமலர் பக். 23)

உள்ள அச்சிறப்பினை அவர் உணர்த்தவில்லை; ஆயினும், மானிடர்க்குச் சிறப்புத் தரும் இத்தகைமையினை இளங்கோவடிகள்பால் கண்டு உணர்த்தியுள்ளார்.

> ''இன்றைய தமிழகத்தில் இலக்கிய ஞானம் படைத்த புலவர்களில் பெரும்பாலோர்க்கு அரசியல் ஞானமும் ஆர்வமும் இல்லை. அப்படியே அரசியல் தலைவர்கள் அமைச்சர்கள் என்போரில் பலருக்கு இலக்கிய ஞானம் இல்லை. புலமையும் புவியாளும் திறமையும் ஒருங்கே படைத்திருந்த இளங்கோவடிகள் இன்றைய புலவர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக விளங்குகிறார்''[7]

இலக்கிய ஞானம், அரசியல் ஞானம் ஆகிய இரு கூறுகளை மட்டுமே இளங்கோவடிகளின் ஆளுமையிலேயே சிலம்புச்செல்வர் இணைத்துக் காட்டுகிறார். அந்த அளவிலேயும் மபொசியின் ஆளுமை அமைவதால் அவரை 'இருபதாம் நூற்றாண்டு இளங்கோவடிகள்' என்று குறிப்பிடுவது மிகையாகாது. ஆனால், இலக்கியம், அரசியல் ஆகிய கூறுகளுக்கு மேலும் பற்பல கூறுகளின் கூட்டு ஆளுமை மபொசியினது என்பதை நாம் மறந்திடுதலாகாது. 'சர்வோதயம்' இதழ் மபொசியை 'டாக்டர் இளங்கோவடிகள்' என்று கணித்து எழுதிய கட்டுரை குறிப்பிடத்தக்கது.[8]

## ஆளுமை வளர்ப்பதில் எதிர்நீச்சல்

முன்னே குறித்த வண்ணம் இலக்கிய ஞானமும் அரசியல் ஞானமும் கொண்டோர் பலர் உளரெனினும், அவர்களெல்லோரும் பெறமுடியாத சிறப்பும் சீர்மையும் சிலம்புச் செல்வருக்கு வாய்த்துள்ளன. காரணம், அவர் தம் ஆளுமையை நெறியான வகையிலே வளர்த்தமையே யாகும். எத்துணை யளவு அவர் தம் ஆளுமை வளர்ச்சியைப் பேணுவதில் இடர்ப்பட நேர்ந்துள்ளது என்பதை அறிந்துகொள்ளுதல் நலம்.

கள் இறக்குவதைப் பரம்பரைத் தொழிலாகக் கொண்ட மரபிலே தோன்றியவர்; ஓரிரு தலைமுறைகளுக்கு முன் அந்த மரபினர் வேறு துறைகளில் நாட்டமோ பயிற்சியோ இல்லாதிருந்தவர்கள். சிலம்புச் செல்வரின் குடும்பத்தவரும் உறவினர்களும் அந்தத் தொழிலையே நம்பியிருந்தவர்கள். இவ்வாறா

7. மபொசி: சிலப்பதிகாரத் திறனாய்வு - பக் 232
8. 'சர்வோதயம்' 1979 நவம்பர் இதழ்.

அண்ணல் காந்தியடிகளின் வழிநின்ற தொண்டர், காங்கிரஸ் காரர். அண்ணலின் அறவழிக் கட்டளையும், கட்சிக் கட்டுப் பாடும் மட்டுமல்லாமல், மபொசியின் நாட்டமும் மதுவிலக்கையே நாடியது. அவர் தம் கருத்தினை விளக்குகிறார்:

> ''நான் அன்றும் இன்றும் பரிபூரண மதுவிலக்கில் மிகுந்த ஆர்வங் காட்டி வருவதற்கு என் தந்தையாரும் முக்கியக் காரணமாவார்' அவர், குடிபோதையிலிருக் கும்போதெல்லாம் என் அன்னையாரை அடித்துத் துன்புறுத்தியதை நான் நேரில் கண்டிருக்கிறேன். பல நேரங்களில் என் அன்னையாருக்கு இரத்தக் காயங்கூட ஏற்பட்டதுண்டு. அப்போதெல்லாம் நான் வாய்விட்டு அலறி அழுதிருக்கிறேன். என் தந்தை தங்கமானவர் தான். தன் மனைவியாரிடம் மிகுந்த அன்புடையவர் தான். ஆயினும், குடிபோதையால் அறிவிழந்துவிடும் நேரங்களிலே கல்வியறிவும் கற்பு நெறியுமுடைய தன் மனைவியை உதைபந்தாக்குவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். அக்கம் பக்கத்தில் குடியிருப்போ ரோடும் சுற்றத்தாரோடும் சண்டைக்குப் போவார். குடிபோதையில்லாத நேரங்களில், குழந்தைபோல நடந்துகொள்வார். அவர் மூலமாகத்தான் குடிப்பழக் கத்தின் கொடுமையை நான் அறிந்தேன். என் அன்னை யாரைப் போன்ற தாய்மார் பலர் குடிப்பழக்கமுடைய தங்கள் கணவன்மார்களால் கொடுமைப்படுத்தப்படு வதையும் நான் பார்த்திருக்கிறேன். அதனால் இந்தக் கொடுமை மனித சமுதாயத்தைவிட்டே ஒழிக்கப்பட வேண்டுமென்று உறுதி கொண்டேன். மது அடியோடு ஒழிந்தால், தாய்க்குலம் விடுதலை பெறும். கணவன்— மனைவியர் வாழ்க்கையிலே இன்பம் மலரும் என்று நம்பினேன். இந்த நம்பிக்கை காரணமாகவும் காங்கிர சும் காந்தியடிகளும் வற்புறுத்திய மதுவிலக்குக் கொள்கையை உறுதியாக ஆதரித்தேன். அதனால், எனது குடும்பத்தின் வருவாய் பாதிக்கப்படுவதையும் நான் பொருட்படுத்தவில்லை. அந்த இழப்பையும் ஏற்றுக்கொள்ளத் துணிந்தேன். சுற்றத்தார்—சுய சாதியார் வாழ்விழந்து வருந்துவர் என்பதறிந்தும், அதனை நான் பொருட்படுத்தவில்லை. குடிப்பழக்க மென்னும் கொடுமையிலிருந்து தமிழர் சமுதாயத்தை விடுவிக்க ஒரு சாதி அழிந்தாலும் பாதகமில்லை யென்று கூடக் கருதினேன்.''[9]

---

9. மபொசி : எனது போராட்டம் - பக். 65

குடும்பம் வருமானத்தை இழப்பதாக இருந்தாலும்—சுற்றத்தாரும் சுயசாதியாரும் வாழ்விழந்து வருந்துவதாக இருந்தாலும் பொருட்படுத்தாத அளவுக்குக் கொள்கைப் பற்றுக் கொண்டவர்; கொள்கை என்பது வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காகத் தக்கவாறெல்லாம் நெளிவும் வளைவும் கொண்டதாக அமைத்துக்கொள்ளப்படும் கருவி என்று அவர் கருதியதில்லை. சமுதாய நலம் ஒன்றையே முன்னிறுத்தி, அதன் பொருட்டு எத்துணை இடர் வரினும் தளரா உறுதி கூட்டுவதையே கொள்கையாக—குறிக்கோளாகக் கொண்டவர் அவர். தாம் 'பிடித்த' கொள்கைக்காகப் பிறரை வாட்டி வதக்குவதற்கும் தயங்காமையையே பொதுவாழ்வுப் பணி எனக் கருதுவோர் பெருகியுள்ள சமுதாயத்தில் நாம் வாழ்கிறோம். காந்திய நெறியினர் அஹிம்சைத் தத்துவத்தை எவ்வாறு நடைமுறைப் படுத்தவேண்டும் என்பதற்குக் காந்தியடிகள் தரும் விளக்கத்தை இங்கே நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

> ''பிறர் மீது துன்பத்தைச் சுமத்துவதால் இன்பம் வருவதில்லை. துன்பத்தைத் தானே தன்மீது ஏற்றிப் பொறுத்துக் கொள்வதிலேதாம் இன்பம் வருகிறது.'' [10]

> ''இயன்ற அளவு பெரும்பான்மையினருக்கு இயன்ற அளவு உச்ச அளவு நன்மை செய்வது என்ற பயன்பாட்டுக் கொள்கைக்கு அஹிம்சைவாதி ஆதரவு தரமுடியாது. 'எல்லோருக்கும் உச்ச அளவு நன்மை' என்ற குறிக்கோளொடு பாடுபட்டு, அந்த வழியில் குறிக்கோளை அடைவதற்காகத் தன் உயிரையே பலியிடுபவன் அஹிம்சைவாதி. பிறர் வாழட்டும் என்பதற்காகத் தன் உயிரை விடவும் தயாராக இருப்பான்....'' [11]

தமக்கென்று வகுத்துக்கொண்ட குறிக்கோள் வாழ்க்கையால் மபொசி எவ்வாறு இடருற்றார் என்பதையும் அவர் வாயிலாகவே அறிவோம் :

> 'நன்கு யோசித்தபின்பு என் தந்தையையும் தம்பியையும் மதுத் தொழிலிருந்து மீட்டுவிட முடிவெடுத்தேன். என் அன்னையார் எனது முடிவைப் பூரணமாக வரவேற்றார். எனக்கு வந்த மொட்டைக் கடிதங்களை என் அன்னையாரிடம் காட்டிக் கண் கலங்கினேன். அதனால்

10. காந்தியடிகள் : Selections from Gandhi - பக். 18
11. ஷை பக். 38-39

என் புகழுக்குக் களங்கம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக என் அன்னையார் குடும்பத்தையே பட்டினியில் ஆழ்த்தத் துணிந்து, தந்தையையும் தம்பியையும் மதுத் தொழிலை விட்டுவிடும்படி செய்தார்......''

''என் தந்தையையும் தம்பியையும் குலத்தொழிலிலிருந்து மீட்டதால் பொறாமையாளர் தூற்றுதலிலிருந்து என்னளவில் நான் தப்பினேனென்றாலும், குடும்ப வாழ்க்கையிலே பயங்கரத் துன்பங்கள் என்னைச் சூழ்ந்து கொண்டன. நான் பெற்று வந்த பதினான்கு ரூபாய்ச் சம்பளத்தைக் கொண்டுதான் குடும்பம் முழுவதும் வாழ வேண்டியிருந்தது.... தம்பியும் நானும் தேடிய வருவாய் குடும்பத் தேவைக்குப் போதுமானதாயிருக்கவில்லை. நான், அன்னையார், தந்தையார், தம்பி, தங்கை, எங்களுடனிருந்த பாட்டியார் ஆகிய அறுவர் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. ஒரு வேளை மட்டுமே-அரை வயிறு மட்டுமே உண்டு வாழ்வதற்குத்தான் எங்கள் வருவாய் போதுமானதாக இருந்தது... என் சுற்றத்தார் என்மனம் நோகும்படியாக என்னை வசைபாடுவார்கள். சுய சாதியினரால் குலத் துரோகியாக வருணிக்கப்பட்ட நிலையிலே, சுற்றத்தாரோ குடும்பத்தையே கெடுக்கப் பிறந்தவனாக என்மீது குற்றம் சாட்டினர்.''[12]

ஆக, அரைப் பட்டினி வாழ்வும், குலத் துரோகப் பட்டமும், குடும்பத்தையே கெடுக்கவந்தாகப் பழியும் சுமந்தார் ம பொ சி. ஆயினும், உற்ற நோய் நோன்றல் என்ற இலக்கணம் கொண்ட தவ நெறியிலிருந்து பிறழவில்லை. இவ்வாறு காந்திய நெறி பேணிய அவர் ஆளுமைக்கு உறுதி அருளியசூழலை-ஒத்துழைப்பும் உறுதுணையும் அருளிய சூழலை - ம பொ சி மறக்கவில்லை. மபொசி வாழ்ந்த 'மனை'யிலேயே கிராமணிகள் குடும்பத்தவர் இருந்தனர்; அக்கம் பக்கத்திலும் கள்ளிறக்கும் தொழிலாளர் குடும்பங்கள் நிறைய இருந்தன. இவ்வாறு 'குடும்பச் சூழ்நிலைக்கு முற்றிலும் விரோதமான பணியில் ஈடுபட்டவருக்கு ஆதரவும் ஊக்கமும் எங்கே கிடைத்தன?

''நான் வடசென்னை மறியில் கமிட்டியின் செயலாளனாக இருந்துகொண்டு, நேராக மறியலிலும் ஈடுபட்டேன். என் பெற்றோர் என்னைத் தடுக்கவில்லை. மாறாக, பெருமைக்குரிய ஒரு புனிதப் பணியில் நான்

12. மபொசி : எனது போராட்டம் - பக். 59

> சுடுபடுகிறேனென்ற உண்மையை உணர்ந்து என்னை உற்சாகப் படுத்தினர்.''[13]

இந்தப் புனிதப் பணி காரணமாக மபொசி யின் குடும்பம் குடியிருந்த வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டது. குடும்பம் வெளியேறியதே தவிரக் குறிக்கோள் வெளியேறவில்லை! சூழ்நிலை தொல்லை தருமானால் உயிர்க் கொள்கையையே அடகு வைக்கவும் அடியோடு கைவிடவும் தயங்காதவர்களைக் கண்டுப் பழகிப் போனவர்களுக்கு 'மபொசி என்ற தத்துவம்'[14] புதிர் நிறைந்ததாகத்தான் இருக்கும், குப்பத்திலிருந்து வெளியேறிச் சேரிக் குடிசையைப் புகலிடமாகக் கொண்டது, கொள்கைச் செம்மலின் குடும்பம். அங்கே அமைந்த வாழ்க்கை :

> ''சேரியில் நாங்கள் குடியிருந்த குடிசைபடுமோசமானது' கூறை பழுதுபட்டுக் கிடந்ததால், மழை நேரத்தில் வீட்டுக்குள் இருக்க முடியாது. வீட்டினுள் தண்ணீர் நிறைந்து விடும். குடிக்கூலி யில்லாமல் கிடைத்த வீடு தானே! ஓலைக் குடிசையிலே - அதிலும் சேரியிலே குடியிருப்போர் படும் இன்னல்களை அந்நாளில் நான் அனுபவத்தில் கண்டேன். மழை பெய்யும் இரவுகளிலே சிவ ராத்திரி விரதம்தான். எங்களிலே யாருமே உறங்க முடியாது. பகல் நேரத்தில் மழை பெய்தால், வேறு யார் வீட்டிலேனும் ஒண்டிக் கொள்வோம். இரவில் பெய்தால் என்ன செய்வது? அந்நாளில் என் தங்கை வயதுக்கு வந்திருந்தது. எனக்குக் கிடைத்த மாத வருவாய் ரூபாய் பதினான்கைக் கொண்டுதான் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்ததென்பதை மீண்டும் நினைப்பூட்டுகிறேன்.''[15]

தெரியாத்தனமாக உணவகத்துக்குள்ளே நுழைந்தவேகத்திலேயே வெளி வந்தாலே ஐந்து ரூபாய் ஆறு ரூபாய் அழுகிறோம். இது நம் காலத்து 'வளம்'. நமக்கு மபொசியின் இளம்பருவ வாழ்வில் அரைப் பட்டினியாகச் 'சாப்பிட்ட' செய்தி சீரணமாவது கடினம்தான்- 'அந்தக் காலத்திலே அரிசியெல்லாம் மூட்டைமூட்டையாக மலிவாகக் கிடைக்கும் ஐயா' என்று வாயளப்பவர்கள் கூடப் 'பதினான்கு ரூபாய் மாத வருமானத்தில் ஆறு பேரா' என்று நினைத்துப் பார்த்தால் வாயை மூடிக்கொள்வார்கள். இவ்வளவு தொல்லையும் எதற்காக மபொசி ஏற்றார்?

---

13. ஷை பக். 57
14. சிதம்பரநாதமுதலியார், டி. கே.-(மபொசி மணிவிழா மலர் பக். 17)
15. மபொசி: எனது போராட்டம் - பக். 67

''இவ்வளவு தொல்லைகளும் எனக்கிருந்த தேச பக்தியின்-காந்தி பக்தியின் விளைவுகளாகும்.''[16]

கொண்ட குறிக்கோளிலே உறுதி - இடர்கள் அடுக்கிவரினும் தளராத உறுதி. இது மபொசியின் ஆளுமை; காந்திய அஹிம்சைத் தத்துவம் உருவாக்கிய ஆளுமை. ஆம், எதையும் தாங்கும் இதயம்- சீர்மைக்குச் சிறப்பு நல்கும் குறிக்கோளுக்காக எதையும் தாங்கும் இதயம் மபொசியின் ஆளுமை.

## தனித்தன்மை

'ஆளுமை' என்னும் போது, அஃது அவரவர்க்கே உள்ளத் தனித்தன்மையால் அமைவது என்பதையும் நம் நினைவில் கொள்ள வேண்டும். காந்தியடிகளின் அஹிம்சை வழிப்பட்ட குறிக்கோளை ஏற்றுப் பொது வாழ்விலே ஈடுபட்டு, பெருமைக் குரிய நம் நாட்டு விடுதலை வேள்வியிலே தம்மை ஒப்படைத்துக் கொண்டவர்கள் நூறாயிரக் கணக்கானவர்கள்; வேள்வியில் கலவாவிடினும் புறத்தே நின்று காந்தியம் பேணிய பெரியோர்களும் குறைந்த எண்ணிக்கையின ரல்லர். அத்துணை நூறாயிரக் கணக்கானவர்களிடையே மபொசி போன்ற மிக மிகச் சிலரே தெறிப்பான ஆளுமை உடையோராக ஒளிர்கின்றனர். இத்தகைய தெறிப்பான தோற்றத்துக்கு - புகழொடு பொலிந்து தோன்றும் தோற்றத்துக்கு - தனித்தன்மையே காரணம் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

### எல்லைப் போர்

மபொசியின் தனித்தன்மையைக் காட்டுதற்கு அவர்தம் வாழ்விலும் வாக்கிலுமிருந்த சான்றுகள் பற்பல தரலாம் பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். அந்த உத்தியை மேற்கொண்டு 7-4-85ல் வெளிவந்த 'செங்கோல்' இதழைப் 'பதம்' பார்த்து, குமரி கொண்டாரின் தனித்தன்மையை அறிய முயல்வோம்.

தமிழகத்துக்கு வரலாற்று வழிப்பட்ட எல்லைகளை மீட்பதற்கு மபொசி ஆற்றியபணி நன்றியுள்ள தமிழினத்தவரால் மறக்க முடியாத ஒன்று; என்றென்றும் போற்றிச் சிறப்பிக்க வேண்டிய திருப்பணி. மற்ற மாநிலங்களிலும் எல்லைப் போராட்டங்கள் நடந்தன, இன்னமும் கூட நடக்கின்றன. அதுபோல்

16. ஷி

தமிழகத்தில் எல்லைப் போராட்டம் நடந்தது. இதிலென்ன மபொசியின் தனித்தன்மை!' - என்று நம்மிடையே சிலர் இன்றும் தடை எழுப்பக் கூடும். அவர்களெல்லாம் வரலாற்றை மறந்த வர்கள் அல்லது வேறு பயன் கருதி மறைப்பவர்கள்.

அங்கிங்கெனாதபடி பாரத நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சி யின் செல்வாக்கின் கீழ் இருந்த காலம் அது; விடுதலை கண்ட பெருமைக்குரிய இயக்கத்தினர் பதவி ஏற்று ஆட்சி புரிவதிலே வியப்புக்கோ வேதனைக்கோ இடமில்லை; அதுதான் எதிர்பார்க் கக் கூடியது, நடக்க வேண்டியது, நடந்தது. மாநிலங்களிடையே எல்லைச் சிக்கலும் போராட்டமும் எழுந்தன-பல மாநிலங்களிலே மொழிவாரி மாநில அமைப்பும், அது காரணமாக எல்லைப் பூச லும் எழுந்தன. மைய அரசு ஆணைக் குழு (கமிஷன்) அமைத்தது. ஒருவாறு அறிக்கையும் வெளிவந்தது. இந்தக் கட்டத்தில் நிகழ்ந் தவற்றை ஒரு கட்டுரைத் தொடரில் விரித்துரைக்கிறார் மபொசி; அத்தொடரின் ஒரு பகுதி 7-4-85 'செங்கோல்' இதழில் வெளிவந் துள்ளது :

> ''காங்கிரஸ் காரியக் கமிட்டி நியமித்த நால்வர் குழு செய்த சிறு திருத்தங்களுடன் பஸல் அலி கமிஷன் அறிக்கையைத் தான் அங்கீகரித்துக் கொண்டதாக மத்திய அரசு அதிகார பூர்வமாக அறிவித்தது.''[17]

ஆணைக் குழுவின் அறிக்கை- அதன் மேல் மையத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஆளுங் கட்சி நியமித்த குழுவின் திருத்தங் கள்... இவற்றை ஏற்று,ஆசியசோதி நேருவின் ஆட்சி ஆணைபிறப் பித்தது. மக்களாட்சிக்கு மதிப்பளிக்கும் இந்நாட்டிலே அந்த ஆணை அப்படியே ஏற்றுக் கொள்ளப்படவில்லை; எதிர்ப்புகள் தோன்றின. எதிர்ப்பும் கிளர்ச்சியும் எங்கெங்கே தோன்றின? மபொசி எழுதுகிறார் :

> ''இதனால், மாநிலந்தோறும் கிளர்ச்சி தோன்றியது. தென் திருவிதாங்கூரைத் தமிழகத்திற்கு வழங்குவதை எதிர்த்து அரசு போராடப் போவதாகத் திரு - கொச்சி முதல்வர் பனம்பள்ளி கோவிந்தமேனன் அறிக்கை விட்டார்.''

பனம்பள்ளி கோவிந்த மேனனின் மாநில அரசு, காங்கிரஸ் கட்சி அரசே ஆயினும், தென் திருவிதாங்கூர்ப் பகுதியைத் தமிழகத் திற்கு 'வழங்குவதை எதிர்த்து, மைய அரசுக்கு எதிராகக்

17 'செங்கோல்' 7-4-85 இதழ் - பக். 3

கிளர்ச்சி செய்யப் போவதாக அறிவித்தது. அந்த மேனன் கிளர்ச்சிக்கு ஆதரவாகத் திரு. வி. பி. மேனனும் திரு. வி. கே. கிருஷ்ண மேனனும் வெளிப்படையாகவே அறிக்கை விட்டனர். இந்த இரண்டு மேனன்களையும் குறிப்பிடும்போது,

> ''மத்திய அரசிடமும் பிரதமர் நேருஜியிடமும் நெருங்கிய செல்வாக்குப்''[18]

பெற்றிருந்தவர்கள் என வரைகிறார் ம பொ சி. உண்மைதான் இனவழிக் கிளர்ச்சி என்றால், எவரையும் எதிர்த்து அணி சேர்வதில் மற்ற மாநிலத்தவர் தயங்குவதில்லை. கேரளத்தில் மட்டுமன்றி, ஆந்திரத்திலும் மகாராட்டிரத்திலும் மைய அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய மாநில ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களே முனைந்து கிளர்ந்தனர்.

> ''தெலுங்கு மொழி வழங்கும் பிரதேசத்தை 'ஆந்திரம்' 'ஐதராபாத்' என இரு வேறு மாநிலங்களாகச் செய்வதை ஆந்திர மாநில அரசு எதிர்த்தது. ஆந்திர முதல்வர் திரு. என். சஞ்சீவிரெட்டி மத்திய அரசைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார்.''
>
> ''பம்பாய் மாநிலத்தை மொழிவாரி பிரித்து, 'மகாராஷ்டிரம்', 'குஜராத்' ஆகிய மாநிலங்களைப் படைக்க மறுத்ததை எதிர்த்தும், மராத்தி மொழி வழங்கும் விதர்பால பகுதியை மத்தியப் பிரதேசத்திலிருந்து பிரித்தெடுத்து மகாராஷ்டிரத்தில் சேர்ப்பதற்குப் பதிலாக அதனைத் தனிமாநிலமாக்குவதை எதிர்த்தும் பம்பாய் மாகாண அரசின் முதல்வர் போர்க்கொடி தூக்கினார்.''[19]

இப்படிப் போர்க்கொடி தூக்கிக் கிளர்ச்சி செய்தவர்களெல்லாரும் காங்கிரஸ் கட்சியினரே; ஆயினும், கட்சிக் கட்டுப்பாட்டை விட மொழிவழி இன உணர்வுக்கு அவர்கள் முதலிடம் கொடுத்தனர். தமிழகம் மட்டும் அன்றும் இந்த உணர்வுக்கு—நெறிப்பட்ட அறத்துக்கு முரண்படாத இந்த உணர்வுக்கு உரிய மதிப்பு அளிக்கவில்லை. ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சியினர். பிற மாநில இனத்தவர்போல் உரிமைக்குக் குரல் கொடுக்கவில்லை என்பது மட்டுமல்லாமல், அத்தகைய இன உணர்வு தேசிய

18. ஷை
19. ஷை

நீரோட்டத்துக்கு முரண்பட்டது என்று பேசினர்; அதற்குமேலும் இன வழி உரிமைக் குரல் என்பது பிரிவினை வாதமே என்று முணு முணுக்கவும் தயங்கவில்லை.

தேசிய உணர்வின் கனிவான வாழ்வும் பிரிவினைவாதத்தின் ஆலகாலமுமாக இன்றுபோல் அன்றும் திகழ்ந்த மபொசியின் தமிழரசுக் கழகம் மட்டுமே தென்திருவிதாங்கூர், தேவிகுளம் பீர்மேடு, செங்கோட்டைத் தாலுகா முதலிய பகுதிகள் பற்றிக் குரல் கொடுத்துக் கிளர்ச்சியில் இறங்கிற்று. மாநிலத்தில் ஆளும் கட்சியும் மைய அரசின் ஆளும் கட்சியுமாக விளங்கிய காங்கிரசுக்கு—உலகம் போற்றிய மனிதகுல மாணிக்கம் நேருவுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் மபொசி ஒருவரே. அவருடைய கழகத்தின் அளவும் ஆற்றலும் மிகமிகச் சுருக்கமே; யாவரும் அறிந்திருந்த உண்மை இது. தொண்டர் படையோ—தொகை பெருக்கும் நிதியோ குறிப்பிடத் தகுந்த அளவில் பெறாத 'இருசப்ப கிராமணித் தெரு எலும்புக்கூடு' தான் உரிமைக்குக் குரல் கொடுத்தது.

> ''தமிழர் மிகுதியாக வாழும் தேவிகுளம் பீர்மேடு தாலுக்காக்களைக் கேரளத்திற்கே உரிமையாக்கியதை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட முடிவெடுத்துத் தமிழரசுக் கழகச் செயற்குழு அறிவித்தது. பஸல் அலி கமிஷன், திரு—கொச்சியிலிருந்த செங்கோட்டைத் தாலூக்கா முழுவதையும் தமிழகத்தோடு இணைத்து விடப் பரிந்துரைத்தது. ஆனால், மத்திய அரசோ, செங்கோட்டைத் தாலூக்காவைத் துண்டாடி, அதன் மேற்குப் பகுதியை—அதாவது, வனவளமுடைய மலைப் பகுதியைக் கேரளத்தில் விட்டுவைக்கப் போவதாக அறிவித்தது. இது கைக்கெட்டியதும் வாய்க்கு எட்ட வில்லை என்ற பழமொழிப்படியாயிற்று.''[20]

குறைந்தபட்சம் பஸல் அலி கமிஷனின் பரிந்துரைப்படியாவது செயல்படுமாறு மாநிலப் பொறுப்பிலிருந்தவர்கள் குரல் கொடுத்திருக்கலாம். 'மேடாவது பள்ளமாவது எல்லாம் இந்தியாவில் தானே இருக்கிறது' என்ற பரந்த நோக்கிலே வாய்வாளாண்மை மேற்கொண்டது பொறுப்பிலிருந்த கூட்டம்; தமிழரசுக் கழகத்தின் முயற்சிகளுக்கு இயன்ற அளவு மறைமுகமாகவும் நேராகவும் பல முட்டுக்கட்டைகளையும் இடுவதற்குத் தயங்கவில்லை.

20. ஷை

**காந்தியத்தின் குரல்: திண்மை**

தேருக்கு அச்சாணி சிறியதுதான். ஆனால், அதன் தேவை இயக்கத்தில்தான் தெரியும். கட்டிடத்தின் கடைகால் வெளியே தெரியாது; ஆனால், அதன் உறுதிதான் கட்டிடத்துக்கே வலிமை. ஆம், மபொசியின் கழகம் சிறியதுதான்—அச்சாணி போல, சத்தியத்தின் ஆற்றல் விளம்பர உலகிலே ஆரவாரமாகத் தெரிவதில்லை; ஆனால், சத்தியம் இன்றேல் சமுதாயம் இல்லை. பொங்கி எழும்போது அதன் விக்கிரமப் பெருந்தோற்றம் பொய்ம்மைக் கானத்தை விறகாக்கி முடிக்கும்; பொங்கி எழாத நிலையிலே—அடக்கமான நிலையிலும் சமுதாய அமைப்பு என்னும் மாலையின் நூல்போலத் தன்னை மறைத்துக் கொண்டிருக்கும்.

மபொசியின் ஆளுமை அச்சாணி போலவும் சத்தியக் கடைகால் போலவும் அமைந்தது. வாய்மைக்கு ஊட்டமாகக் குரல் கொடுக்க வேண்டிய நேரத்தில் கட்டாயம் குரல் கொடுப்பார். இன்னாரை எதிர்த்துக் குரல் கொடுக்கவேண்டியிருக்கிறதே என்ற தயக்கத்துக்கே இடம் இராது. ஏனெனில், அது காந்தியக் குரல். கதிரவன் மறையாத பிரிட்டிஷ் பேரரசில் அந்தச் சூரியனுக்கு மேற்கு வானத்தை இனங்கண்டு சுட்டியவர் அந்த ‘அரை நிர்வாணப் பக்கிரி; கை ராட்டையும் முரட்டுக் கதருமா பீரங்கியை எதிர்த்து நிற்கும் என்றனர். ஆனால், எதிர்த்து நின்றதுமட்டுமல்ல—பிரிட்டனின் கரமே யூனியன் ஜாக்கை இறக்கி, மூவண்ணக் கொடியை ஏற்றிவிட்டு விலகியது. ‘‘ஓஹோ! பிரிட்டிஷ் பேரரசு எங்கே! ஏழை இந்தியாவின் எளிய தலைமை எங்கே!’’ என்று காந்தியம் தயங்கவில்லையே! அதே காந்தியத்தின் தமிழகப் பதிப்புத்தான் மபொசியின் ஆளுமை!

மூதறிஞர் இராஜாஜியே களத்தில் இறங்கி மபொசியின் சத்திய ஆளுமைக்கு எதிரணி கூட்டினார். அந்தப் பெருந்தகையின் மாண்பினை நான் குறைத்துவிடவில்லை; குறைத்துவிட முடியாது. ஆயினும், ராஜதந்திரம்சிலவேளைகளில்—ஏன் பல வேளைகளில்—தவறு செய்யும்; காந்தியம் ‘மூளி’ யாக்கப்பட்டாலும்—சத்திய ஆளுமையிலிருந்து நழுவாது. மொழிவாரி இன உணர்ச்சியானது காட்டுமிராண்டிகளின் நாகரிகம். அதை நான் முழுமூச்சுடன் எதிர்த்துப் போராடுவேன். அத்தகைய காட்டுமிராண்டிக் கொள்கையுடையவர்களில் யாரேனும் இந்தக் கூட்டத்தில் இருந்தால், இதனை ஒரு சவாலாக அவர்கள் ஏற்கட்டும்’’ என்று பேசினார் மூதறிஞர். சிவஞானச் சிங்கம் அந்தக் கூட்டத்தில் இருந்தது; அறைகூவலை ஏற்றது...முடிவு

என்ன? மொழிவாரித் திட்டத்துக்கு மாற்றாக ஆசிய சோதியும் மூதறிஞரும் உருவாக்க முனைந்த தட்சிணப் பிரதேசத் திட்டம் போன திசை தெரியாமல் போய்விட்டது.

மபொசி என்ற மெலிந்த உருவமா, அல்லது அவரினும் மெலிந்த தமிழரசுக் கழகமா—இந்த நிலை உருவாகக் காரணம்? இரண்டும் இல்லை. மபொசியின் சத்திய வலிமை—அந்த வலிமையில் வயிரத்தினும் உரமேறிய ஆளுமைதான் காரணம்.

எந்தச் சமயத்தில் என்ன பிரச்சினை உருவாகும் என்பதைத் திட்டவட்டமாகக் கணித்தறிவார். உருவாகும் பிரச்சினையை—உருவாக்கும் பிரச்சினையை அல்ல—காலச் சூழலில் தானே உருவாகித் திரளும் பிரச்சினையைத் தம் சத்தியக் கரத்தில் எடுத்து, அஹிம்சை நெறியிலே சென்று வாகை சூடுவது அவர் ஆளுமைக்கு வழக்கம்.

**மோதல்: ஆயினும் எதிரிகளாக வேண்டியதில்லை**

இராஜாஜி 'சவால்' விட்டதும், அது கேட்ட மபொசி மனம் நொந்து செங்கோலில் எழுதியதோடு, மூதறிஞர் அக்கட்டுரையைப் படித்துவிட்டு மபொசிக்குக் கடிதம் எழுதியதும் நீரில் கிழித்த வடுப்போலச் சான்றோர் சினம் மாறும் என்பதற்கு அருமைச் சான்றுகள். கருத்து வேறுபாடு கொண்டு மோதுவதால் வாழ்க்கை எதிரிகளாகிவிட வேண்டியதில்லை என்ற உறவுத் தத்துவத்துக்கு மூதறிஞர்—சிலம்புச் செல்வர் தொடர்பு நல்ல எடுத்துக்காட்டாகும்.

மூதறிஞர் தொடர்பு மபொசியின் ஆளுமையை எடுத்துக் காட்டுதற்குச் சிறந்த சான்று; ஆதலின், அதுபற்றி மேலும் விளக்கம் தருவது பொருத்தமாக இருக்கும்.

''அரசியலில் எனது தந்தையாகக் கருதிவரும் ராஜாஜி''[21] என்று மதிப்போடு மபொசி குறிப்பிட்டிருக்கிறார். இவ்விருவரிடையே நிலவிய அன்பின் ஆழத்தைப் பின்வரும் பகுதி தெளிவாக்கும். மபொசியின் தன்வரலாறாகிய 'எனது போராட்டம்' என்ற நூலிலிருந்து:

> ''......எதிர்பாராத வகையில் ராஜாஜி அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. ராயபுரம் ராஜாஜி அரிசன சேவா சங்கத்தின் ஆண்டுவிழா ராஜாஜியின் தலைமையிலே

21. மபொசி : எனது போராட்டம்-பக். 284

நடைபெற்றது. அதிலே பேசுவதற்கு நான் அழைக்கப் பட்டிருந்தேன். விழாவன்று நானும் ராஜாஜியும் மேடையில் சந்தித்தோம். அவரைக் கண்டதுமே கை கூப்பி வணங்கினேன். அவர் தன்னுடைய பழைய நண்பனாக என்னைக் கருதாமல் அலட்சியமாக இருந்து விட்டார். அவரது போக்கு எனக்கு வெட்கத்தையும் வேதனையையும் தந்தது. பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவாக ராஜாஜி பிரச்சாரம் தொடங்கியபோது, மதுரையில் தேசிய நாடார் மாநாட்டிலே அவருக்கும் எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதனை முன்னரே கூறி யிருக்கிறேன். அந்த நிகழ்ச்சிக்குப் பின்—சற்றேறக் குறைய இரண்டாண்டுகளுக்குப் பின்பு—இப்போதுதான் நாங்கள் முதன் முதலாகச் சந்தித்தோம். அதனால் பழைய கோபம் காரணமாக அவர் என்னை அலட்சியப் படுத்தியிருக்கலாம் என்று நினைத்து அமைதி கொண்டு விட்டேன். தலைமை வகித்த ராஜாஜி, பேச்சாளர் களை ஒருவர்பின் ஒருவராக அழைத்துப் பேசவைத்த பின்னர், எனது முறை வந்தபோது, சங்கச் செயலாள ரைப் பார்த்து, 'கிராமணியார் இன்னும் வரவில்லையா' என்று கேட்டார். நான் அவரது அருகில்தான் நாற்காலி யில் அமர்ந்திருந்தேன். சங்கச் செயலாளர் என்னைக் காட்டி, 'கிராமணியார் இதோ இருக்கிறாரே' என்றார்.

அப்போதுதான் அவர் என்னைக் காட்டி, 'இவரா கிராமணி?' என்று வியப்புடன் கேட்டார். பின்னர் என்னைப் பார்த்து, 'ஏன் இப்படி ஆனீர்கள்? உடம் புக்கு என்னநேர்ந்தது?' என்று நாத் தழுதழுக்கத் துக்கம் தோய்ந்த குரலில் என்னைக் கேட்டார். சிறையில் நோயுற்று அதன் விளைவாக 31 பவுண்டு சதையை இழந்த எனது பரிதாபகரமான வரலாற்றை அரசியலில் யான் எனது தந்தையாகக் கருதிவரும் ராஜாஜியிடம் மிகுந்த ஆற்றாமையோடு கூறினேன். அவர் எனக்கு ஆறுதல் மொழிகள் கூறினார். இந்தச் சந்திப்புக்குப் பின்னர் ராஜாஜி எனது உடல்நலத்தில் அக்கறை செலுத்தினார். தம்முடைய நண்பர் டாக்டர் சீனிவாசன் அவர்களிடம் சொல்லி, பெரிய மருத்துவ மனையில் என்னைச் சேர்த்து, அங்கு எனக்குச் சிகிச்சை அளிக்கச் செய்தார்.''[22]

---

22. ஷை பக். 283-4

தந்தைக்கு உரிய மதிப்பினைச் சிலம்புச் செல்வர்பால் பெற்ற மூதறிஞர், பாரத நாட்டளவில் மட்டுமன்றி உலக அரங்கிலுமே தம் அறிவாற்றல்களால் சிறப்பிடம் பெற்றவர் என்பதை உலகு நன்கு அறியும். கறங்கெனச் சுழலும் காலச் சக்கரத்தில் மேலது கீழா, கீழது மேலா வரும் நிலை உண்டுதானே! அரசியல் அரங்கிலே பிறர் ஆதரவு வேண்டாத ஆளுமைத் திறன்[23] மூதறிஞர்க்கு உண்டெனினும், பல சூழற் காரணங்களால் அவரே ஒதுங்கியிருந்த காலம் உண்டென்பதை நாடறியும். காங்கிரஸ் அமைப்பினை 'விடுத்து', ஒதுங்கியிருந்த மூதறிஞரை மீண்டும் காங்கிரஸ் மேடைக்கு 1945 ஏப்ரல் திங்களில் மபொசியே கொண்டுவந்தார். காங்கிரஸ் அழைப்பிலும் இயக்கத்திலும் இராஜாஜி இடம் பெற்றுவிடக் கூடாது என்ற மிக வலிமையான சூழ்நிலை அந்தக் கால கட்டத்தில் நிலவியது. தமிழக அரசியல் வரலாற்றிலே பேரிடம் பெற்ற அந்தப் பூசற்காலத்தில் மூதறிஞர்க்கு ஆதரவாகப் பெருவலிமை ஊட்டிய பணியில் மபொசி ஈடுபட்டிருந்தார். அதனால் சிலம்புச் செல்வர் பட்ட அல்லல்கள், இழப்புகள், எதிர்ப்புகள் கொஞ்சநஞ்சமல்ல.இராஜாஜியைப்பழித்ததைவிடச் சில நிலைகளில் சிலம்புச் செல்வரைத் தாக்கிய கடுமையும் கொடுமையும் மாநில அரசியல் வரலாற்றிலே பதியத்தக்கன. 1945 அக்டோபர் மாதத்தில் மபொசியின் உயிருக்கே அபாயம் ஏற்பட்ட நிலை உண்டு. அப்போது மூதறிஞர் ஒரு கூட்டத்தில் பேசினார்.

> ''என் தலைமையை எதிர்ப்பவர்கள் என்னைவிட அதிகமாகக் கிராமணியாரையே தாக்குகிறார்கள். அதற்குக் காரணமுண்டு. கிராமணியார் வீர அபிமன்யு போன்றவர். என்னால் உடைக்க முடியாத எதிரிகளின் வியூகத்தை உடைத்து அவர் என்னை உள்ளே அழைத்துச் செல்கிறார். அதனால், என்னை எதிர்ப்பவர்கள் அவர்மீது அதிகமாக ஆத்திரப்படுகிறார்கள். என்னைத் தான் 'ஆகஸ்டுத் துரோகி' என்கிறார்கள். கிராமணியார் ஆகஸ்டுத் தியாகியாயிற்றே! அவரது உடம்பே சொல்லுமே, அவர் 'ஆகஸ்டுத் தியாகி' என்று''[24]

---

23. ஷை பக். 308இல் 'கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன்' என்ற கம்ப ராமாயணத் தொடரை ராஜாஜிக்கு இணைத்துக் கூறுவார் மபொசி

24. ஷை பக். 317-8

போர்க் களத்திலே தம் அரசியல் வாழ்வுக்கு மபொசி எந்த நிலையிலிருந்து உதவியிருக்கிறார் என்பதை மூதறிஞரே உணர்ந்து உணர்த்திய பேச்சு இது.

இருவரிடையே இப்படி உறவு இருந்தபோதிலும்—போர்க் களத்தில் வாழ்வா சாவா என்ற சூழ்நிலையில் உருவான உறவு இருந்தபோதிலும்—குறிக்கோளுக்கு எதிர்ப்பு என்ற நிலையில் சத்திய ஆளுமை எவ்வாறு செயல்படும் என்பதைத் தட்சிணப் பிரதேச எதிர்ப்பிலே நாம் உணரமுடிகிறது. உயிராகப் பதிந்துவிட்ட மொழிவழி இன உணர்வுக்கு எதிராக மூதறிஞர் குரல் கொடுத்துச் 'சவால்' விட்டபோது 'அரசியலில் தந்தையாயிற்றே எனச் சிலம்புச் செல்வர் தயங்கவில்லை.[25] இது மபொசியின் சத்திய ஆளுமைத் திறம்.

இராஜாஜியை ஆதரித்து, அவரை அரசியல் அரங்கிலே திரும்ப உலவ வைக்கப் பாடுபட்டதே தமிழ் இன நலத்துக்குத் தேவை என்று மபொசி எண்ணியதால்தான்.

> "...அனுபவங்களை எல்லாம் நினைவில் கொண்டு, தமிழ் நாட்டின் நலன்களைக் கருதி நான் ராஜாஜியின் காங்கிரஸ் பிரவேசத்தை ஆதரித்தேன். திரு கரமராசருக்கு எதிராக அல்ல. ஆம்; ராஜாஜியை நான் ஆதரித்தது கோஷ்டி மனப்பான்மையாலல்ல; தமிழ் இன உணர்ச்சியால் என்பதனை மீண்டுமொருமுறை வலியுறுத்திக் கூறுகிறேன்."[26]

மபொசியின் இக்கூற்று அவர் ஆளுமைக்கு முத்திரை பதிப்பதாகும். ஆம், அரசியல் அரங்கின் சிறு(மைக்) குழு மனப்பான்

---

25. வடக்கெல்லைப் போராட்டத்தின்போது மாநில முதலமைச்சராக இருந்தார், மூதறிஞர். அப்போது அவருக்கு மபொசி எழுதிய ஒரு கடிதத்தில், "தாங்கள் என் தலைவர். அந்த வகையில் தங்கள் ஆணைக்குக் கட்டுப்பட நான் கடமைப்பட்டவன். ஆனால், தலைவர்கள் வருவார்கள், போவார்கள்; தமிழ்நாடு அப்படி வந்துபோகும் பொருளல்ல. என்றென்றும் நிலைத்திருக்கும் புனித பூமி. தலைவருக்குக் காட்டவேண்டிய மரியாதைக்காகத் தமிழகத்தின் எல்லைகளைப் பறிகொடுக்க என்னால் இயலாது"— என்று வரைந்திருப்பது இங்கே நினைவூட்டத் தக்கது.
26. மபொசி எனது போராட்டம்—பக்.304

மைக்கு அவர் இதயத்தில் இடமில்லை. தமிழினத்தின் நன்மைக்கு மூதறிஞர் உதவுபடியாயின் ஏற்பதும், அவரே அவ்வினத்தின் நலத்துக்குக் கேடுசூழ்வாராயின் எதிர்ப்பதும் மபொசியின் ஆளுமை இயல்பாகும்.

> "இப்படி ஒரு புறம் ராஜாஜி அரசை ஆதரிப்பதும், இன்னொரு புறம் கொள்கை வெற்றிக்காக அதனோடு போராடுவதுமாக இருந்தேன். லட்சியத்தை விலைக்கு விற்று நான் யாரிடமும் எதற்காகவும் எந்தக் காலத்திலும் சரணடைந்ததே இல்லை. கடந்த காலத்தில் மட்டுமல்ல; நிகழ்காலத்திலுந்தான். வருங்காலத்திலும் இந்தக் 'கற்பை'க் கடைப்பிடிப்பேனென்ற உறுதி எனக்குண்டு"[27]

கொண்ட கொள்கையை—குறிக்கோளை எவர்பொருட்டும் எக்காலத்தும் விட்டுக்கொடுப்பது செறிவான ஆளுமையாகாது; அந்த நொய்ம்மை சிலம்புச்செல்வர் அறியாத ஒன்று. அவர் உடலிலே நொய்ம்மை இருக்கலாம்; அவர் உருவாக்கிய அமைப்பிலே நொய்ம்மை இருக்கலாம்—ஆனால் அவருடைய உள்ளத்திலோ குறிக்கோள் நெறிப்பட்ட நடவடிக்கைகளிலோ நொய்ம்மை காணமுடியாது.

## திண்மையும் மென்மையும்

பண்பாடு

கொள்கை கோட்பாடுகளிலே உறுதி மிகுந்த அவருடைய ஆளுமையிலே செறிவார்ந்த திண்மை உண்டு என்பதால், அவர் தம் வாழ்விலே மென்மை இல்லை என்று சொல்லிவிட்டதாகக் கொள்ளவேண்டா. நொய்ம்மை வேறு; மென்மை வேறு.

> ஒண்ணுதற் கோஓ உடைந்ததே ஞாட்பினுள்
> நண்ணாரும் உட்குமென் பீடு[28]

என்ற குறளிலே திண்மை எது, மென்மை எது என்பதை வள்ளுவர் புலப்படுத்துகின்றார்.

பிராட்டியாரைச் சிறை எடுத்த இலங்கை காவலன் வெறுங் கையனாய்—ஆயுதங்கள் இழந்து வெறுங்கையனாய் நின்ற நிலை

27. ஷெ 602
28. குறள் 1088

யினைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் விளக்கும் காட்சி, தமிழ் இலக்கிய நாட்டம் உடைய எவரும் அறிந்த ஒன்று. இராவண னுக்கு அமைந்த அத்துணைப் படைக்கலங்களும் சுழன்றடிக்கும் காற்றிடைப்பட்ட பூளைப் பூப் போலச் சிதறிப் போயின; எத் கோடி யாராலும் வெலப்படா வீறெலாம் இழந்து வெறுங்கை நாற்றி நின்றனன் தசமுகன். அந்த நிலைக்கு அவனைக் கொணர்ந்தவன் இராமனே. ஒரே ஒரு கணை விடுத்துக் கயிலை எடுத்தவன் உயிரை எடுக்கவேண்டியதுதானே!

கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து[29]

என்றா இராமன் செயல்பட்டான்? இல்லையே! ஏன்? ஆண்மை எது என்பதை அறிந்தவன் இராமபிரான்; நயத்தக்க நாகரிகம் எது என்பதை அறிந்தவன் இராமபிரான்.

ஆள்ஐயா உனக்கு அமைந்தன
மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை
இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வா என நல்கினன்
நாகு இளங் கமுகின்
வாளை தாவுறு கோசல
நாடுடை வள்ளல்[30]

எதிரி என்பதால் இதயம் காய்ந்துவிடவேண்டுமென்பது நாகரிகம் ஆகாது; சான்றாண்மை நெறியும் ஆகாது.

தமிழக அரசியல் அரங்கிலே மபொசியின் செல்வாக்கு வளர்ந்துவிடக் கூடாது என்பதிலே பல்லாற்றானும் செயல்பட்ட வர் பெருந்தலைவர் காமராசர். பல்வகை இழப்புகளுக்கும் சீரழிவுகட்கும் காமராசரின் எதிர்ப்பே காரணமாயிருந்தது. தமிழக அரசியலில் கடந்த தலைமுறை வரலாற்றை அறிந்தவர் கள் இதனை மறந்திருக்க முடியாது. ஒளிவு மறைவு இன்றித்தம் வாழ்க்கை வரலாற்றிலே மபொசி அந்தந்த இடங்களில் இந்த நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால், காமராசரும் காங்கிரஸ் கட்சியும்1967இல்வீழ்ச்சி அடைந்தபோது மபொசியால் மகிழ்ச்சி கொள்ள முடியவில்லை. மூதறிஞர் இராஜாஜிகூட

29. குறள் 490
30. கம்பராமாயணம் : முதற் போர் புரி படலம்-255

மகிழ்ச்சியில் திளைத்தார்; அந்தத் திளைப்பு மபொசியிடம் இல்லை. கட்சி அடிப்படையில் களிப்புச் சூழ்ந்திருந்த நிலையில் மபொசி தேர்தலில் வெற்றி பெற்றிருந்த நிலையில், அவருடைய முகத்தைப் பார்த்த மூதறிஞர் இராஜாஜி, அவ்வை சண்முகத்திடம், ''சண்முகம், மபொசி முகத்தைப் பார்த்தீர்களா? 'வெற்றி பெற்றுவிட்டோமே' என்று கவலைப்படுகிறது'' என்று கூறியிருக்கிறார். இந்த அவல நிலையை—வெற்றி பெற்றும் கவலைப்பட்ட அவல நிலையை மபொசி விளக்குவதைக் காணலாம்:

> ''அண்ணாவையும் என்னையும் சைதைத் தொகுதியில் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்ட கலைஞர் கருணாநிதியையும் தோற்கடிப்பதே தேர்தல் களத்தில் த.நா.கா.வின் குறிக்கோளாக இருந்தது........தேர்தல் முடிவிலே பத்தாயிரம் வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றி அடைந்தேன்.''
>
> ''தி.நகர்த் தொகுதியின் முடிவு தெரிந்த சில மணி நேரங்களிலேயே வெளி மாவட்டங்களிலிருந்து காங்கிரசின் தோல்விச் செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிடைத்து வந்தன. விருதுநகர்த் தொகுதியில் திரு. காமராசர் தோற்றுவிட்டதாகவும் செய்தி கிடைத்தது. காங்கிரஸ் கட்சியின் தோல்வி நான் எதிர்பார்த்தது தான்—விரும்பியதுதான் என்றாலும், எதிர்பார்த்தது நடந்துவிட்டதென்ற செய்தி கிடைத்தபோது, ஏனோ என்னால் மகிழ்ச்சியடைய முடியவில்லை. நான் வாழ்ந்து, வளர்ந்த இடமல்லவா! இது என்னிடமுள்ள அரசியல் பலவீனமோ, என்னவோ!''[31]

இந்த நயத்தக்க நாகரிகத்தின் விளக்கம் மேலும் விரிகிறது.

> ''......திரு. காமராசரின் தோல்வி செய்தியைக் கேட்டபோது, அதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு எனது வெற்றிச் செய்தியைக் கேட்டதால் எனக்கேற்பட்டிருந்த மகிழ்ச்சி மறைந்து போய்விட்டது. இது, பலவீனமல்ல; பண்பாடு!''[32]

ஆம், மபொசியின் ஆளுமை எந்தச்சூழ்நிலையிலும் பண்பாட்டைவிட்டு இம்மியளவும் பிசகாது, பிசகாது. காமராசரின் தோல்வி

31. மபொசி : எனது போராட்டம் -பக்.977
32. ஷை

குறித்து மபொசி சொல்வதை நாகரிகம் வேண்டுபவர் குறித்துக்கொள்க:

> "நாட்டில் தலைவர்கள் தோன்றுவது அரிது. அதுவும் விடுதலைப் போராட்ட கால வேள்வித் தீயிலே புடம் போட்டு எடுக்கப்பட்ட திரு. காமராசர் போன்ற ஆற்றல் மிக்க தலைவர்கள் கிடைப்பது அரிதினும் அரிதாகும். அத்தகைய தலைவர்களை அவர்கள் ஆயுள் வரை மக்கள் போற்றிவர வேண்டும். கட்சிப் போராட்டங்கள்—சாதிப் பூசல்கள் தலைவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட அனுமதிக்கக் கூடாது. தேர்தல் களத்திலே, சரித்திர நாயகர்களாகி விட்ட தலைவர்கள் தோற்றுப் போகாதபடி அரசியல் கட்சிகள் பார்த்துக் கொள்ள வேண்டும்."[33]

நல்லறத்தின் மூர்த்தியாகிய இராமபிரானின் பண்பாடு—பாரதப் பண்பாடு மபொசியின் ஆளுமையில் இரண்டறக் கலந்திருக்கிறது என்பதற்கு இதனைவிடச் சிறந்த சான்று வேறு வேண்டியதில்லை.

தந்தையாருக்குத் தரும் மதிப்பை மூதறிஞர்க்குத் தந்தவர் மபொசி; அதனாலேயே அவர் சொன்னவற்றையெல்லாம்—எல்லா வேளைகளிலும் சிலம்புச்செல்வர் ஏற்றுக்கொண்டு செயல்பட்டவரில்லை. மொழிவழி மாநில அமைப்புக்கு எதிராக மூதறிஞர் செயல்பட்ட போது—இந்தியைப் பொதுமொழியாக்கும் மசோதாவை ஆளுநர் நாயக (கவர்னர் ஜெனரல்) நிலையில் அமர்ந்து கையொப்பமிட்டுச் சட்டமாக்கிய மூதறிஞர் இந்தி எதிர்ப்பாளராக ஆனதைக் குறிப்பிடும்போது—காங்கிரசையும் காமராசரையும் வீழத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு திமுக வோடு இணைந்த மூதறிஞர் பின்னே 'திமுக—சுதந்திராவின் அனிமூன் முடிந்துவிட்டது' என்று அறிவித்தபோது—'திமுக அமைச்சரவையில் அற நிலைய அமைச்சராக ஆகாதீர்கள், கல்வியமைச்சராக வேண்டுமெனக் கேளுங்கள்' என மூதறிஞர் அறிவுரை வழங்கியபோது...... இத்தகைய சூழ்நிலைகளில் மூதறிஞர் காட்டிய வழியிலே போகமுடியாமல் தம் மனச்சான்றின் வழியிலேயே போனதை 'எனது போராட்டம்' தெளிவாகப் புலப்படுத்துவதை அம்மாபெரும் நூலில் உரிய இடங்களிலே படித்து உணரலாம்.

---

33. ஷை. பக்.978

கண்ணீர் விட்டுக் கசிய வேண்டிய இடம் எது, கல்லைப் பிசைந்து கனியாக்கும் இடம் எது, குறிக்கோள் நெறியிலே கீறல் விழாமல், கொண்ட உறவு கெடாமல் பேண வேண்டிய இடம் எது, விட்டுக்கொடுப்பது என்ற போலித்தனத்தால் விழுமிய குறிக்கோளைப் பலிகொடுக்காமல் காப்பாற்ற வேண்டிய இடம் எது, எதிரணியின் சத்தியத்தை மனங்கொள்ள வேண்டிய இடம் எது, சற்றே கவனம் கெட்டால் மிக நெருங்கியவர்களாலும் சறுக்கல் ஏற்படக்கூடிய இடம் எது ......என்பதையெல்லாம் உணர்ந்து, எச்சரிக்கையோடு செயல்படுவது ம.பொ.சியின் ஆளுமை.

## ஆணவர் அல்லர்

மூதறிஞர் இராஜாஜி போன்ற ஞானச் செல்வர்கள், இராச தந்திரிகளின் அறிவுரைகளையும் நெறிமுறைகளையும் சிலம்புச் செல்வர் புறக்கணிப்பதுண்டு என்பதால், தாம் எண்ணுவதும் சொல்லுவதும் செய்வதுமே சரி எனப் பிடிவாதம் பிடிக்கும் ஆணவராக அவரைக் கணித்துவிட முடியாது.

தமிழரசுக் கழக மேடையிலேயே—அந்த மாநாடு நடந்த சூழலில் த.அ.க.வும் திராவிட இயக்கமும் மோதலில் ஈடுபட்டிருந்தன என்பதை அறிந்த நிலையிலும்—தமிழ் முனிவர் திரு.வி.க., "திராவிடர் கழகத்தாரை உற்சாகப்படுத்தும் உள் நோக்குடன் ஒன்றிரு கருத்துக்களைத் தெரிவித்தார்"[34] மேடையிலிருந்த காமராசர் உட்பட மாநாட்டுப் பிரதிநிதிகளும் திரு.வி.க.வின் பேச்சினால் வேதனை உற்றனர். மபொசியை மாநாட்டுத் தலைமைக்கு முன்மொழிந்த 'திரு. காமராசர், திரு.வி.க.வின் 'திராவிடப் பாணிப்' பேச்சைக் கேட்டு சினமுற்றிருந்தாராதலால், 'மொழிவாரி மாநிலக் கோரிக்கையைக் காங்கிரஸ் மகாசபையே நிறைவேற்றி வைக்கும். அதற்காக, கிராமணியார் தனி இயக்கம் நடத்தத் தேவையில்லை" என்றார். மொழிவழி இயக்கத்தைப் பிரிவினை இயக்கமென்றும் வருணித்துப் பேசினார்."[35]

தமிழரசுக் கழக மேடையில் திராவிட இயக்க உணர்வுக்குத் தூபமிடும் வகையில் திரு.வி.க.வும், மொழிவழி இயக்கத்தைப் பிரிவினை வாதமாகப் பழிக்கும் வகையில் காமராசரும் பேசிச்

---

34. ஷை பக்.445
35. ஷை பக்.446

சலசலப்பு உண்டாக்கியதைப் பிரதிநிதிகள் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. மாநாட்டுத் தலைமைப் பொறுப்பிலிருந்த மபொசிக்கு இக்கட்டான நிலை...... மபொசி எழுதுகிறார்.

> ''......எனது தலைமையுரையிலே இதனை நான் சமாளித்தாக வேண்டியிருந்தது........''
>
> ''திரு.வி.க.வைக் கண்டித்துப் பேசுவதென்பது என் மனத்துக்கு வேதனை தருவதாகும். அவரிடம் நான் எல்லையற்ற மரியாதை வைத்திருப்பவன். எனது வாழ்க்கையில் என் மரியாதைக்குரிய எத்தனையோ பெரியவர்களோடு நான் கருத்துப் போர் நடத்தியிருக்கிறேன். ஆனால், திரு.வி.க. அவர்களோடு கருத்துப் போர் நடத்தும்படி ஏற்பட்ட நேரங்களிலெல்லாம் சகிப்புத்தன்மை காட்டி அதைத் தவிர்த்திருக்கிறேன்.''
>
> ''......அவரைப் பற்றிப் பின்வருமாறு கூறினேன். 'திரு.வி.க. பெரும்புலவர். திருவாசகத்தை உள்ளத்திலே வைத்துப் போற்றும் உத்தமர். அவரைக் கட்சிக் கண்கொண்டு பார்ப்பது கூடாது. ஊனினைச் சுருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தமாய தேனினைப் பருகும் வண்டு நம் திரு. வி.க. வண்டானது மலரின் வேற்றுமைகளைப் பார்ப்பதில்லை; தேனிருக்கும் மலர்களிலே அமர்ந்துவிடும். அதுபோன்று திரு.வி.க தமிழர் கூடுமிடங்களுக்கெல்லாம்—அவர்கள் எந்தக் கட்சியினரானாலும் — சென்றுவிடுகிறார். கடலூர் சென்றாலும் அவர் சட்டை கறுப்பு நிறமாகவில்லை? எனவே, அவர் எங்கு போகிறார், எந்தக் கட்சியை ஆதரிக்கிறார் என்பது பற்றித் தமிழரசுக் கழகத்தார் கவலை கொள்ளவில்லை.''[36]

தமிழ்ச் சான்றாண்மை வண்டாகிய தமிழ் முனிவருக்கு இவ்வளவு போதும். 'சொல்லப் பயன்படுவர் சான்றோர்'[37] திருவாசகத் தொடரைச் சுட்டிக் காட்டிக் குறிப்பாகச் சொன்னால் தமிழ் முனிவர்க்குப் போதும். ஆனால், காமராசர் வாதங்களுக்கும்— அப்பட்டமான இராசதந்திர வாதங்களுக்கும் 'பதில்' சொல்ல வேண்டிய கட்டாயம் இருந்ததே! மபொசி இதை எப்படிச் சமாளித்தார்?:

---

36. ஷை

37. குறள் 1078

''இந்த அளவோடு திரு. வி. க. வை விட்டு, திரு. காமராசர் எனக்குக் கூறிய அறிவுரைகளுக்கு—அவரை அருகில் வைத்துக்கொண்டே பதிலளித்தேன்.''[38]

இந்த அளவோடு மபொசி நிறுத்தியிருந்தால் நூற்றுக்கணக்கான அரசியல் 'தலைவர்'களில் அவரும் ஒருவர் என்றே கணிக்க வேண்டியிருக்கும். மபொசியின் ஆளுமை தரத்தால் உயர்ந்தது.

இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல்[39]

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்[40]

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை[41]

என்ற குறள்நெறி வாழ்வு உருவாக்கிய ஆளுமை, தவறு நேரின் அதனை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளும். காமராசரின் 'அறிவுரை' களுக்குப் பதில் அளித்துப் பேசியதுபற்றி,

''......சிறிது கடுமையாகவே பதில் அளித்ததாக இப்போது நான் கருதுகிறேன். இந்த உணர்வு அப்போது எனக்கு ஏற்படவில்லை. மனச்சாட்சிப்படி பேசிவிட்டேன். கண்டிப்பாகப் பேசுவது வேறு; கடுமையாகப் பேசுவது வேறு. இந்த வேற்றுமை அப்போது எனக்கு விளங்கவில்லை.''[42]

என்று விளக்குகிறார் மபொசி. கனியிருப்பக் காய்கவர்ந்த நிலைமைக்காக—கண்டிப்பு என்ற நினைப்பிலே கடுமையாகப் பேசியதற்காக 27 ஆண்டுகள் கழித்தும் வருத்தம் தெரிவிக்கிறார்.

## வரலாற்றுணர்வு: நாட்டு வரலாறு

அரசியல் பொதுவாழ்விலே ஈடுபடுகின்றவர்கள் வரலாற்று அறிவிலே குறைந்துவிடக் கூடாது. நேற்றைய தொடர்ச்சி இன்று;

38. மபொசி : எனது போராட்டம் — பக்.446
39. குறள் 962
40. ஷெ 291
41. ஷெ 317
42. மபொசி : எனது போராட்டம்— பக்.446-7

இன்றைய தொடர்ச்சி நாளை. முன்னைய சூழலைக்கணிப்பதில் தவறு ஏற்படாவிடின் நிகழ்கால நினைப்பும் செயலும் செம்மை பெறும்; நிகழ்காலச் சூழலைக் கணிப்பதில் தவறு ஏற்படாவிடின் இன்றைய முயற்சிகளில் வாகை சூடலாம்; மேலும் நாளைய போக்குப் பற்றிய திட்டமும் செம்மையாக அமையும். கடந்த கால வரலாற்றுணர்வு இன்றியமையாதது என்பதை உணர்ந்து செயல்படுவது மபொசியின் ஆளுமை.

செங்கோல் 19-5-85 இதழில் 'தி.மு.க.வினரின் கவனத்திற்கு' என்ற கட்டுரை இங்கே நம் கருத்திற்கு உரியது.

**படை நடவடிக்கை**

இலங்கைத் தமிழர் சிக்கல் குறித்தது அந்தக் கட்டுரை. இந்திய அரசு தன் படையை இலங்கைக்குள் அனுப்பி—படையெடுத்து—இலங்கைத் தமிழர் அல்லலைத் துடைக்கவேண்டும் என்பது தமிழகத்திலுள்ள சில சார்பினரின் கருத்து. திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது அந்தக் கருத்தைப் பரப்பிவருகிறது; தீவிரமாகவே அந்தக் கருத்தைப் பரப்பிவருகிறது. ஈழநாட்டிலுள்ள தமிழினத்தவரின் நலனிலே கொண்ட தீவிரமான அக்கறை இக் கருத்து உருவாகக் காரணம் ஆகலாம். இந்திய அரசு இராணுவத்தை அனுப்புவதை மபொசி ஏற்பவரில்லை. இராணுவத்தை இலங்கைமீது ஏவினால் வரக்கூடிய விளைவுகளை மேற்குறித்த கட்டுரையிலே விளக்கியுள்ளார்.

இராணுவத்தை அயல்நாட்டு ஆட்சிப் பகுதிக்குள் அனுப்பியிருக்கக்கூடிய—அனுப்ப நேர்ந்த இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளை மபொசி நினைவூட்டுகிறார்.

> "இந்தியப் பெருநாடு பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெற்ற ஆண்டிலேயே பிரெஞ்சுக்காரர் ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரியையும், போர்ச்சுக்கீசியர் ஆட்சியிலிருந்த கோவாவையும் இந்திய அரசு மீட்டிருக்க வேண்டும், மீட்கவேண்டும் என்றும் இந்தியாவிலுள்ள இடதுசாரியினர் கிளர்ச்சி நடத்தினர்."[43]

பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பாரதநாட்டுப் பரப்பையும், சுதந்திர இந்தியாவின் படை ஆற்றலையும் கருதிப் பார்த்தால்—1947 ஆகஸ்டுக்குப் பின்னும் அயலவர் ஆதிக்கத்தி

43. 'செங்கோல்'— 19-5-85 இதழ்

விருந்த பரப்பும் அந்த ஆட்சியினரின் படையாற்றலும் மிகமிக அற்பமே. இந்திய அரசு நினைத்திருந்தால் நினைத்த மறுகணம் நிறைவேற்றியிருக்கமுடியும். ஆனால், வரலாறு அப்படி நடக்க வில்லை.

> ''...... நான்காண்டுக் காலம் பொறுத்திருந்து, பிரெஞ்சுப் பேரரசின் இசைவையும் பெற்றுப் பாண்டிச் சேரியை மீட்டு இந்தியாவுடன் இணைத்தது நேருஜி ஆட்சி. அதன் பின்னும் பத்தாண்டுக் காலம் கோவாப் பிரதேசம் போர்ச்சுக்கீசியரின் ஆட்சியிலே இருந்தது.''[44]

அந்தச் சூழ்நிலையில் கிளர்ச்சி நடவாமலும் இல்லை. நடந்தது; பாரத நாட்டு தேசிய வீரர்களே கோவாவில் புகுந்து கிளர்ச்சி நடத்தினர்.— கோவா மக்களுடைய முழு விருப்பத்தின்படி அவர்கள் ஒத்துழைப்பையும் பெற்றுத்தான் கிளர்ச்சி நடத்தினர். மக்களாதரவு இருக்கிறது என்பதனால் கூட இந்திய அரசு அவசரப்பட்டுவிடவில்லை :

> ''அந்தப் பிரதேசத்தின் இந்திய தேச பக்தர்கள் புகுந்து போராட்டம் நடத்தினர். இன்று ஈழத்தில் சிங்களவர் நடத்தும் வெறியாட்டங்களையெல்லாம் அன்று கோவாவில் போர்ச்சுகீசிய அரசு நடத்தியது.''

> ''புரட்சியை அடக்க எங்கள் படைபலம் போதாது; 'உங்கள் (பிரிட்டிஷ்) ராணுவத்தையும் அனுப்பியுதவுங்கள்' என்று அதிபர் செயவர்த்தன பிரதமர் தாட்சரிடம் கேட்டார் அல்லவா? அதுபோலக் கோவாவிலுள்ள போர்ச்சுக்கீசிய ஆளுநர் மக்களுடைய சுதந்திர உணர்ச்சியையொடுக்க முயன்று, முடியாமல் போகவே திணறினார். எந்த மணி நேரத்திலும் கோவா கைவிட்டுப் போய் விடக்கூடும் என்ற நிலைமை ஏற்பட்ட போது போர்ச்சுக்கீசிய நாட்டிற்கே தகவல் அனுப்பி, அதனிடமிருந்து கப்பல்படை உதவியைக் கேட்டார்.''[45]

போர்ச்சுக்கீசிய ஆளுநரின் 'அபயக் குர'லுக்குச் செவிசாய்த்து போர்ச்சுக்கல் நாடும் கப்பற்படை அனுப்பத் துணிந்தது. பிரிட்டனும் மற்றும் சில நாடுகளும் தடுத்தும் அந்த அரசு படை அனுப்பவே செய்தது.

---

44. ஷை
45. ஷை

கோவாவில் நடந்த உரிமைக் கிளர்ச்சிக்கு ஆளும்வர்க்கம் தவிர வேறு எந்தக் கூட்டமும் எதிர்ப்புக் காட்டவில்லை; அயல் நாடுகளிலும் போர்ச்சுக்கீசியரின் போக்குக்கு ஆதரவு இல்லை; எதிர்ப்பும் இருந்தது. இந்தச் சூழ்நிலையில்கூட இராணுவ நடவடிக்கை எடுக்க இந்திய அரசு அவசரப்படவில்லை.

இந்தியத் துணைக் கண்டத்துக்கே உரியதாயும், வரலாற்று விபத்துக் காரணமாகக் கொள்ளையர் பங்கிட்டுக் கொண்ட வகையால் ஒரு துளியளவால் போர்ச்சுக்கீசிய முத்திரையோடு ஒட்டிக் கொண்டிருந்த துளியாயும் இருந்தது கோவாப் பகுதி. அதன் உள்ளும் புறமும் இணைந்து உரிமைப் புரட்சிக்கு ஈடுகொடுக்க முடியாமல் - ஆட்சி ஆணவம் காரணமாக விட்டுப் போகவும் விரும்பாமல், பாரதத்துக்கு அன்னியமான போர்ச்சுக்கலின் கப்பற் படையை வரவழைக்கத் துணிந்தார் கோவா ஆளுநர். பாரத அரசு 'கைக்கட்டி'க்கொண்டு நின்றுவிடவில்லை. ''எங்கெங்கெல்லாமோ சுற்றிக் கோவாவை நோக்கி விரைந்து கொண்டிருந்தது (போர்ச்சுக்கலின்) கப்பற்படை.''

> ''ஆனால், அது கோவாவின் துறைமுகத்தை நெருங்குவதற்குள் இந்திய இராணுவம் உள்ளே புகுந்து, கோவாவைக் கைப் பற்றி விட்டது.
>
> கோவா பறிபோன செய்தி கேட்டு, பாதி வழியிலேயே திரும்பிச் சென்றுவிட்டது போர்ச்சுக்கீசியக்கப்பல் இதற்கும் இந்திய நாடு சுதந்திரம் பெற்றபின் 14 ஆண்டுக் காலம் காத்திருந்தது நேருஜியின் அரசு.''[46]

இதுபோலவே காஷ்மீர்ச் சிக்கலின்போதும், வங்கதேசச்சிக்கலின் போதும் நிகழ்ந்த 'இராணுவ' வரலாற்றை மபொசி நமக்கு நினைவூட்டுகிறார்.

அயல்நாடு ஆதிக்கமோ உரிமையோ பெற்றுள்ள பகுதிக்குள் படையை அனுப்புவதால், பல்நாட்டுச்சிக்கலாகப்பிரச்சினை உருவாகிவிடும்; உருவாக்கி விடப்படும். வல்லரசுகளின் கைப்பாவையாகவும், தாயக் காய்களாகவும் உள்ள நாடுகளின் செயல்நிலை பற்றி ஒன்றும் உறுதி கூறமுடியாது. மேலும் இந்தியாமூன்றாவது அணி நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளது. மூன்றாம் அணி நாடுகளுள் ஒன்று இலங்கை. மூன்றாம் அணி நாட்டினரிடையே அடுத்தவர் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை

46. ஷி

என்ற உடன்பாடு இருக்கிறது. எனவே, பாரத மைய அரசு இது போன்ற சூழலில் அவசரப்படவில்லை.

தன் சார்பும் ஆதரவும் இலங்கை வாழ் தமிழர்க்கே என்பதைப் பாரத அரசு ஐயத்துக்கு இடமின்றித் தன் நடவடிக்கைகளால் புலப்படுத்தியிருக்கிறது. கட்டாயமாக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்தால் - அப்படி ஒரு சூழ்நிலை உரிவாகுமானால் இந்திய அரசாங்கம் தயங்காது என்பது மபொசியின் நம்பிக்கையாகும்.

> ''இங்கிலாந்தின் ராணுவத்தை இலங்கை அதிபர் துணைக்கழைத்தாரே - அந்தக் கோரிக்கையை ஏற்றுப் பிரதமர் தாட்சர் தமது நாட்டின் ராணுவத்தை அனுப்பியிருந்தால், இந்திய ராணுவத்தினரின் கை பூப் பறித்துக்கொண்டிருக்காது !''[47]

இதற்கும் பழைய வரலாற்று நிகழ்ச்சியை மபொசி சான்று காட்டுகிறார் :

> ''வங்க தேசப் போரில் அமெரிக்காவிலிருந்து வந்த ஏழாவது அணி யுத்தக் கப்பலுக்கு அன்னை இந்திரா புகட்டிய பாடத்தை, இலங்கைக்கு உதவி புரிய அன்னியப் போர்க் கப்பல் இந்தியாவை நெருங்குமானால், அதற்கும் பாடம் புகட்டப் பிரதமர் ராஜீவ் தவறமாட்டார்.''[48]

இலங்கைத் தமிழர் சிக்கல் தீர்வதற்கு இராணுவ நடவடிக்கை தான் தேவையா, வேறு பிற வழிகள் இல்லையா... என்பதைப் பற்றி ஆராய்வது இங்கு எனது நோக்கமன்று. எதற்கும் வரலாற்றுப் பின்னணி என்ன என்று ஆராய்வது மபொசியின் ஆளுமைப் போக்கு என்பதை விளக்கிக் காட்டுவதே இங்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி.

இலங்கைத் தமிழர் சிக்கலைப் பற்றி ஆராய்வோர் - 'மேதை'களால் நடத்தப்படுகின்ற ஆங்கில இதழ்கள் கூட (!) எண்ணிப் பார்த்து எடுத்துரைக்காத நிகழ்ச்சிகளையெல்லாம் தம் நினைவுப் பதிவிலிருந்து மபொசியால் காட்ட முடிகிறது. தீவிரமான - உணர்ச்சி வயமான, உணர்ச்சி மயமான நடவடிக்கை வேண்டும் எனக் கருதுவோர் மபொசி வரலாற்றுப் பின்னணியில் தரும் கருத்

47. ஷை

48. ஷை

துரையினை ஏற்க மறுக்கலாம். ஆனால், அவர்களுக்கும் மபொசி தரும் வரலாற்றுச் செய்திகள் விளக்கம் தரும் என்பதில் ஐயமில்லை.[49]

மபொசியின் சொல், சொல்லுஞ் சொல்லாக - வெல்லுஞ் சொல்லாக இருப்பதற்குரிய பல காரணங்களிலே அவர்தம் வரலாற்று நினைவும் ஒன்றாகும்.

## வரலாற்றுணர்வு : இலக்கிய வரலாறு

அரசியல் வாதங்களுக்கு மட்டுமே யன்றி இலக்கியத்துக்கு எதிர்(ப்பு) வாதம் எழும்போதும், வரலாற்று வழியிலான வாதங்களை மபொசி எடுத்துரைப்பார்.

பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்த ஓர் அறிஞர், 'கல்விக் கூடங்களில் அரசு மதக் கல்வி தருவதாகவும், அதனைத் தி.மு.க. அரசு கைவிட வேண்டும்' என்றும் கருத்துத் தெரிவித்தார். மதக் கோட்பாடுகளையே கற்பிப்பதாக,சமய போதனை செய்வதாக-எந்தக் கல்விக் கூடமும் இல்லை. அந்த அறிஞர் குறித்தது தமிழ் இலக்கியம் கற்பிப்பதையே. தமிழ் இலக்கியங்களிலே சமயச் சார்புடைய நூல்களே மிகுதி; அவற்றில் உள்ள பகுதிகளைப் பாடமாகக் கற்பிக்கக் கூடாது என்பதே அவர் கருத்து.

அதே மேடையில் பேசநேர்ந்த மபொசியால் அந்தக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தமிழக வரலாறும் தமிழ் இலக்கிய வரலாறும் கடந்துவந்து பதித்த சுவடுகளை நினைப் பூட்டி, நாகரிகமான முறையிலே மறுத்துக் கூறுகிறார்:

> ''தற்போது தமிழ்நாட்டுக் கல்விக் கூடங்களில் மதக் கல்வி போதிக்க வேண்டுமென்ற சட்டமோ திட்டமோ நடைமுறையில் இல்லை. சமயச் சார்பற்ற அரசாத

49. ''இந்தியாவோ பாகிஸ்தானோ துண்டாடப்படுவதைநான் விரும்பாதவன். என்றாலும், சுயாட்சி மறுக்கப்படுகின்ற இடத்தில் சுதந்திரம்தான் தோன்றும் என்ற உண்மையினை உணர்ந்தவன். அதனால், சுயாட்சி கேட்ட வங்கதேசம்—அது மறுக்கப்பட்டபோது— தனது சுதந்திரத்தைத் தானே பிரகடனம் செய்தது—எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது''—மபொசி : எனது போராட்டம்— பக்.1003. இலங்கைத் தமிழர் சிக்கலுக்கும் இந்த 'உண்மை' பொருந்தலாம்தானே. காலம் விடை பகரும்.

> லால், அத்தகைய சட்டமும் திட்டமும் இருக்கமுடியாது ஆனால், தமிழ் இலக்கியப் பாடம் உண்டு. அந்த இலக்கியங்களில் பெரும்பாலானவை சமயச் சார்புடையவை என்பதை மறுப்பதற்கில்லை. அவற்றை அரசு நீக்கவேண்டுமென்று யாரேனும் சொன்னால், அதை நான் எதிர்க்கமாட்டேன். சமய வெறுப்பால்—தெய்வ நம்பிக்கையின்மையால் அவர்கள் சொன்னாலும், சமயக் கல்வியைக் கட்டாயப் படுத்தாமல், அவரவர் விருப்பத்திற்கு விட்டுவிடலாம் என்று நானும் சொல்வேன்.''[50]

மபொசியின் ஆளுமையை—சமய ஊற்றங்கொண்ட ஆளுமையை அறிந்தவர்களுக்கு இந்தப் பகுதியைக் கேட்கும்போது வியப்பாகவே இருக்கும். ஆனால், அவர் வாதம் மேலே தொடர்கிறது:

> ''விருப்பத்துக்கு விட்டாலும் மத இலக்கியங்களை மக்கள் சொந்த முயற்சியாலேயே படித்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால், இலக்கியப் பாடம் கட்டாயம் இருந்தாக வேண்டும் பாடத் திட்டத்திலே. அதைக் கைவிடுவது கூடாது.''[51]

மபொசி சொல்வதையே ஏற்று 'இலக்கியப் பாடம் வைப்போம்; சமயச் சார்பற்ற இலக்கியங்களைப் பாடமாக்குவோம்' என்று பகுத்தறிவு வாதிகள் சொல்லக் கூடுமல்லவா? அதற்குச் சிலம்புச் செல்வர் விடை சொல்லும்போதுதான் தமிழக வரலாற்றின் போக்கையும் தமிழ் இலக்கிய வரலாற்று அமைப்பையும் சுட்டுகிறார்.

> ''கஷ்டமென்ன வென்றால், சமய இலக்கியங்களை விட்டால், சமயச் சார்பற்ற வேறு இலக்கியம் ஏது, பள்ளியில் பாடமாக்க! நாம் காலமெல்லாம் பகுத்தறிவின் பெயரால் பழைய இலக்கியங்களை எதிர்த்தோம்—வெறுத்தோம்—எரிக்கவும் விரும்பினோம். அந்த இலக்கியத்தில் அது குற்றம், இந்த இலக்கியத்தில் இது குறை என்று மத, தெய்வ எதிர்ப்புணர்ச்சி காரணமாகச் சொன்னோம். மாற்றாக, 'இந்த இலக்கியத்தையோ, அந்த இலக்கியத்தையோ பாடமாக்கு' என்று சுட்டிக் காட்ட நம்மால் முடிந்ததா? சமய—தெய்வ நம்பிக்கை

50. மபொசி : ஆன்மீகமும் அரசியலும்— பக்.98-99
51. ஷை பக்.99

களுக்கு அப்பாற்பட்ட அறிவிலக்கியங்களை நம்மால் படைக்க முடிந்ததா? பாரதியார், சமய—தெய்வத் தன்மைகளுக்கு அப்பாற்பட்ட பாடல்கள் சிலவற்றை —சிறப்பாக, நாடு—மொழி சம்பந்தப்பட்ட தேசியப் பாடல்களைப் பாடியுள்ளார் என்பது உண்மைதான். அவை இருபதுக்குமேல் இல்லையே! அவை போதுமா, கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் பாடமாக்க? பாரதிதாசன் பாடியுள்ளார் பகுத்தறிவு இயக்கப் பாடல்களை! அவைதான் போதுமா, கல்வி பயிலும் காலம் முழுவதிலும் வகுப்புத்தோறும் படிக்க!''[52]

"பகுத்தறிவு இலக்கியம் இப்போது போதுமான அளவு இல்லாமலிருக்கலாம், இனிமேல் நிறையப் படைப்போம், படிப்போம்' என்று எதிர்வாதம் எழக்கூடுமே!

''......சமய, தெய்வச் சார்புடைய இலக்கியங்களைப் படிக்காமல் விடக்கூடிய நிலையில் இன்று நாடு இருக்கிறதா என்பதே பிரச்சினை. இல்லையென்று நான் உறுதியாக நம்புகிறேன்......''

''......நாம் சமய—தெய்வச் சார்புடைய இலக்கியங்களைப் பாடத் திட்டத்திலிருந்து அகற்றுவோமானால், அந்த இடம் சூன்யமாகிவிடும். அதனை நான் விரும்ப முடியுமா?''

''சமய இலக்கியங்களைக்கூட, சமயப்பற்றுக்கு அப்பாற்பட்டு, இலக்கியப் புலமைக்காக, இலக்கிய நயத்தைச் சுவைப்பதற்காகப்படிக்கலாம்; போற்றலாம். அப்படித்தான் தூய சைவரான டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், சமண—பௌத்தக் காப்பியங்களான சீவக சிந்தாமணி, மணிமேகலை ஆகியவற்றைப் பதிப்பித்தார். சமண பௌத்தக் கருத்துக்களை ஏற்பதோ மறுப்பதோ தமிழ் மக்களுடைய விருப்பம் என்று விட்டு விட்டார். சிந்தாமணியைப் பதிப்பித்துத் தருவதால் சமணம் பரவிச் சைவம் அழிந்துவிடுமோ என்று அவர் அஞ்சவில்லை. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருளில் மெய்ப்பொருள் காணும் அறிவு தமிழ் மக்களுக்கு இருப்பதாக ஐயர் நம்பினார்...''[53]

52. ஷை
53. ஷை பக். 101-2

காந்தியடிகளின் வழியைப் பின்பற்றி வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர், சமய இலக்கியங்களுக்கு எதிரணியினராக இருக்க முடியாது.

> ''என்னுடைய தேசபக்திக்கு மட்டுமல்லாமல், தெய்வ பக்திக்கும் என் மகன் வாரீசாக வேண்டும். சிவஞானத்தின் சொத்துக்குமட்டுமல்லாமல், அவன் போற்றும் சிவத்துக்கும் அவன் மகன் வாரீசாக வேண்டும்.''[54]

என்பது மபொசியின் மனப்போக்கு. எனவே, சமய இலக்கியங்களைச் சமயக் கண்கொண்டு—சமய ஊற்றம் பெறுவதற்காகப் பயிலவேண்டுமென்பது அவர் கருத்தாகும். ஆனால், கல்வி நிலையங்களிலே இலக்கியமாகவேனும் சமயச் சார்புடைய தமிழ் இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டும் என்கிறார். வாழ்க்கையிலிருந்து வடித்தெடுக்கப்படும் இலக்கியம், வாழ்க்கையை நெறிப்படுத்திச் செலுத்தும் என்பது அவர் கண்ட அனுபவம். ஓர் இனத்தின் நாகரிகமும் பண்பாடும் அவ்வினத்தின் இலக்கியங்களிலே செறிந்துகிடக்கும் என்பது திறனாய்வாளரும் சான்றோர்களும் ஏற்றுக்கொள்ளும் கருத்தாகும்.

தமிழக வரலாற்றோடும் தமிழிலக்கிய வரலாற்றோடும் இணைந்து நின்று பார்க்கும் சிலம்புச்செல்வர், இலக்கியக் கல்வி தவிர்க்கப்படக் கூடாது என்றுதான் கூறமுடியும். இக்கருத்து அவரது ஆளுமையின் இயல்பிலே முகிழ்ப்பது.

**வரலாற்றுணர்வின் அடிப்படை: அணுகுமுறை**

'வரலாற்றுணர்வு' என்பது, வரலாற்று நிகழ்ச்சிகளை வருடம் மாதம் தேதிவாரியாக மனச்சிறையிலே திணித்து வைத்து, நினைத்தபோது 'வாந்தி' எடுத்துவிடுவது ஆகாது. நிகழ்ச்சிகளை நிகழ்ந்தவாறே நினைவில் இருத்துவதோடு, அந்நிகழ்ச்சிகளின் அடிப்படை என்னவென்பதை ஊடுருவி நோக்கி அறிதல் வேண்டும்; அவ்வாறு கசடற அறிந்த அறிவினைப் பாழ்நெறியிலே செலுத்திவிடாமல் பேணி, மக்கட் சமுதாயத்தின் வாழ்வாக்கத்திற்குப் பயன்படுத்த வேண்டும். அறமும் ஆக்கப் பணியும் கொண்டவர்களின் ஆளுமை செயல்படும் முறை அதுவேயாகும்.

நம் கல்வி நிலையங்களிலே இன்றுவரை கற்பிக்கப்பட்டு வரும் வரலாற்றுப் பாடங்கள் நன்முறை கொண்டனவல்ல என்பது மபொசியின் கருத்தாகும். வெள்ளையன் ஆட்சிக் காலத்தில்—அவன் மனமகிழவோ அவன் காட்டிய திசையிலோ—எழும்

54. ஷெ பக்.49

'வரலாறு'கள் வீரபாண்டியக் கட்டபொம்மனைப் பற்றியும் வீர சிவாஜியைப் பற்றியும் விடுதலை வீரர்களாகவா காட்டும்! மெக்காலே திட்டத்தின்படி உருவான கல்வி நிலையங்களிலே அவர்களெல்லாம் கொள்ளைக்காரர்கள், சமுதாய எதிரிகள் என்றுதானே காட்டப்படுவார்கள்? இதில் ஒன்றும் வியப்பில்லை.

> ''......இந்திய நாட்டை அயலாரான ஆங்கிலேயர் ஆண்டபோது, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவ மாணவியர்க்குத் தரப்பட்ட பாடப் புத்தகங்களிலே மதத்துவேஷம் என்னும் 'விஷக் கண்ணிகள்' கலக்கப் பட்டன. அவை இன்னமும் அகற்றப்படவில்லை!
>
> ''பாபரும் கஜினியும் இந்தியாவின்மீது படை யெடுத்தபோது அவர்களால் செய்யப்பட்ட அட்டூழியங் கள்—அவர்கள் இந்துக் கோயில்களில் புகுந்து செல்வங் களைக் கவர்ந்து சென்ற கொடுஞ்செயல்கள் நம்நாட்டுப் பாடப் புத்தகங்களிலே வருணிக்கப்படுகின்றன. இதைப் படிக்கும் இந்து மாணவர்களுக்கு, இந்து—முஸ்லிம் ஒற்றுமை உணர்வு எப்படி ஏற்படும்?''[55]

ஆக்கவழிப்பட்ட அணுகுமுறையில் வரையப்படாமல்—எதிர் மறையான விளைவுகளைத் தரக்கூடிய முறையிலே நிகழ்ச்சிகளை விவரித்து வரலாறுகள் வரையப்படுமானால், அத்தகைய வரலாற்று நூல்களால் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் தீமையே விளையும். அயலவன் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள் வதற்குப் பிரித்தாளும் சூழ்ச்சியைப் பக்குவமாகப் புகுத்துவது இயற்கைதான்; அதுதான் நம் நாட்டிலே பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே நடைபெற்றது. அறிஞர்கள்—நாட்டு நலனுக்குஆவது எது என்று அறிந்து செயல்பட வேண்டிய அறிஞர்கள்—ஆட்சி செய்யும் அயலவனுக்கு அடகு வைக்கப்பட்டாற்போலச் செயல் பட்டனர்; பிசகிய அணுகுமுறையிலே அவர்கள் உருவாக்கிய 'சரித்திர' வரைவுகள் நம் சரிவுக்குக் காரணமாயின.

### வரலாற்றாசிரியர்கட்கு

மேலே குறித்த படையெடுப்புகளை வரலாற்றிலே பதிய வைப்பவர்கள் எவ்வகை அணுகுமுறையினைக் கொண்டால், நாட்டுக்கு நலம் உண்டாகும்? இவ்வினாவுக்கு விடை, பின்வரும் மபொசியின் கருத்துரையிலே கிடைக்கும்:

55. 'செங்கோல்'— 24.3.85 இதழ்

''ஒரு நாட்டு மன்னரின் படை இன்னொரு நாட்டிற்குள் புகுந்து போர் செய்யுமானால், அந்தப் போரில் வெற்றியும் கிடைக்குமானால், தோல்வியுற்ற நாட்டின் செல்வங்களைக் கவர்ந்து செல்வதென்பது மன்னர் ஆட்சிக் காலத்தில் போர்க் கொள்கை போலாகியிருந்தது. இதற்கு இந்து மன்னர்களும் விலக்கல்லவே.''

''......இந்து—இஸ்லாமிய மன்னர்களிடையே போர் நடந்திருப்பதுபோல, இஸ்லாமிய மன்னர்களிடையேயும் போர் நடந்திருப்பதைப் பார்க்கிறோம். ஔரங்கசீப் என்ற மாமன்னன் தன் தந்தையான ஷாஜஹானிடமிருந்து அரசைக் கைப்பற்றிக் கொண்டதோடு, தந்தையான அவனைச் சிறையிலும் அடைத்தான்.''

''இதுபோல, இந்து மன்னர்களும் தங்களுக்குள்ளேயே போர் புரிந்துகொண்டதுண்டு. மாமன்னன் அசோகன் கலிங்கம்வரை படையெடுத்துவந்து ஆக்கிரமித்துக் கொண்டது, இந்து மன்னர்களின் நாடுகளைத் தானே?''

''......தமிழ் மன்னர்கள் தங்களுக்குள்ளே போர் செய்ததில்லையா? வென்ற தமிழ் மன்னன் தோற்ற தமிழ் மன்னனைப் பழிவாங்கியதில்லையா?''[56]

ஆதிக்க ஆசை வெறியிலும் தனிப்பட்டோர் மனத்திலே புகைந்து கன்ற பகையிலும் விளைந்த மன்னராட்சிக் காலத்துப் போர்களை வரலாற்று நூல்களிலே எழுதும்போது, எவ்வகையான அணுகுமுறை வேண்டுமென்பதை மேற்காட்டிய பகுதி மிகத் தெளிவாக விளக்குகிறது.

''...மன்னராட்சிக் காலத்து வரலாறுகள் இன்று வாழும் நமக்கு வழிகாட்டிகளல்ல என்று நம்புங்கள், நாம் வாழ்வது மக்களாகிய நமக்காக நாமே படைத்துக் கொண்டுள்ள ஆட்சியிலே.''[57]

---

56. ஷை

57. 'சர்வ மதங்களிடையில் சமரசம் ஏற்பட வேண்டுமானால்; மன்னர்களிடையே நடந்த போர்களை நாம் மறக்க வேண்டும். அதை வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ளும் பாடமாகப் படிக்கலாம். அந்த வரலாற்று நிகழ்ச்சிகளை வழிகாட்டும் போதனைகளாகக் கொள்ளக் கூடாது''— மபொசி : ஆன்மீகமும் அரசியலும்— பக்.121

> "மன்னராட்சியை ஒழித்துவிட்ட நாம்—அந்த மன்னர்களைக் குற்றவாளிகள் போலக் கருதி அவர்களுடைய மானியங்களைக் கூடப் பறித்துவிட்ட நாம் கடந்த கால மன்னர்களின் போர் வரலாற்றை வழிகாட்டிகளாகக் கொள்ளலாமா?"[58]

மபொசியின் வரலாற்று ஆளுமை எழுப்பும் இந்த வினா இன்றைய சிந்தனையாளருக்கு நல்விருந்து.

> "அவற்றைப் பாட நூல்களிலிருந்து அகற்றி விட்டால், சர்வசமய சமரசம் ஏற்படும்; தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கவும் அதுதான் வழி,"[59]

என்று அவர் தெரிவிக்கும் முடிபினை வரலாற்று அரங்கினர் ஏற்க மறுக்கலாம். ஆனால், வரலாற்று நூல் எழுதுவோர் மேற்கொள்ளவேண்டிய அணுகுமுறைபற்றி மபொசி தரும் விளக்கத்தை ஏற்பதில் தடை இருக்க முடியாது.

தாம் தொடும் எந்தத் துறையிலும் தனி முத்திரை பதித்து, ஆக்க வழி விளக்கம் தருவதில் இணையற்ற சிறப்புடையவர் மபொசி; அவர் ஆளுமை அத்தகையது.[60]

## வரலாற்றுணர்வு: சமய இலக்கியம்

நாட்டு வரலாற்றுணர்வு மபொசியின் ஆளுமைக்கு வலுவூட்டுவதுபோலவே, சமய இலக்கிய வரலாற்றுணர்வும் அவர் ஆளுமைக்குத் தூண்டுகோலாக அமைகின்றது. இதனைப் பின்வரும் விளக்கத்தால் உணரலாகும்.

> "அரசியல் துறையிலே ஏமாற்றங்களும் எதிர்ப்புகளும் ஏற்பட்டபோதெல்லாம்—துரோகங்களைச் சந்திக்க நேர்ந்தபோதெல்லாம்—என் மனம் ஆறுதலடையப் பயன்பட்டது எனக்குள்ள ஆன்மீக உணர்வுதான்."[61]

---

58. 'செங்கோல்' — 24.3.85 இதழ்
59. ஷை
60. "சரித்திர நூல்களைப் படிப்பதிலே எனக்குத் தனி ஆர்வம் உண்டு—குறிப்பாக, தேசியத் தலைவர்கள்— உலகத் தலைவர்கள்—சான்றோர்கள் ஆகியோரின் சரித்திர நூல்கள் கிடைத்துவிட்டால் உணவைக்கூட விரும்பாமல் ஆர்வத்துடன் படிப்பேன்" —மபொசி: எனது போராட்டம் பக்.107
61. மபொசி : ஆன்மீகமும் அரசியலும்— முன்னுரை

தனிவாழ்வின் அமைப்புக்கு மட்டுமேயல்லாமல், அரசியல்—பொது வாழ்வரங்கிலும் மபொசியின் ஆளுமைச் செயற்பாட்டுக்கு வரலாற்று நெறிப்பட்ட சமய உணர்வும் மரபும் உதவியுள்ளன.

> ''தமிழர் இழக்கக் கூடாததையெல்லாம் இழந்துவிட்டனர். அதனை நினைத்தாலே எனது நெஞ்சம் இன்றும் வேதனைப்படுகின்றது. நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் என இயற்கைப் பூதங்கள் ஐந்துக்கும் திருக்கோயிலை ஒட்டி இடங்கள் கற்பிக்கின்றன. மண்ணுக்குத் திருவொற்றியூரும்,[62] நீருக்குத் திருவானைக்காவும், நெருப்புக்குத் திருவண்ணாமலையும், காற்றுக்குத் திருக்காளத்தியும், வானத்திற்குச்சிதம்பரமும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஐந்தினுள் திருக்காளத்தி ஆந்திரத்திற்குப் பறிபோய்விட்டது.''[63]

பஞ்ச பூதத் தலங்கள் எனச் சைவ சமயத்தார் போற்றும் மரபினை உணர்ந்தே மபொசி இவ்வாறு எழுதுகிறார். தமிழகச் சைவர்கள்—தமிழகத் தலங்களிலே ஐம்பூத வழிபாட்டுக்கென வகுத்த தலங்களுள் திருக்காளத்தி 'பறிபோய் விட்ட'தைத் தமிழகத்தின் அரசியல் இழப்பாகக் கருதுகிறார். தக்க சான்றுகளும் தருவதில் தவறில்லை; சான்றுகள் இல்லாமல் 'ஆகாசக் கோட்டை' கட்டி அரசியல் நடத்துவது அவர் வழக்கமில்லை.

> ''திருக்காளத்தி பற்றிய இலக்கியங்களெலாம் தமிழில் தான் இருக்கின்றன. தெலுங்கு மொழியில் ஒன்றுகூடக் கிடையாது. காளத்தி கோயில் கல்வெட்டுகளெல்லாம் தமிழில்தான், திருக்காளத்தியப்பரை வழிபட்டு முக்தி பெற்ற கண்ணப்ப நாயனாரைப் பற்றிய செய்திகளெல்லாம் தமிழில்தான் இருக்கின்றன; தெலுங்கிலே இல்லை. ஆனால், எப்படியோ, திருக்காளத்தி கோயிலைப் பறி கொடுத்து விட்டோம்.''[64]

திருக்காளத்திமட்டுமா? 'மலைவிழுங்கிகள்' நிறைந்த அரசியல் அரங்கில் ஏமாளிகளாயிருந்தால் வேறு என்ன விளைவு ஏற்படும்?

---

62. மண்ணுக்குக் காஞ்சீபுரம் ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலே உரியது.
63. மபொசி : ஆன்மீகமும் அரசியலும் பக்-106
64. ஷை 106-7

> ''அதுபோல, ஆறுபடை வீடுகளில் ஒன்றாகக் குமரன் உறையும் குன்றுகளில் ஒன்றாகக் கருதப்படும் தணிகையம்பதியைப்[65] பறிகொடுக்க நினைத்தோம்.''[66]

சமய வரலாற்று மரபுவழியினை இன உணர்வோடு பேணினமையால் தமிழினத்துக்கு ஏற்பட்ட அரசியல் இழப்புகளை மபொசியின் ஆளுமை ஏற்க மறுத்தது. காந்தியம் துவக்கிய சத்தியப் பிடிப்பு மபொசியை வாளா இருக்க விடவில்லை. தமிழரசு இயக்கம் கொண்டு எல்லைகளுக்காகப் போராடினார். வெற்றியையே நோக்கும் சத்தியப் போர்; தோல்விக்காகத் தளராத ஆன்மீக அமைதி; இது மபொசி ஆளுமை வீறு:

> ''தமிழகத்தைக் காக்கும் எல்லைத் தெய்வங்களாகக் குமரிஅம்மனும்,வேங்கடத்தானும் கொள்ளப்பட்டனர். அந்த இரண்டையும் கூடப் பல தலைமுறைகளுக்கு முன்பே பறிகொடுத்து விட்டோம். வேங்கடவன் உறையும் வட எல்லையான வேங்கடமலையை ஆந்திரர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். தெற்கெல்லைத் தெய்வமான குமரியம்மன் கோயிலைக் கேரளத்தார் எடுத்துக்கொண்டு விட்டனர். இந்த இரண்டையும் மீட்கப் போராடியது தமிழரசுக் கழகம். அதில் குமரி முனையை மீட்பதில் வெற்றி கண்டது, வேங்கடத்தை மீட்பதில் வெற்றி காணவில்லை.''[67]

பல தலைமுறைகளுக்கு முன்பே தமிழினத்தின் உரிமை மறக்க(டிக்க)ப் பட்டது; ஆனால், வரலாற்றுணர்வும் எல்லைத் தெய்வ அமைப்பு மரபும் உணர்வும்கொண்ட ஆளுமை கிளர்ந்தெழுந்தது. இந்த எல்லைப் போருக்கும் மீட்புக்கும் தமிழக வரலாற்றிலே மபொசி தவிர வேறு எவருக்கும்—தமிழரசுக் கழகம் தவிர வேறு எந்த இயக்கத்துக்கும்—பெருமைக்குரிய இடம் இல்லை என்பது நடுநிலையாளர் உணர்ந்த உண்மையாகும்.

மபொசியின் ஆளுமைத் திறத்திலே வரலாற்றுணர்வு கொண்டுள்ள இடத்தினைக் கணித்துரைப்பது மிக விரிந்த ஆராய்ச்சியாகத் தனியே மேற்கொள்ளத் தக்கது. அவர் வாழ்விலும்

---

65. திருத்தணிகை படைவீடுகளில் ஒன்றன்று. ஆயினும் படைவீடுகளனைய சிறப்புடையது.
66. மபொசி : ஆன்மீகமும் அரசியலும்— பக்.103
67. ஷை பக்.107

வாக்கிலும்—நிகழ்ச்சிக் கோவையின் திருப்புமுனைகளிலும் வரலாற்றுணர்வு செயல்பட்டிருப்பதைக் கணித்துக் கண்டுரைக்கப் புகின், கட்டுரை மிக விரியுமென அஞ்சி, இவ்வளவில்—இப் போதைக்கு—நிறுத்துவோம்.

## சமுதாய உணர்வு

ஒரு நாடு அல்லது இனத்தின் வரலாற்றரங்கிலே முன்னணிக்கு வரும் தலைமையாளர்களின் ஆளுமை பல திறப் பட்டைகளால் ஒளி வீறு பெறுவதாகும். காரணம், அவர்கள் வாழும் சமுதாயமும் பல திறப் பாகுபாடுகளும் கூறுகளும் கொண்டுள்ளமையே யாகும். சமூக உணர்வு இல்லாதவர்கள் 'மானிடர்' எனக் கூறப் படுதற்கே தகுதியற்றவர்கள்; எனின், மனித இனத்தை வழி நடத்திச் செல்லும் தலைவர்களிடம் அந்த உணர்வு செறிந்திருக்க வேண்டியது மிகவும் சிறப்பான தேவை என்பதை விதந்தோதத் தேவை இல்லை.

### குடும்பக் கட்டுப்பாடு

உலக நாடுகளிடையே பொதுவாகவும், பாரத நாட்டிலே சிறப்பாகவும், தமிழகத்திலே குறிப்பாகவும் உள்ள சமூகப் பிரச்சினைகளிலே மிகமிக முன்னணியில் இருப்பது குடும்பக் கட்டுப்பாடு பற்றியதாகும். மனிதக் கூட்டமே வீங்கி வெடித்து விடக் கூடிய பேராபத்தை நோக்கிக் கண்மூடித் தனமான வேகத்தில் பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறது. 'எனையாளும் ஈசன் செயல்' என்று போலி ஆத்திகக் குரல் கொடுப்பது கையாலாகாத் தனம், போலித்தனம் நிறைந்த பொய்ம்மைவாதம். வேறு ஓர் அணுகுமுறையும் அண்மையில் தலை(காட்டித்) தூக்கிவருகிறது. 'தலையை எண்ணி, அந்த எண்ணிக்கையையே பிரணவமாக—மூலமந்திரமாகக் கொண்டு 'ஓட்டாண்டிகள்'—ஆம், ஓட்டு வேட்டையாளர்கள் இந்த வேதனையான பின்னணியில் நின்று புதுவாதம் எழுப்புகின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஒரு சமுதாயத்தினரின் சமய நம்பிக்கையும் மரபும் இடம் தரவில்லை என்பதால் அவர்களிடையே கருத்தடை பற்றிய எண்ணமோ பிரசாரமோ போவதில்லை. அவர்களின் எண்ணிக்கை நாளடைவில் பெருகி, அப்பெருக்கத்தால் இன்றைய சமுதாயத்தின் பெரும்பான்மைச் சமூகம் பின் தங்கிய நிலையினதாக ஆகக்கூடிய ஆபத்து இருக்கிறது என வாதிடுவதைக் கேட்கிறோம். தலை எண்ணுவதுதான் சரியான மக்களாட்சியா என்ற கேள்வியை இன்றைய அரசியல் அரங்கில் இருப்பவர்களால் சீரணிக்க

முடியுமா என்பது பெரிதும் ஐயத்திற்கு இடமாக உள்ளது. அவனவன் சாதிப் படைக்கு இரையாகி—சமய நலப் போலி வாதம் பேசி—பொதுநலத் தொண்டு வேடம் பூண்டு நாடகமாடும் 'சன' நாயகச் சலசலப்பிலே, 'தலையை எண்ணுவதை விடு; தகுதிவழி எது என்ற முயற்சியை எடு' என்ற குரல் கேட்காது. இன்னும் நாளாகும் எனத் தோன்றுகிறது.

இன்றைய சூழ்நிலையிலே குடும்பக் கட்டுப்பாடு தவிர்க்க முடியாத அரசியல் சமூகக் கடமையாகிறது. குடும்பக்கட்டுப்பாடு பற்றிய கருத்துப் பரவலுக்கு ஊக்கமளித்துத் தூண்டுவது பொது வாழ்வில் அக்கறையுடையவர்களின் ஆக்கவழித் தொண்டு என்பது உண்மை.

குடும்பக் கட்டுப்பாட்டின் தேவைபற்றிப் பற்பலர் பற்பல வகையில் பேசுவர். 'இன்ப' வாழ்வுக்கு இடைஞ்சல் என்பது ஒரு 'வாதம்'... இப்படிப் பல. மபொசி தரும் காரணங்களில் ஒன்றைக் காண்போம்:

> ''......இந்தியாவிலோ, குடும்ப வேலைகளைத் துறந்து வெளிவேலைகளுக்குப் பெண்கள் அனைவரும் செல்வது என்று ஏற்பட்டுவிட்டால், வேலையில்லாத் திண்டாட்டத்தால், நாடே அழிந்துபோய் விடக்கூடும். காரணம், மக்கள் தொகை இங்கே மிகுதியாக இருப்பதுதான்.''
>
> ''இங்கும் வீட்டிற்கு வெளியே தொழில்புரியப் பெண்கள் விரும்புகின்றனர். அவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றது. ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் கல்வி கற்று வருவதும் இதற்கு ஒரு காரணமாகும். பெண்கள் வீட்டிற்கு வெளியே தொழில் செய்யக்கூடாது என்று சட்டம் போட்டுவிட முடியாது. இந்தச் சங்கடத்தைச் சமாளிக்கவும் குடும்பக் கட்டுப்பாடு இன்றியமையாது தேவைப்படுகிறது.''[68]

சமுதாயத்தில் இப்போதே வேலையில்லாத் திண்டாட்டம் வெறியாட்டம் போடுகிறது; அந்த வெறியாட்டம் ஊழிக்கூத்தாக முடிந்துவிடக் கூடிய நிலைமையைத் தவிர்ப்பதற்குக் குடும்பக் கட்டுப்பாடு இன்றியமையாதது என்பது மபொசி தரும் நல்ல காரணம் என்பதில் தடைஇல்லை.

68. ஷை பக்.113-4

'குடும்பத்தில் உறுப்பினர் பெருகுவது இறைவன் கொடுத்த வரம், அதைத் தடைசெய்வது சமய உணர்வுக்கு எதிர் நடவடிக்கை' என்று பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது. அக்கருத்தினைப் பற்றி மபொசி எண்ணிக் கணித்துத் தரும் கருத்து சிந்தனைக்கு உரியது:

> ''கருத் தரிப்பதைத் தடுப்பது பாவம் என்ற தவறான நம்பிக்கையும் மக்களிடையே நிலவிவருகிறது. கருவை அழிப்பது பாவம்தான். ஆனால், கருத் தரிக்காமல் செய்வது பாவமல்ல. இந்த உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.''[69]

நூற்றுக்கு நூறு தாங்களே வைதிகத்தின் பாதுகாவலர்கள், இறைவனின் நேரிடையான முகவர்கள் (ஏசண்டுகள்) என்று எண்ணிக் கொள்கிறவர்கள் இந்தக் கருத்தை மறுக்கக்கூடும். அவர்கள்கூட இன்றைய சமுதாயச் சிக்கலின் கடுமையை எண்ணிப் பார்ப்பார்களானால், 'கருத் தரிப்பதைத் தடுப்பது பாவம்......ஆனால், கருத்தரிக்காமல் செய்வது பாவமல்ல, என்ற கருத்தை உள்ளூர ஏற்றுக் கொள்வார்கள் என நம்பலாம்.

இந்து சமய மரபேகூடக் 'கருத் தரிப்பதைத் தடுக்கும்' முயற்சியை ஏற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறார், மபொசி. இதுபோன்ற இடங்களில் மபொசி முத்திரைபதிக்கும் ஆளுமையைக் காணமுடிகிறது:

> ''கருத் தடுப்புமுறை இந்துக்களின் வாழ்க்கையிலேயே இணைந்து இருக்கிறது. திங்கள், செவ்வாய், வெள்ளி, சனி ஆகிய கிழமைகளிலேயும்; கிருத்திகை, அமாவாசை ஆகிய நாட்களிலேயும் இந்துக்கள் விரதம் கடைப் பிடித்து வருகின்றனர். இந்த விரத நாட்களிலே சில உண(ர்)வுகளை விலக்கி வைக்கின்றனர். அதுபோல, கணவன்—மனைவி உடலுறவையும் தவிர்ப்பது உண்டு. இவை குடும்பக் கட்டுப்பாட்டை யொட்டிய விரதநாள் தானே!''[70]

சமயங்களின் முடிந்த பயன் வீடுபேறு; அவ் வீடுபேற்றுக்கு இன்றியமையாத தேவை பற்றறுதல். 'அற்றது பற்றெனின் உற்றது வீடு' என்பது ஆன்றோர் வாக்கு. இத்துறவிலே பட்டினத்தாரைப் போல் இன்னொருவரைச் சுட்டுவது அருமை.

69. ஷெ பக்.115
70. ஷெ

"பட்டினத்துப் பிள்ளையைப் போல் யாரும் துறக்கை அரிது" என்பது— பாம்பறியும் பாம்பின் கால் என்ற வகையில் அமைந்த சரியான கணிப்பு. எனவே, சமய நாயகர், துறவின் வேந்து எனத்தக்க பட்டினத்தாரே குடும்பக்கட்டுப்பாட்டின் தேவையை அவர் காலத்திலேயே உணர்ந்து, உணர்த்தியிருக்கிறார் என்றால், அது பிரசாரத்துக்கு வலிமை தருவதாக இருக்குமன்றோ? மபொசியின் நெஞ்சக் களத்திலே பட்டினத்தார் நடமாடுகிறார்:

> ''அதிகப் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு அல்லலுறு வதைக் கேலி செய்து பட்டினத்தடிகள் பாடியுள்ளார்.
> நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
> நலமொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்
> பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
> புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
> காப்பதற்கும் வகையறியீர், கைவிடவும் மாட்டீர்
> கவர் பிளந்த மரத்துளையில் வால் நுழைத்துக் கொண்டே
> ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல
> அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட் டீரே
> மரப் பிளவிலே வாலை விட்டுக்கொண்டு, பிளவின் நடுவி லிருந்த ஆப்பை எடுத்து விட்டு அல்லலுற்ற குரங்கை, அளவுக்கு மீறிப் பிள்ளை பெற்று அல்லலுறும் பெற்றோருக்கு உவமையாகக் கூறியுள்ளார் பட்டினத் தார். முற்றுந் துறந்த முனிவரான அவரும் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை உணர்ந்து இந்தப் பாடலைப்புனைந்துள்ளார்.''[71]

கருத்துப் பிரசாரத்தின் இமயக் கொடுமுடியாக மபொசி தரும் முடிட்புரை நம் சிந்தனைக்கு உரியது :

> ''மதத்தைக் காட்டி, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை எதிர்ப்பது தனிப்பட்டக் குடும்பங்களுக்குச் செய்யும் துரோகமாகும். இது தேசத் துரோகமாகக் கருதக்கூடிய நாளும் வரும்.''[72]

குடும்பங்களின் கூட்டே சமுதாயம்; சமுதாயத்தின் தாயகமே தேசம். எனவே, மதத்தின் பெயரால் தனிப்பட்ட குடும்பத்திற் குச் செய்யப்படும் 'துரோகம்', தேசத் துரோகம் என்று கருது வதிலே தவறில்லை.

71. ஷை—பக்.116
72. ஷை

வேறு பல சூழ்நிலைக் கட்டாயங்களால் குடும்பக்கட்டுப்பாடு ஏற்பாட்டை மறுக்க முனைவோர் கூட, சமுதாய உணர்வு கனிந்த மபொசியின் கருத்துக்கு உரிய மதிப்பளிக்கத் தவற மாட்டார்கள்.

**வரதட்சிணை**

மக்கட் பெருக்கம் போலவே சமுதாயத்தை ஏறத்தாழ நரக மாக்கி வரும் மற்றொரு பெருஞ்சிக்கல் வரதட்சிணைக் கொடுமை யாகும். கையூட்டைப்(லஞ்சம்) பழிக்காதவர்கள் இல்லை; அதே சமயத்தில் அதற்குப் பலியாகாதவர்களும் இல்லை. கறுப்புப் பணத்தின் நடமாட்டத்தை உணராதவர்கள் இல்லை; உணர்ந்தும் உணர்த்தியும் உலவுவோரே கறுப்புப் பண நாயகர்களாகவும் உள்ளனர். கையூட்டும், கறுப்புப் பணமும் நயத்தக்க நாகரிகம் புனைந்து நச்சுருவம் மறைத்துயாண்டும் நீக்கமறநிறைந்துள்ளன. அறத்தின் பாதுகாவலராய் - அதனை ஓம்பிப் புரக்கும் புரவலர் களாய்- சமுதாய இயந்திரத்தின் 'பல்'சக்கரங்களாய் இருப்போர் பலரும் இவ்விரண்டு பாதகங்களின் பாதுகாவலர்களாகவும் உள்ள னர். இதனை உணராதவர்கள் இல்லை; எனினும், அவற்றை ஒதுக்கும் 'திராணி' உடையவர்களாகவும் இல்லை. இவற்றுக்கு இரையாவோரே பிறரை இரையாக்கவும் செய்கின்றனர். இந்த இருமை நோய்க்கு இணையான தொற்று நோய்தான் வரதட்சிணைக் கொடுமை.

கடவுளையே பேணிக் காப்பாற்றி விட முனைந்து நிற்கும் பரம 'ஆஸ்திகன்', செல்வச் செழிப்பிலே திளைத்து மிதக்கும் தொழிலதிபர்கள், தூய்மைக்கே களஞ்சியமென வெளிச்சமிடும் 'அறவாணர்கள்', கல்விக் கொடைக்கே தங்களை ஒப்படைத்து விட்ட பேராசிரியர்கள், மேட்டுக் குடியினர், மேல்வரிச் சட்டமா வோர், அரசியலாளர், அதிகாரிகள், ஆடவர், பெண்டிர், முதியோர், இளையோர்... யாவரும் வரதட்சிணையை ஏதேனும் ஒரு வடிவிலே விரும்பி வேண்டிப் பேணுவோராகவே உள்ளனர். பெருக்காடி கொண்டு கூர்ந்து நோக்கித் தேடினால் பல நூறாயிர வரில் ஓரிருவர் வரதட்சிணை வலையில் வீழாதவராகவும் அவ் வலையை விரிக்காதவராகவும் இருக்கக் கூடும்; அவர்கள் விதி விலக்கு; 'அப்பாவிகள்' என்று 'புத்திசாலி'களால் வருணிக்கப் படுவர்.

காஞ்சிப் பெரியவர் பெயரைத் திருமண அழைப்பிலே 'பொறித்து', தெய்வ சான்னித்தியம் தேடுவோரும் திருமணத் திலே வரதட்சிணை வாங்காமல்விடுவதில்லை; அந்தப் பெரியவரே

வேதனைப்பட்டாலும், 'அவரெல்லாம் தெய்வப் பிறவிகள் என்று எண்ணி மனச் சான்றை மரியாதையாகச் சமாதி கட்டிவிடுவார்கள். பிள்ளைக் கறிகூட இந்த வரதட்சிணைவாதிகளுக்கு இனிக்கும்.

தாய்க் கொலைக்கும் தாய்மைக் கொலைக்கும் அஞ்சாத ஏதோ ஒரு கொடும்பாவி தொடங்கி வைத்துவிட்ட இந்தக் கொடுமைக்குச் சாத்திர ஆதாரம் காட்டவும் இந்தப் பாவிகள் தயங்குவதில்லை. டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்களின் 'என் சரித்திரம்' படித்தால், இந்த வரதட்சிணைக் கொடுமை தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு நூற்றாண்டுகளுக்கு முன் இல்லை என்பதைத் தெளிவாக உணர முடியும். பெண்ணைப் பெற்றவர்களுக்குச் செலவே இராது; மாப்பிள்ளை வீட்டாருக்கே செலவும் சிரமமும் என்கிறார் ஐயரவர்கள்.

பிராமணச் சாதியார்கள் எத்தனை எத்தனையோ வகைகளில் சமுதாயத்தில் சிறப்புடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டிய நல்லியல்புகள் மிகப் பல உள்ளன. ஆனால், அந்தச் சாதியை இறுகப் பற்றி அரித்து வரும் இந்தக் கெட்ட பழக்கத்தை மட்டும் மற்றச் சாதியாரும் பற்றிக் கொண்டுள்ளனர். மேல் - கீழ், அறிவு - அறியாமை... என்றெல்லாம் வேறுபடுத்திக் கொள்ளாத வகையில் எல்லா நிலைகளிலும் நச்சுக் காற்றாய்ப் பரவியுள்ளது இக் கொடுமை. மகனைப் பெற்ற 'மாதரசி', தானும் ஒருகாலத்துக் கன்னி என்பதையும் வரதட்சிணை நோய்க்கு இரையானவள் என்பதையும் மறந்து, மகனுக்கு வரவிருக்கும் கன்னி, காசுபொழியும் 'காம'தேனுவாக, இல்லை இல்லை, காசுதேனுவாக வரவேண்டுமென வெறியாட்டம் போடுகிறாள். பெண்மையின் மென்மையையும் பதம் பார்த்துக் குதறுவதிலே வரதட்சிணை நச்சுப்பூச்சி வெற்றி பெற்றிருக்கிறது. மண்ணெண்ணெயும் நெருப்புப் பெட்டியும் ஏந்திய மாகாளிகளாக மாமியார்களும் பாலைநிலப்பூசாரிகளாக மாமனார்களும் மாறுவதை நாள் தவறாமல் நாளிதழ்கள் தெரிவிக்கின்றன; செய்தியாளரை எட்டாத வரதட்சிணைக் கொடுமைகள் எத்தனையோ!

இடையிலே எப்படியோ நுழைந்து, சமுதாயத்தைச் சுடலையாக்கி வரும் இந்தக் கொடுமை மபொசியின் சமுதாய உணர்வைத் தீண்டாமல் விடுமா? இலக்கியங்களில் வரதட்சிணைக்குச் சான்று உண்டா என ஒரு வினாவை எழுப்பிக் கொண்டு, வடமொழி இலக்கிய மரபையும் தமிழ் இலக்கிய மரபையும் முன்னிறுத்தி விடை தருகிறார் :

''மிதிலை வேந்தன் ஜனகன் கோசல நாட்டு இளவரசனான இராமனுக்குச் சீதையைக் கொடுக்கிறான். அப்போது தன் மகனுக்குத் தட்சிணை தருமாறு தசரதன் கேட்டதாக வான்மீகத்தில் செய்தி இல்லை. இதற்கு மாறாகத் தன் மகள் சீதைக்குத் 'தட்சிணை' தரும்படி ஜனகன் இராமனைக் கேட்டான். அவன் கேட்ட தட்சிணை, பணம் அல்ல; பிற சொத்தும் அல்ல. இராமனுடைய வீரத்தையே தட்சிணை கேட்டான். சிவதனுசை வளைத்துக் காட்டினால்தான் சீதையானவள் இராமனை மணக்க இசைவாள். இதுதான் ஜனகன் கேட்ட தட்சிணை! இது மணமகன் கோரும் தட்சிணையல்ல; மணமகள் கோரும் 'தட்சிணை'. இந்த வழக்கம் இந்து மதத்திற்கே பெருமை தருவதாகும். பாரதத்தில் வரும் பாஞ்சாலியின் திருமணத்திலும் பார்த்தனானவன் தன் வீரத்தையே தட்சிணை கொடுத்து அவளை மணக்கிறான்.''[73]

விலைகொடுத்து வாங்கும் பொருள், வாங்கியவர்க்கு உடைமையாகிறது; உடையவன் விருப்பம்போல் பொருளைக் கையாளலாம். இது வாணிக உலகிலே கூட 'ஒழுங்கு' எனக் கொள்ளப்படுகிறது. திருமண அரங்கிலே 'விலைமக'னாக வரும் மாப்பிள்ளை ஆதிக்கவாதியாகவும் இருப்பது - தன்னை 'விலை' கொடுத்து வாங்கிய பெண்ணைக் கொடுமைப்படுத்துவதுஎன்பது கலி முற்றிவிட்டதற்கு நல்ல சான்று. மபொசி வீரத்தைத் தட்சிணை என்று குறிப்பது, கைப்பிடிக்கத் துணிகின்ற ஆடவனுக்கு வாழ்க்கையில் இடுக்கண்களை எதிர்த்துப்பேணும் ஆற்றல் உண்டு என்பதை உணர்த்தவேயாகும். வரதட்சிணை வாங்கும் மாப்பிள்ளைகளோ வரும் தொகை கொண்டு வாழ்க்கை நடத்த எண்ணுகிறார்கள் - அல்லது தன் மாமனாரிடமிருந்து 'வாங்கி'த் தன் உடன்பிறந்தாளின் மாமனாருக்குக் கொடுக்கிறான்... வரதட்சிணைப் பேயின் வடிவங்கள் ஆயிரம், ஆயிரம். ஆண்மைக்கும் அறத்துக்கும் புதைகுழி காட்டுகின்ற இந்தக் கொடுமைக்குப் பண்பாட்டு மரபிலே இடமில்லை என்பதைப் புலப்படுத்தவே இந்துக்களால் வேதத்துக்கு அடுத்த நிலையில் போற்றப்படும் இதிகாசங்களிலிருந்து சான்றுகள் தருகிறார், மபொசி.

தமிழ் இலக்கியங்களும் வரதட்சிணைக்கு ஆதரவாக இல்லை :

73. ஷை — பக். 147

> ''சங்க இலக்கியங்களிலோ, இடைக்கால இலக்கியங்களிலோ வரதட்சிணை வாங்கிய மாப்பிள்ளையை நாம் பார்க்க முடியவில்லை. காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லை நிலத்தில் வாழ்ந்த ஆயர் குலத்தாரிடையே 'கொல்லேறு தழுவுதல்' என்னும் வழக்கம் இருந்திருக்கிறது. ஆயர் குடும்பத்திலே ஒரு பெண் பிறந்துவிட்டால், அவளோடு சேர்ந்து காளை மாடு ஒன்றும் வளர்க்கப்படுமாம். அந்தப் பெண்ணை மணக்க விரும்பும் காளையானவன் அவளோடு சேர்ந்து வளர்த்த காளைமாட்டை அடக்கி, தன்வீரத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டுமாம். இந்தக் கொல்லேறு தழுவும் வீரம்தான் மணமகனிடமிருந்து பழங்காலத்தில் மணமகள் பெற்ற தட்சிணை. இதனை இன்று நினைத்தாலும் நம் இதயம் பூரிக்கிறது.''[74]

இப்படியே குறிஞ்சி நிலத்து மணமகன் 'தன்னால கொல்லப்பட்ட புலியின் பற்கள் இரண்டைக் கொண்டுவந்து'... தாலியாக மணமகளுக்கு அணிந்து வரதட்சிணை செலுத்திய மரபை மபொசி எடுத்துக் காட்டுகிறார். மேலும், ஆண்டாள் நாச்சியாரின் பாசுரங்களிலே கண்ணன்—ஆண்டாள் திருமணக்காட்சிச் சடங்குகள் பல வருவதை நினைப்பூட்டி,

> ''...இன்னும் என்னென்னவோ சடங்குகளைத் தன் கனவுக் காட்சியாக ஆண்டாள் கூறுகின்றாள். அதிலே, வரனுக்குத் தட்சிணை கொடுத்ததாகக் கூறப்படவில்லை.''[75]

என்று மபொசி எழுதுகிறார்.

> ''ஒரு வரனுக்குத் தனக்குத் தானமாக வரும் கன்னியைவிட வேறு என்ன தட்சிணை (பொருள்) தேவைப்படுகிறது? வேறு என்ன சொத்துத் தேவைப்படுகிறது?''[76]

என்று அவர் எழுப்பும் கேள்வி, இளைஞர் உலகத்தின் செவி வழிப் புகுந்து மனச்சான்றை எழுப்பாதா என்ற ஆசை பற்றி 'அறைவ'தோடு இப்போது மேற்செல்வோம்.

**சாதிப் பாகுபாடும் வேறுபாடும்**

சமுதாய நலம் கருதுவோர் சாதிப் பிரச்சினை பற்றிக் கருதாமல் இருக்க முடியாது. சாதிக்கொரு நீதி பேசும் மனு

74. ஷை—பக்.147-8
75. ஷை பக்.148
76. ஷை பக்.150

தருமத்தை மறுத்துப் பேசி, மேடைகளை அடைத்துக்கொண் டிருப்போரும் சாதி வெறிக்கு இலக்காகாமல் இல்லை. 'ஆதியில் ஏது சாதி? பாதியில் புகுந்த சாதியில் ஏது நீதி' என அடுக்கு மொழி பேசும் சீர்திருத்தப் போலியார்களும் அந்தரங்கத்தில் சாதிக் கோட்டையின் மதிலுக்கு உரம் ஏற்றுவோராகவே உள்ளனர். சாதிகள் இருக்கின்றன சமுதாயப் பிரிவிலே; அதனாலேயே வெறியும் வெறுப்பும் நிலவ வேண்டுமா என்று சிந்தித்துச் செயல்படுவோர் தமிழகத்திலே மிகமிகமிக...அருமை. சாதி ஒழிப்பை மேடையிலும் சாதிப் பற்றைத் தனிமையிலும் சாதி வெறியைத் திரை மறைவிலும் கொண்டிருப்போரே பொது வாழ்வில் 'பெரிய மனிதர்கள்.'

மபொசியின் ஆளுமை இந்தச் சூழலில் எங்கே முகாமிட்டிருக் கிறது என்பதை உணரவேண்டும். அந்தக் கணிப்பு நம் சமுதாயத் துக்கு நல்லுதவியாகும் என நம்பலாம்.

> ''இளமை தொட்டே எனக்குச் சுயசாதியிடத்தில் பற்று தலோ, பிற சாதி எதனிடமும் பகையோ இருந்த தில்லை. ஆயினும், உயர்சாதி ஆணவத்தை நான் எப் போதுமே வெறுத்து வந்திருக்கிறேன்.''[77]

இக்கூற்றையே மபொசியின் 'சாதிக் கொள்கை'யாக நாம் கொள்ளலாம். 'எனது போராட்டம்' என்ற தலைப்பில் அவர் உருவாக்கியுள்ள தன்வரலாற்றில் பின்வரும் கருத்துரைகளும் நம் கணிப்புக்கு உரியன:

> ...''மிகமிகப் பிற்பட்டுள்ள கிராமணி சாதியினர் முன்னேற்றத்திற்காகவும் 1934 முதல் 1937 வரை தொடர்ந்து நான்காண்டுக் காலம் பணிபுரிந்தேன்...... ...பிற்பட்டவர்கள் என்ற காரணத்தால், கிராமணி சாதியினரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடலானேன்.''[78]

> ''ஒருவர் தாழ்ந்து கிடக்கும் தனது சாதியினரின் முன்னேற்றத்தில் அக்கறை செலுத்துவதோ, அதற்காக ஸ்தாபன ரீதியில் திட்டமிட்டு முயற்சி எடுப்பதோ பிழையல்ல.''[79]

---

77. மபொசி : எனது போராட்டம்—பக். 111
78. ஷை
79. ஷை பக். 113

> ''கிராமணி சாதியாரிலே என்ஜினீயர்களாகவும்; டாக்டர்களாகவும், உயர்தர உத்தியோகஸ்தர்களாகவும் சிலர் இருந்துகொண்டிருக்கின்றனர். அவர்களிலே பலர் அந்த நிலையை அடைவதற்கு நான் உதவி புரிந்திருக்கிறேன்.''[80]

இந்தப் பகுதிகளைப் படிக்கும்போது, 'மபொசியும் சாதிச் சேற்றிலே சிக்கியவர்தான் என்று முடிவுசெய்யத் தோன்றும் ஆனால், பின்வரும் வாக்கியங்களையும் படித்துப் பார்க்க வேண்டியது இன்றியமையாதது.

> ''...தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சாதிகளைச் சார்ந்த மக்களிடத்தில் ஆழ்ந்த அனுதாபம் காட்டி வந்திருக்கிறேன். அவர்களுடைய முன்னேற்றத்தில் மிகுந்த ஆர்வங்காட்டி உழைத்துவந்திருக்கிறேன். 1933—34ஆம் ஆண்டுகளில் நான் அரிசன முன்னேற்றப் பணியில் ஈடுபட்டிருந்தேனென்றால், அதற்குக் காரணம் ஒடுக்கப்பட்டுள்ள சாதிகளிடம் இயற்கையிலே எனக்குள்ள அனுதாபந்தான்.''
>
> ''இந்த வகையில், க்ஷவரத் தொழிலாளர், சலவைத் தொழிலாளர் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டிருக்கிறேன்.''[81]
>
> ''...நான் சுய சாதி வெறியுடன் வேலை செய்யாத காரணத்தால், என் சொந்தச் சாதியினருக்கு நான் எவ்வளவுதான் நன்மைகள் செய்திருப்பினும், அவர்களால் போற்றிப் புகழப்படும் பேற்றினையும் பெருமையினையும் நான் அடையவில்லை. அதற்காக நான் வருந்தவில்லை.''[82]
>
> ''...மதுவிலக்கால் வேலையிழந்தவர்கள்-வாணிபம் இழந்தவர்கள் தங்களுக்கு நேர்ந்த கேடுகளுக்கு என்னையே காரணமாக்கி, என்னை வெறுக்கின்ற தவறான உணர்ச்சியைப் பெற்றுவிட்டனர். நாட்டின் நன்மைக்காக இத்தகைய பழிகளைச் சுமந்துகொள்ள வேண்டியவனாகிவிட்டேன்.''[83]

---

80. ஷை பக்.115
81. ஷை பக். 111
82. ஷை பக். 114-5
83. ஷை பக். 115

ஆக, மபொசியின் சுயசாதிப் பணியெல்லாம் பிற்பட்டோரிடம் கொண்ட இயல்பான அனுதாபத்தால்தான் என்பது உணர்தற்கு உரியது. சுயசாதிப் பற்று அவரை மதுவிலக்குக்கு எதிரணியில் நிறுத்தவில்லை; மதுவிலக்கில் தீவிரமாக இருந்தமையால் தன் சொந்தக் குடும்பத்தினரும் உறவினரும் சாதியினரும் வருமானம் இழக்க நேரிட்டிருக்கிறது.

சாதிப் பணியைப் பொறுத்தவரையில் மபொசியின் ஆளுமையில் ஓர் இரட்டைத் தத்துவம் இடம் பெற்றுள்ளது. ஆதிக்க ஆணவத்தாலோ பிற காரணங்களாலோ ஒடுக்கப்பட்டவர்களிடமும் பிற்பட்டவர்களிடமும் அனுதாபம் கொண்டவர் மபொசி; அந்த அனுதாபம் காரணமாக நாட்டு நலனுக்கு எதிராகவும் செயல்படமாட்டார் மபொசி.

'சாதி' பற்றி அவருடைய நிலையைப் பின்வரும் உரைகள் மேலும் தெளிவுபடுத்தும்.

> "சுய சாதிப் பற்று தவறன்று; பிற சாதிப் பகைதான் தவறானது...இன உணர்ச்சியின்றிச் சுயசாதிப் பற்றையே முதலும் முடிவுமான உணர்ச்சியாக ஒருவர் கொள்வாரானால், அவரது உள்ளத்தில் நாளடைவில் பிறசாதிப் பகைமையும் புகத்தான் செய்யும். ஆம், இந்த இடத்தில்தான் சுயசாதிப் பற்றுதல் பிற சாதிப் பகையாகத் திரிந்து விடுகிறது."
>
> "...முன்னேறிவிட்ட சாதியினர், பின்னடைந்து விட்ட சாதியினரின் முன்னேற்றத்திற்குக் கைக் கொடுப்பதனைத் தங்கள் கடமையாகக் கருதவேண்டும். பின்னடைந்துள்ள சாதிகள் பலவாகையால், அந்தச் சாதிகளும் ஒன்றுக்கொன்று உதவிக்கொள்ள முயலவேண்டும். இப்படிச் செய்தாலன்றிச் சாதிக் கொடுமைகளிலிருந்து தமிழினத்தார் மீள்வதென்பது சாத்தியமில்லை."[84]
>
> "எவ்வளவுதான் பிற்பட்ட சாதியாக இருப்பினும் சரி, ஒரு சாதியிலே இங்கொருவர் அங்கொருவர் உயர் தரக் கல்வி கற்றோ, உயர்தர உத்தியோகம் பெற்றோ, செல்வமும் செல்வாக்கும் பெற்றோ முன்னேறிவிடுவதனால், அந்தச் சாதி முழுவதுமே முன்னேறிவிட்டதாகி விடாது. பிற்பட்ட அல்லது மிகமிகப் பிற்பட்ட சாதிகள்

---

84. ஷை பக். 114

ஒருசேர முன்னேற வேண்டுமானால்; ஒரு பொருளா தாரப் புரட்சியின் மூலம்தான் அது சாத்தியமாகும். இந்த உண்மையைச் சாதி ரீதியில் பணியாற்றிப் பெற்ற அனுபவத்தால் தான் அறிந்து கொண்டேன். அப்படி அறிந்ததன் விளைவாகவும் சாதி முகாமிலிருந்து நான் விடுதலை பெற்றேன்.''[85]

ஆகச் சமுதாயத்திலிருந்து சாதிக் கொடுமை வேரும் வேரடி மண் ணுமில்லாமல் மறைய வேண்டுமானால், எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையார் களும் இல்லை என்பதான பொருளாதாரப் புரட்சி ஏற்பட்டாக வேண்டுமென்பது மபொசியால் தெளிவாக்கப்படுகிறது.

''அரசியல் விடுதலையால் பணக்கார ஆட்சி வலுத்தே நிற்கும். பணக்காரர் தமது நலங் கருதி மக்களிடைச் சாதி மதப் பூசல் முதலியவற்றை மூட்டி மூட்டிப் பிணக்கை வளர்த்தே வருவர். ஆதலின், அரசியல் விடு தலையுடன் பொருளாதார விடுதலையும் பெறுதல் வேண்டும்....

சாதி மதப் பூசல் முதலியன எங்கிருந்து எழுகின் றன? அவற்றை எழுப்புவோர் யார்?... பூசல்கள் எப் பொழுதும் பணக்காரரிடமிருந்தும் படிப்பாளிகளிட மிருந்தும் எழுவது வழக்கம்.... வெறும் அரசியல் உரி மையால் சாதி மதப் பூசல் முதலிய புலி கரடிகளே பெருகி நாட்டைப் பாழ்படுத்தும். மந்திரிமார் ஆட்சி யின் விளைவு நமக்கு எடுத்துக்காட்டாக நம்முன் நிற் கிறது. பொருளாதார உரிமையற்ற வெறும் அரசியல் உரிமை என்பது பணக்காரர் ஆட்சியாய்ச் சாதிமதப் பூசல்களைப் பெருக்கி விரிப்பதாகும். அரசியல் விடுத லையினூடே பொருளாதார விடுதலையும் விரவி நிற்றல் வேண்டும்.''[86]

வேறொரு சூழலில் 1947இல் தமிழ்ச் சான்றோர் திரு. வி.க. மேற் கண்டவாறு எழுதினார். 'பொருளாதாரப் புரட்சியின் மூலம் தான் முன்னேற்றம் - சமுதாய முழுவதற்குமான முன்னேற்றம் உருவாக முடியும் என்ற மபொசியின் கருத்துக்குத் தமிழ் முனிவ ரின் தெளிவுரை உரமூட்டுவதாக அமைந்திருக்கிறது.

85. ஷை பக். 121
86. திரு. வி. க. : இந்தியாவும் விடுதலையும்-பக். 331-333

சாதிவழி இயக்கங்கள் நாளும் நாளும் பெருகி வரும் இன்றைய நிலையில் ஓர் எச்சரிக்கை வழிகாட்டியாகப் பின்வரும் மபொசியின் கருத்துரையைக் கொள்ளலாம் :

> ''தேச முன்னேற்றத்திற்கு ஒத்த வகையில் சாதிய இயக்கங்கள் - சாதிகளிடையே பகையை வளர்க்காமல் நடைபெறுமாயின், அதில் தவறில்லையென்றே இன்னமும் நான் கருதுகிறேன்.... சாதிப் பணிக்கும் தேசப் பணிக்குமிடையில் முரண்பாடு தோன்றுமாயின், உண்மையான தேசபக்தன் சாதிப்பணியிலிருந்து ஒதுங்கத் தயங்கக்கூடாது.''[87]

நாட்டுக்குள் அடக்கம் சாதி; சாதிச் சிறைக்குள்ளே நாட்டைத் திணித் துவிடமுடியாது. எனவே, நாட்டுநலனுக்கு ஊறு இல்லாத வகையில் - நாட்டவர் முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய வகையில் அமைய முடியுமாயின் சாதிப்பணி பெருந்தவறில்லைஎன்பது மபொசியின் ஆளுமை உணர்த்தும் உண்மையாகும்.

உயர் சாதியினரை எதிர்ப்பதே சீர்திருத்தம் என்று கருதும் கருத்தோட்டம் ஓரளவு நம் சமுதாயத்தில் இருக்கிறது என்பதை மறைப்பதில் பயனில்லை. ஆதிக்க நினைப்பும் நிலையும் விளைய எவர் காரணமாயினும் அவர்கள் போக்கைக் கண்டிக்காமல் ஏற்க வேண்டியதில்லை; அதே சமயத்தில் குறிப்பிட்டக் கூட்டத்தார் மேல் சாதியினர் என்ற ஒரு காரணத்துக்காகவே வெறுக்க வேண்டியதில்லை. சாதிப் பாகுப்பாட்டில் வெறியும் வெறுப்பும் இடம் பெறா விட்டால், நாம் என்றுமே முன்னேறப் போவதில்லை; தொழில் வழியாக என்றோ ஏற்பட்டுவிட்ட சாதிப் பகுப்பைப் பிறப்பு வழி ஏற்றத் தாழ்வுடையதாக 'ஆக்கி', முற்போக்கு எண்ணங்களைப் புறக்கணிப்பது முறையாகாது.

> ''பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு சாதி.வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம்; பிறவிமாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது....''[88]

என்று மகாகவி பாரதியார் 'ஆறில் ஒரு பங்கு' என்னும் தம் நூலின் முகவுரையிலே குறித்திருப்பதை இங்கே ஒப்பிட்டுணர்வது நலம். சமுதாயப் பணிகளும் பணிநிலைகளும் மிகப் பல; காலந்

87. மபொசி : எனது போராட்டம்-பக். 126
88. சுப்பிரமணிய பாரதியார் : ஆறில் ஒரு பங்கு

தோறும் இந்தப் பணிகளும் பணிநிலைகளும் அமைப்பு நிலையிலே மாறவும் செய்யும். வைதிகத் தொழிலுக்கென என்றோ உருவான வேதியர் வகுப்பு இன்று புகாத தொழில் இல்லை. அப்படியே வேளாளர், செட்டியார், நாயக்கர், கவுண்டர்... எல்லா வகுப்பினருமே என்றோ வகுக்கப்பட்ட தொழில்களிலே இல்லை. எல்லாரும் எல்லாத் தொழிலும் செய்கின்ற இந்தக் காலத்தில் பிறப்புவழிச் சாதியில் ஏற்றத் தாழ்வுகளை அனுமதிப்பதோ அவை காரணமாக வெறுப்பும் பகைமையும் பரப்புவதோ அறிவுக்குப் பொருந்திய செயலென்று கொள்ள முடியவில்லை.

முன்னேறிவிட்ட 'சாதியார்' என்றும் பிற்பட்ட, மிகப் பிற்பட்ட சாதியார் என்றும் பாகுபாடுகள் இன்றுநிலவுகின்றன. இது உண்மை; அதே சமயத்தில் பகைமைக்கும் வெறுப்புக்கும் இடம் தந்துவிடாமலே இந்த வகுப்புகளிடையேயுள்ள வேற்றுமைகளைக் குறைக்கவேண்டுமென்பதையும் மறந்துவிடக் கூடாது. ஒரு நிகர் சமானமாக மனிதர்கள் வாழ்வதற்குக் கீழ்ச் சாதி உணர்வோ மேல்சாதி வெறுப்போ வழி வகுக்க முடியாது.

முன்னேறிய சாதியினர் பிற்பட்டசாதியினர்க்கு உதவுவதும், எல்லோருமாகச் சேர்ந்து பொருளாதாரப் புரட்சி எழுவதற்கு முயல்வதுமே சாதிக் கொடுமை ஒழிவதற்கு மபொசி காட்டும் வழி எனலாம்.

'மேல்' மட்டத்திலிருப்போர் கீழ் இருப்போரின் நலனில் அக்கறை செலுத்தவேண்டியது போலவே, வரலாற்றுச் சூழ்நிலைக் காரணங்களாலும் பழங்காலத்தில் இடைநுழைந்த சில தவறுகளாலும் 'வசதி'யாக வாழும் மேல்சாதியினரை வெறுக்காமல்—பகைக்காமல் இருப்பதும் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது.

இவ்வகையில் மபொசியின் மனப்பாங்கினைப் பின்வரும் கருத்துரைகளால் தெளியமுடிகிறது:

> "ஒரு சமுதாயத்திலே ஒரு புரட்சிக்காரன் தோன்ற வேண்டுமானால், அவன் அச்சமுதாயத்தில் முன்னேறி விட்ட சாதியிலிருந்துதானே தோன்றமுடியும்?"[39]

மபொசியின் இந்த வினாவுக்கு உடன்பாடாகத்தான் விடை பிறக்கும் என்று சொல்லிவிடமுடியாது. ஒறுத்து ஒதுக்கப்பட்டு

39. மபொசி : பாரதியார் பற்றி மபொசி பேருரை-பக். 239-40

நசுங்கும் கூட்டத்திடையே யிருந்து புரட்சி வெடிப்பதற்கு மிகுந்த வாய்ப்பு உண்டு என்ற வாதத்திற்கு இடம் உண்டு. ஆனாலும், மபொசி தரும் பின்வரும் உண்மைகளை எல்லோரும் ஏற்பார்கள் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை:

''அரசியல் புரட்சிக்கு வித்திட்ட திலகரும் வ.வே.சு ஐயரும் பிறந்த வருணத்தில்தான் பாரதியாரும் பிறந்தார். சமுதாயப் புரட்சிக்கு வழிகோலிய ராசாராம் மோகனரும் தயானந்தரும் எந்த வருணத்தில் தோன்றினார்களோ அதே வருணத்தில்தான் பாரதியாரும் தோன்றினார். அந்தணர் இல்லையென்றால் அடுத்த வரிசையில் வேளாளர் நிற்கக் காண்கின்றோம்.''

''தமிழ் நாட்டிலே அரசியல் புரட்சிக்கு வித்தூன்றியவர்களிலே அந்தணர்களை விட்டுவிட்டால், அடுத்து நிற்பவர் வ. உ.சி. போன்ற வேளாளர்தானே! இதெல்லாம் அந்தண வருணத்தாரின் அல்லது வேளாளச் சாதியாரின் ஆதிக்கமென்று சொல்லிவிட முடியுமா?''

''விடுதலை ஆர்வத்தால்—ஆவேசத்தால்-கலெக்டர் ஆஷைச் சுட்டுக் கொன்றுவிட்டு, தன்னையும் சுட்டுக் கொண்டு மாண்டான் செங்கோட்டை வாஞ்சிநாதன் அது அந்தணச் சாதியின் ஆதிக்கமா? வேளாளரான வ.உ.சி.யைக் கொடுமைப்படுத்தினான் என்பதற்காகத் தானே ஆஷ் துரைமகனை வாஞ்சி கொன்றான். இதனை என்ன ஆதிக்கமென்பது?''

''சிதம்பரம் பிள்ளைக்கு ஆயுள் தண்டனையென்று கேட்டவுடனே காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா என்பவர் நெஞ்சங் கொதித்தெழுந்து, அரச நிந்தனையாகப் பேசி, அதற்காக ஐந்தாண்டுக்கால நாடுகடத்தல் தண்டனை பெற்றார்.''

''ஆந்திரப் பிராமணரான அரிசர்வோத்தம ராவ் என்பவர் சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனையை ஆட்சேபித்துத் தமது 'சுயராஜ்யா' பத்திரிகையில் எழுதியதற்காக மூன்றாண்டுக் கடுங் காவல் தண்டனை பெற்றார்''.

''சிதம்பரனாருக்கும் சிவாவுக்கும் விதிக்கப்பட்ட தண்டனையை ஆட்சேபித்து எழுதியதற்காக 'இந்தியா'

பத்திரிகை ஆசிரியர் சீனிவாசன் ஐந்தாண்டு நாடுகடத்தல் தண்டனைக்கு ஆளானார்". அதே குற்றத்திற்காகத்தான் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் சிறையில் தள்ளப்பட்டார்."

"1911ல் நடந்த நெல்லைச்சதி வழக்கிலே சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 14 பேர்களிலே அவ்வளவு பேரும் சமுதாயத்தில் முன்னேறிய சாதியினரான வேதியரும் வேளாளருமே யாவர்."[90]

மேற்கண்ட வரலாற்று நிகழ்ச்சிகளை அணிவகுத்து நிறுத்திய மபொசி பின்வருமாறு முடிவுரை வழங்குகிறார்:

"நாட்டிற்கு ஒரு நல்லது வந்தால் அதனை அனுபவிப்போர் முன்னேறிவிட்ட சாதியாராக இருப்பதுபோல, கெட்டது வந்தாலும் அதனை எதிர்த்துத் தியாகம் புரிவதிலும் முன்னேறிய சாதியார்தான் முந்திக்கொள்கின்றனர்."[91]

சாதிப் பிரிவுகளிடையே எதிர்மறை உணர்வு புகுந்து பகைமையாக மாறிவிடாமலிருப்பதற்கு இத்தகைய கணிப்பு முறை ஆக்க வழியிலான நல்ல நெறியாகும். இதுபோன்ற கணிப்பு மபொசி ஆளுமையின் தனிமுத்திரையாகும்.

மேலேகாட்டிய கருத்துரைகள் 1982இல்பேசி, 1983இல் அச்சேறிய நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. ஆனால், இந்தக் கருத்தினையே மபொசி உரமாக நெடுங்காலமாகப் போற்றிவருகிறார் என்பதை நினைவூட்டுவது பொருந்தும். அவர்தம் மணிவிழா 1966இல் நடந்தபோது வெளிவந்த மணிவிழா மலரில் பேட்டிக் கட்டுரை ஒன்று இடம் பெற்றுள்ளது. சாதி முறைபற்றி அவரிடம் எழுப்பப்பட்ட வினாவும் அவர் அளித்த விடையும் வருமாறு:

"சாதிமுறையை ஒழிக்க வேண்டுமென்று எல்லோருமே விரும்புகிறார்கள்; பல பெருமக்கள் பல வகைகளில் பல்லாண்டுகளாக அதற்காகப் பாடுபட்டும் வந்திருக்கிறார்கள். என்றாலும், சாதிமுறை ஒழியவில்லையே, ஏன்?"

---

90. ஷை பக். 240-1
91. ஷை பக். 241

"சாதிப் பாகுபாடு அமைக்கப்பட்டுள்ள முறைதான் அதன் ஆயுளை நீட்டித்து வருகிறது. எந்தவொரு சாதியும் மேல்சாதியாக மட்டுமோ, கீழ்ச்சாதியாக மட்டுமோ இல்லை. குறிப்பிட்ட ஒரு சாதியை எடுத்துக்கொண்டால், அது சில சாதிகளைவிடக் கீழ்ச்சாதியாகவும், வேறு சில சாதிகளைவிட மேல் சாதியாகவும் இருந்து வரக் காண்கின்றோம்."

"மேல்சாதி உயர்வு மனப்பான்மை தன்னைத் தாழ்த்துகிறபோது ஒருவர் சாதியொழிப்பை விரும்புகிறார். அவரே தாம் மேல் சாதிக்குரிய சலுகைகளைப் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் சாதிகள் நிலைபெறுவதை விரும்புகிறார். அந்தணர்கள் தான் வேறு யார்க்கும் கீழ்ச் சாதியல்லாத மேல்சாதியாக இருக்கும் வகையில் சமுதாயம் அமைக்கப்பட்டுள்ளது. அதனால்தான் பிராமண எதிர்ப்புணர்ச்சியிலே பிற சாதியினர் உணர்ச்சியளவிலேனும் ஒன்றுபடுகின்றனர். பிராமண எதிர்ப்பு என்பதற்கு வைக்கப்பட்டுள்ள மாற்றுப் பெயர் 'சாதியொழிப்பு' என்று ஏற்பட்டிருக்கிறது. இதனால் தான் சாதிகள் ஒழியவில்லை. துவேஷம் என்பது நஞ்சினும் கொடியது. அதனால் சாதிகள் ஒழியா. சமத்துவ உணர்வினால்தான் சாதிகளைஒழிக்கமுடியும். மக்கள் கல்வியிலே கொண்டுள்ள ஆர்வமும் உத்தியோகத்தில் கொண்டுள்ள மோகமும் அரசியல்வாதிகளின் 'ஓட்டு' வேட்டையும் சாதிகளுக்குப் புத்துயிர் அளித்துவிட்டன. உயர்சாதிக் காரர்கள் சந்தர்ப்பவசத்தால் தாங்கள் அனுபவித்துவரும் சலுகைகளைக் காப்பாற்றிக் கொள்ளச் சாதிப்பாகுபாடுகளை விரும்புகிறார்கள். பின்தங்கிவிட்டவர்களோ புதிதுபுதிதாகச் சலுகைகள் பெறுவதிலே வளர்ந்துவிட்ட சாதிகளோடு போட்டியிடச்சுயசாதிப்பற்றை வளர்த்துவருகிறார்கள். நாட்டில் ஒரு பொருளாதாரப் புரட்சி தோன்றினாலொழிய இந்தச் சாதிப் பாகுபாடு ஒழியாது."[92]

சாதிச் சிக்கலில் உருவாகிவிட்ட நச்சுச் சூழலும், அச்சூழலிலிருந்து சமுதாயம் விடுதலை பெறுவதற்குரிய வழியும் இந்த வினா-விடையிலே தெளிவாக்கப்பட்டுள்ளது.

---

92. சிலம்புச்செல்வர் மபொசி மணிவிழா மலர்-பக். 67-68

சமுதாய உணர்வின் பல்வேறு கூறுகளிலும் மபொசியின் ஆளுமை தனக்குரிய முத்திரையைப் பதித்துள்ளது என்பதைக் குடும்பக்கட்டுப்பாடு, வரதட்சிணைக் கொடுமை, சாதிப்பாகு பாடு...ஆகிய சிக்கல்கள் கொண்டு ஓரளவு விளக்கப்பட்டது. சமுதாய நடவடிக்கைகளில் இன்னும் எத்துணையோ கூறுகள் உள்ளன. அவை எல்லாவற்றையும தொகுத்தும் வகுத்தும் காட்டுவது இங்கு நம் நோக்கமன்று. சில கூறுகளை விளக்கு முகத்தான் எல்லாவற்றிலும் மபொசியின் ஆளுமை எவ்வாறு தொழிற்படும் என்பதைச் சுட்டிக் காட்டுவதே இவண் மேற் கொண்ட முயற்சியாகும்.

## சமயத்துறை

### காந்தி வழி

முற்போக்கு நாட்டத்துக்கு எதிர்மறையானது சமய வாதம் என்று கருதுவோர் உண்டு. ஆயின், காந்தியடிகளைத் தேசிய வாழ்வின் நாயகத் தெய்வமாக ஏற்றவர் மபொசி; ஆதலால் அவர் வாழ்விலும் பணியிலும் சமய ஊற்றம் இருக்குமென்பது எதிர்ப்பார்பது இயற்கை. 'சமயம் கலவாத அரசியல் என்பது எனக்குக் கிடையாது......மதம் இல்லாத அரசியல் மரணக்குழி போன்றது. அத்தகைய அரசியல் ஆன்மாவையே அழித்து விடும்' - என்பது காந்தியடிகளின் கருத்து.[93] மெய்ஞ் ஞானத் துணிவினை இழிபடுபோர், கொலை, தண்டம் பின்னியே கிடக்கும் அரசியல் தனில் பிணைத்திடத் துணிந்தவராகக் காந்தியடிகளைப் பாரதியார் அறிமுகப்படுத்தியுள்ளார். காந்தியடிகளையும் பாரதியாரையும் தம் வாழ்வின் அமைப்புக்குப் பொறுப்பாளாராகக் கருதும் மபொசியின் ஆளுமையில் சமயம் பெறும் நிலையினைக் காணுதல் வேண்டும்.

### இறையுணர்வு

மயிலாப்பூர், குயப்பேட்டையில் பிள்ளைப் பருவத்தில் மபொசியின் குடும்பத்தினர் குடியிருந்தனர். திடீரெனக் குடிசை தீப்பற்றி எரிந்தது. 'ஒரு நிமிடம்' அவர் பெற்றோர்கள் இந்த விபத்தினைத் தெரிந்து கொள்ளாமலிருந்தால் அந்தக் குடும்பத் தின் குழந்தைகள் யாவருமே இறந்திருக்க வேண்டும். அந்த நிலையைக் குறிப்பிடும்போது,

---

93. காந்தியடிகள் : காந்தி நூல்கள் தொகுப்பு 5—பக்.8

> ''புதிய தமிழகம் படைக்கும் புனிதப் பணியிலே,
> தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழுக்கே முதலிடம்
> தேடித் தரும் பணியிலே ஈடுபடுத்தும் விருப்பத்தால்
> இறைவன் அன்று என்னைக் காப்பாற்றி விட்டான்
> அந்த அருளாளனுக்கு எனது அஞ்சலி உரித்தாகுக.''[94]

என்று எழுதுகிறார். குழந்தைப் பருவத்திலே பிழைத்தது இறைவன் திருவுளக் குறிப்பென்பது அவர் நம்பிக்கை.

மற்றும் ஓர் இடத்தில் தாம் ஒரு 'புத்தகப் பித்தன்' என்பதை விளக்கும் இடத்திலும் இறையருளே உதவியதாகக் குறிப்பிடுகிறார்.[95] ''புத்தகங்களைச் சேகரிப்பதிலே நான் பேராசை பிடித்தவன். அந்த ஆர்வத்தைப் பொருள் சேர்ப்பதிலே நான் காட்டியிருந்தால், இதற்குள் பெரும் பணக்காரனாகியிருப்பேன். ஆனால், தெய்வசக்தி என்னை வேறு திசையிலே நடத்திச் செல்கிறது''[96] என்ற அவர் குறிப்பும் மனங்கொளத் தக்கது.

அமராவதிச் சிறையிலே உருக் குலைந்ததோடு உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டு ஊசலாடிய நிலையிலே 'இன்று இரவு தூங்கினால்தான் உயிர் இருக்கும்' என்று மருத்துவர் 'முடிவு' தெரிவித்துவிட்டார். அப்போது அவருக்கு இன்றியமையாத தூக்கத்தைக் கொடுத்தது வள்ளல் பெருமானின் மகாதேவ மாலை. ''அன்பர் சிதம்பர பாரதி தேசபக்தியோடு தெய்வபக்தியும் உடையவர். என்னிடம் மிகுந்த அன்புடையவர். அதனால் நான் பிழைக்க வேண்டுமென்று இதயபூர்வமாக இறைவனைப்பிரார்த்தித்து, 'மகாதேவ மாலை'யைப் பாடத் தொடங்கினார். பாட்டைக் கேட்டுக்கொண்டே... தூங்கிவிட்டேன்! மறுநாள் காலை 7 மணிக்குக் கண்விழித்தேன்''[97] இது மபொசி தரும் செய்தி:

> ''திருவருட்பா மகாதேவ மாலை மரணத்தி லிருந்து
> என்னைக்காத்தது, மரணமில்லாப் பெருவாழ்வு பெற்ற
> வள்ளலார் பாட்டல்லவா!''[98]

என்று தெய்வத் திருப்பாடலின் ஆற்றலை நன்றியுணர்ச்சியோடு குறிப்பிடுகிறார்.

---

94. மபொசி : எனது போராட்டம்—பக்.42
95. ஷை பக்.105
96. ஷை பக்.106
97. ஷை பக்.257
98. ஷை பக்.259

**நினைந்துருகும் அடியாரை நைய வைத்தான்**

மற்றொரு சிக்கலான - இதயத்தைப் பிழியும்படியான -ஒரு கட்டம். அங்கும் மபொசி ஆளுமைக்கு இறை நம்பிக்கையே உரம் ஊட்டியதை உணர்கிறோம்.

> ''சிறைக்குத் திரும்பிய இரண்டாவது நாளன்று என் தந்தையாரிடமிருந்து எனக்கு ஒரு தந்தி கிடைத்தது. அதில் மனைவியின் உடல்நிலை அபாய கட்டத்தை அடைந்து விட்டதாசக் குறிப்பிடப்பட்டிருந்தது. மனைவிக்காகக் கடவுளைப் பிரார்திப்பது தவிர வேறு எதுவும் செய்ய வழியற்றவனாக நான் இருந்தேன். இந்த மாதிரி நேரங்களில்தான் தெய்வ நம்பிக்கையும், பிரார்த்தனையும் மனத்துக்கு ஆறுதல் அளிக்கின்றன. அந்த நம்பிக்கையும் வழிபாடும் இல்லையானால், மனிதன் தற்கொலையை நாடுவதைத் தவிர வேறு வழியில்லையல்லவா![99]''

மேலும் எழுதிச் செல்கிற மபொசி,

> ''இறை நம்பிக்கை எனக்கிருந்தில்லையானால், எனது வாழ்க்கை இன்று எந்த நிலையில் இருந்திருக்குமோ, நானறியேன். அதனைக் கற்பனை செய்து பார்க்கக் கூட நான் விரும்புவதில்லை.''[100]

எனத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

வாழ்க்கைத் துணைவியாரின் மரணப் போராட்டத்தின் போது அருகிலிருக்கப் பரோலில் வெளிவந்தவர், இறையருளால் அவர் பிழைப்பதைக் காண முடிந்தது. ஆனால், துன்பத் தொடர்கதையிலே வேறொரு திருப்பம் ஏற்பட்டது. மனைவியை 'வழியனுப்ப' வந்தவர், பிள்ளைப் பருவம் முதலே செல்லமாக வளர்த்து ஆளாக்கிவிட்ட பாட்டியை 'வழியனுப்பி' விட்டு வேலூர்ச் சிறைக்குச் சென்றார். இந்த நிகழ்ச்சியை எழுதும் பாரதி காதலராகிய மபொசிக்கு ஒரு பாடல் நினைப்பில் எழுகிறது :

> பேரன்பு செய்தாரில் யாவரே
> பெருந்துயர் பிழைத்து நின்றார்?
> ஆரன்பு நாரணன்பால் இரணியன் சேய்
> செய்த்தினால் அவனுக்குற்ற

99. ஷை
100. ஷை பக்.260

கோரங்கள் சொல்லத் தகுமோ? பாரத நாட்
டில்பக்தி குலவிவாழும்
வீரங்கொள் மனமுடையார் கொடுந்துயரம்
பல அடைதல் வியத்தற் கொன்றோ?[101]

இறைவன்பால் பேரன்பு செய்பவரில் எவருமே பெருந்துயரடை வதிலிருந்து தப்புவதில்லையாம். நாரணன்பால் நிறைந்தஅன்பு செலுத்திய பிரகலாதன் வாழ்வில் நிகழ்ந்த கோரங்களைச் சொல்லி முடிக்கவா முடியும்? பாரத நாட்டிலே பக்தி குலவி வாழ்வோர் கொடுந்துயர் அடைதலில் வியப்பதற்கு ஒன்று மில்லையாம்.

**சமய வீரம்**

நமக்கு ஒரு கேள்வி: பரமன்பால் பக்தி செலுத்தினால் துன்பம் கணக்கின்றி வருமென்றால் - வருவதிலே வியப்பேதும் இல்லையென்றால் - அந்தப் பக்தியைக் கட்டி அழுவானேன்!

இந்தக் கேள்விக்கு உரிய விடையைப் பாரதியார் ஓர் அடை மொழியினுள் குறிப்பாகப் பொதிந்து வைத்துள்ளார். 'பக்தி குலவி வாழும் மனமுடையார்' என்று சொல்லிவிடாமல், 'வீரங் கொள் மனமுடையார்' என்று வரைந்திருக்கிறார். பக்தி செலுத்துவதால் துன்பம்- சோதனைகள்- வருமென்பதை உணர்ந்தே செலுத்தும் அவர்கள் 'வீரம்' உடையவர்களாம். 'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தான்', என்ற திருமுறை வாசகமும், கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறல் படைத்த அடியார் சிறப்பைக் குறிப்பிடும்போது,

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ[102]

என்றெழுதும் சேக்கிழார் வாக்கும் இங்கு நினைவு கூரத்தக்கன.

தேசப் பணியினை ஈசன் பணியாகப் பக்தியுடன் ஆற்றிய மபொசி சுடச்சுடரும் பொன்போன்றவர். பக்தி வேக்காடும், வேக்காட்டில் பக்தியும் அவர்தம் ஆளுமைச் சிறப்பாகும்.

பல்வேறு பட்டைகொண்ட ஒளிமணி வைரமாகப் பொலிவு கொண்ட மபொசியின் ஆளுமை பல வகையில் சிக்கல் மிக்கதாகக்

101. சுப்பிரமணிய பாரதியார்
102. சேக்கிழார் : பெரிய புராணம் : திருக்கூட்டச் சிறப்பு-9

காட்சியளிக்கும். ஒளிர்மணியின் பல்வேறு பட்டைகளிலிருந்து புறப்பட்டொளி வீசும்போது, காண்பார் கண்ணுக்கு ஒருவகைக் குழப்பம் ஏற்படக்கூடும்தானே!

சமய அரங்கிலே மட்டும் நிற்போர் போல முதலும் முடிவு மாகச் சமயத் துறையோடு மட்டும் மபொசி நிற்பவரல்லர். பல திறப் பணிகளிடையே உள்ளக் கோயிலில் உடையவன் திருவுரு வத்தை அழகொழுக எழுதிப்பார்க்கும் மபொசிக்குச் சமய உணர்வும் ஆளுமைச் சோதனைக்கு உட்படுகிறது.

**இனவுணர்வு : சமய உணர்வு**

மொழிப் பற்றுக் காரணமாகத் தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழுக்கே முதன்மை என்பது மபொசி கொள்கை. கூத்தப் பெருமானை மனத்துறை நாயகராக வழிபடும் இந்து வாகவும் இருக்கிறார். மொழி எல்லையிலே ஒரு கட்டுப்பாடு; சமய எல்லையிலே ஒரு கட்டுப்பாடு. மொழி—சமயம் : இவ் வுணர்வுகள் உடையோர்க்கு ஏற்படும் வரையறைக் கட்டுப்பாடு ஒருபால்; கட்டுக்கு அடங்காமல் வளரும் உறவு நிலை மற்றொரு பால். உரிமைக்கு உரிய நிலையும் உறவுக்கு உரிய நிலையும் மோதல் உண்டாக்காமல் இருக்க வேண்டுமே!

இதைத் தெளிவுபடுத்த வேண்டுமாயின்—மபொசி தமிழரா-அல்லது இந்துவா? தமிழ் பேசுவோரில் இந்துஅல்லாதவர் உண்டு இந்துக்களிலே தமிழர் அல்லாதவர் உண்டு. மபொசியின் ஆளுமை இந்த இருமை நிலையை எப்படிச் சமாளிக்கிறது?

> ''நான் 'தமிழன்' என்னும் இனவுணர்வுடையவன். தமிழ் பேசும் எல்லா மக்களுக்கும் இந்த உணர்வு வேண்டுமென்றும் எண்ணுபவன். ஆயினும், தமிழன் என்ற வகையிலே எனக்கு இந்த உலகிலுள்ள உறவினர் கள் சுமார் நாலரைக் கோடிப் பேர்தான். ஆம், எனக் குள்ள மொழிப்பற்றும் இனப்பற்றும் நாலரைக் கோடி மக்களோடுதான் என்னை இணைக்கின்றன. அதற்கு மேல் செல்வதற்கு அந்தப் பற்றுகள் எனக்குப் பயன்பட வில்லை.''[103]

இந்தப் பகுதியைப் படிக்கும்போது, தமிழின உணர்வினைக் காதலிக்கும் மபொசிக்கு அந்த உணர்விலே நிறைவு ஏற்பட வில்லை போல் தோன்றுகிறது. அவருக்கே நிறைவு தாராத

103. மபொசி : ஆன்மீகமும் அரசியலும்—பக்.73

ஒன்றைப் பிறரும் ஏற்கவேண்டுமென்று கருதுகின்றாரே எனவும் குறைகாணத் தோன்றும்.

ஆனால், ஆன்ம நேய ஒருமைப்பாட்டு வழியிலே சிந்தனை செலுத்தும் சிலம்புச் செல்வர் இப்படிச் சொல்வதற்குக் காரணம் இருக்க வேண்டுமன்றோ? உரிமை எது, உறவு எது என்பதைத் திட்டவட்டமாக வரையறை செய்து 'உரிமைக்கு எல்லை வேங்கடம், உறவுக்கு எல்லை இமயம்' என்ற முழக்கத்தை உருவாக்கியவர் மபொசி. தனக்கென அமைத்துக்கொண்ட ஒரு வீட்டினைப் போற்றி மகிழும் ஒருவன் அந்த வீட்டுக்குள்ளேயே கிடக்கவேண்டுமென்பதில்லையே. அண்டை அயலில் உள்ள வீட்டாரோடும் உறவு கொள்ளாதிருப்பானாயின் 'அளவளாவில்லாதான் வாழ்க்கையாக முடியும், அவன் வாழ்வு. தன் உரிமையில் பிறர் தலையிடாமலும், அப்படியே பிறர் உரிமையிலேதான் தலையிடாமலும் உறவாடுதல் சமுதாய வாழ்க்கைக்கு இன்றியமையாதது. உரிமை எல்லைக்குள் இருப்பது கடமை; பிறரோடு உறவாடுவதும் தேவை. இது உலகியல் (லௌகிகம்) எல்லையில்—அரசியல் எல்லையில் வகுத்துக்கொண்ட கோட்பாடு.

இப்படியே இறை நம்பிக்கை கொண்ட மபொசிக்கு ஆன்மீகத்திலும் உரிமைக்கு ஓர் எல்லையும் உறவுக்கு ஓர் எல்லையும் உண்டு. தாம் 'இந்து' என்பதிலே பெருமை கொள்பவர் மபொசி. இந்துமதம் அவர் உரிமை அகம். 'இந்து' என்ற உரிமை எல்லையிலே தமிழரல்லாதாரும் இந்துக்களாக—அவருடைய உரிமை எல்லைக்கு உட்பட்டவராக இருக்கிறார்கள்.

இனவுணர்விலே ஓர் எல்லை; சமய உணர்விலே ஓர் எல்லை. இருவகையிலும் எல்லை கோலுவது தேவை; ஒழுங்கானது. இரண்டும் எதிரணி கூட்டவேண்டியதில்லை; என்றாலும், சிக்கலான ஒரு நிலைதான் என்று கருதுவதற்கு இடமுண்டு; எச்சரிக்கையாக இல்லையென்றால் மோதல் ஏற்படக்கூடிய சிக்கல்தான்.

இராமாயணத்திலே இப்படி ஒரு சிக்கலான நிலை உண்டு. அறத்தின் சார்பிலே நிற்பவன் வீடணன்; தாய் தந்தை உடன் பிறப்பு என்றெல்லாம் தயங்கி அறத்தைக் கைவிட அவனால் முடியாது. 'தாயவை தந்தை மாரென்று உணர்வரோ தருமம் பார்ப்பார்'[104] என்பது அவன் நிலை. வீடணன் அறத்தின் சார்

104. கம்பராமாயணம் : கும்பகருணன் வதைப் படலம்—142

பின்னாய் இராமபிரான் பக்கலிலே நேர்ந்ததைச் சரியெனவே கும்பகருணனும் ஏற்றுப் பேசுகிறான்:

மலரின்மேல் இருந்த வள்ளல்
வழுவிலா வரத்தி னால்நீ
உலைவிலாத் தருமம் பூண்டாய்
உலகுள தனையும் உள்ளாய்
தலைவன்நீ உலகுக் கெல்லாம்
உனக்கது தக்கதே யால்[105]

என்று கும்பகருணனே கூறுகிறான். வீடணன் செயல் முறை யானதே என ஏற்கும் கும்பகருணன், அதே நெறியிற் பட்டு இராமன் பக்கல் சேர மறுக்கிறான்—உறுதியாக மறுக்கிறான்.

நீர்க்கோல வாழ்வை நச்சி
நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற்கு
உயிர்கொடாது அங்குப் போகேன்[106]

என்பது கும்பகருணனின் தெளிந்த முடிவு. 'வளர்த்துவிட்டுப் போர்க்களம் நோக்கி அனுப்பிய தமையனுக்காக உயிர்விடாமல் மீண்டும் அவன்பால் செல்லேன்' என்ற பேச்சிலே அவன் உரம் காணலாம். யாராக இருந்தாலும், தவறு செய்வராயின் அவர் சார்பிலே நிற்றல் தகுமோ என வினவக் கூடுமன்றோ? அவ்வாறு எழக்கூடிய வினாவுக்கு விடை கூறுகிறான் கும்பன். 'திருத்த முடிந்தால் திருத்த வேண்டியதுதான். திருத்த முடியாவிட்டால் எதிராளியிடம் சேர்வது (எனக்குச்) சரியாகாது. அப்படி ஒரு நிலை வருமாயின் உண்டவீட்டுக்கு உயிர்கொடுப்பதே (என்) நெறி. உணவு ஊட்டியவனுக்கு முன் உயிரை விடுவதே உண்டவனுக்கு உரியது' என்கிறான் கும்பகருணன்:

கருத்திலா இறைவன் தீமை
கருதினால் அதனைக் காத்துத்
திருத்தலா மாகி னன்றோ
திருத்தலாம் தீரா தாயின்
பொறுத்துறு பொருளுண் டாமோ
பொருதொழிற் குரிய ராகி
ஒருத்தரின் முன்னம் சாதல்
உண்டவர்க்கு உரிய தம்மா[107]

105. ஷை 156
106. ஷை 155
107. ஷை 157

வீடணன் தன்னைக் காண வந்ததற்காக வருந்துகிறான், கும்பகருணன். 'தம்பீ, என் துயர் தவிர்க்க நினைத்தால் உடனே கார்மேக வண்ணனாம் காகுத்தனிடம் சென்றுவிடு' என்கிறான். தம்பியை இராமனிடம் அனுப்புவதில் அவசரம் காட்டுகிற அவன், மரணத்தைத் தழுவுவதே தனக்கு உரிய கடன், புகழ் என்கிறான்.

வீடணன் தன்னைக் காண வந்ததற்காக வருந்துகிறான், கும்பகருணன். 'தம்பீ, என் துயர் தவிர்க்க நினைத்தால் உடனே கார்மேக வண்ணனாம் காகுத்தனிடம் சென்றுவிடு' என்கிறான். தம்பியை இராமனிடம் அனுப்புவதில் அவசரம் காட்டுகிற அவன், மரணத்தைத் தழுவுவதே தனக்கு உரிய கடன், புகழ் என்கிறான்.

புலையுறு மரணம் எய்தல்
எனக்கிது புகழதேயால்[108]

கும்பகருணன் 'கட்சி'யும் நெறியின்பாற் பட்டதேயாகும். செய்ந்நன்றி யறிந்து செஞ்சோற்றுக் கடன் கழிப்பது அவன் நிலை; 'தம்பியார் இன்றி மாண்டு கிடப்பனோ தமையன் மண்மேல்' என்ற வினாவிலே தன் பாசத்தையெல்லாம் கரைத்துக் கொட்டுகிறான்.

வீடணனின் அறச் சார்பும் தருமமே; கும்பகருணனின் செய்ந்நன்றி யறிந்து உயிர் கொடுக்கத் துணிவதும் தருமமே. 'சிக்கல்' எங்கே வருகிறது? தருமத்தின் இரு கூறுகள் இணைந்து நிற்க முடியாமல் எதிரெதிர் அணிகளிலே இடம் பெற்றுவிட்டன. இதைத்தான் 'தருமசங்கடம்' என்பது.

மபொசியின் குறிக்கோள் நெறியிலே நல்ல தமிழனாகவும் இருக்கவேண்டும், நல்ல இந்துவாகவும் இருக்கவேண்டும். தமிழன் என எண்ணும்போது தமிழரல்லாத இந்துக்களை நினைய வேண்டியுள்ளது; இந்து என எண்ணும்போது இந்துவல்லாத தமிழர்களை நினையவேண்டியுள்ளது.

> ''நாலரைக் கோடிக்கும் அப்பாலுள்ள மக்களோடு நான் உறவு கொள்ள வேண்டுமா, வேண்டாமா? 'உறவு கொள்ளவேண்டும்' என்றால், அதற்கு ஒரு சாதனம் வேண்டாவா? அந்தச் சாதனம்தான் மதம்.

---

108. ஷெ. 156

> அதாவது, இந்துமதம். நாம் இந்துவாக இருப்பதால், ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மக்களோடு உறவு கொள்ளமுடிகிறது.[109]

இந்துவாக இருந்து, தமிழரல்லாதா ராயினும் 'இந்து' என்ற கூட்டத்தாரோடு இணைய விரும்புகிறார், மபொசி; 'இந்த உறவுக்காகத்தான் நான் இந்துவாக இருக்கிறேன்; இனியும் அப்படியே இருக்க விரும்புகிறேன்' என்று மேலும் விரிவுரைக் கிறார். சர்வ மத மாநாடு ஒன்றில் (ஈரோடு: 19-12-76) பேசும் போதும், ''தமிழ் நாட்டிலுள்ள நாம் எல்லோரும் தமிழ்மொழி யின் மூலமாக ஒன்றுபடுகிறோம்; ஒரே இனமாக வாழ்கிறோம். ஆனால், தமிழ் நாட்டிற்கு வெளியே வேறு மாநிலங்களிலுள்ள—வேறு நாடுகளிலுள்ள—மக்களோடு நாம் உணர்ச்சி பூர்வமாகப் பழகுவதற்கு நமது மொழி கைகொடுக்க வில்லை......மொழி வேறுபாடுடைய பல்வேறு தீவுகளாக வாழ்வோரையெல்லாம் ஒன்றுபடுத்த ஒரு சாதனம் தேவைப்பட்டது. அந்தச் சாதனம் தான் மதம்... என்று விளக்கியுள்ளார், மபொசி.

'உணர்ச்சி பூர்வ'மாக ஒன்றுபடுவதற்கு மதம்தான் சிறந்த கருவியா என்பதிலே கருத்து வேறுபாட்டுக்கு இடம் உண்டு. ஒரே சமயத்தைச் சேர்ந்த நாட்டினர் மோதுவதும், அப்படி மோதுவ தால் உலகப்போர் அபாயம் தொடர்ந்து மனித குலத்தையே அச் சுறுத்தவதும் கண்டுவருகிறோம். எனவே, 'உணர்ச்சி பூர்வ'மாக ஒன்றுபடுவதற்கு வாய்ப்பு இல்லை என்று மறுக்கவேண்டிய தில்லை என்றாலும், முழுவதாக ஏற்றுக்கொள்ளவும் தயக்கம் இருக்கிறது என்றே எண்ணவேண்டியுள்ளது.

ஒரே மொழிக்குரியா ரிடையே மோதல்கள் இல்லையா? இந்தக் கேள்விக்கும் இடம் இருக்கிறது.

மோதலுக்கு மனித இனத்தினரிடையே இருக்கிற பல்வேறு மேலாண்மை (ஆதிக்க) ஆசையே காரணம். ஆதிக்கவாதிகளுக் குத் தெய்வமும் ஒன்றுதான், மொழியும் ஒன்றுதான்; எதையும் தகுந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஒதுக்கிவிட—ஒடுக்கிவிடத் தயங்கமாட்டார்கள்.

இந்தச் சிறப்பு நிலையை மறந்துவிட்டுப் பொதுநிலையை மட்டுமே மனத்தில் கொண்டுதான் மொழிவழிப் பற்றையும் சமயவழிப் பற்றையும் பற்றி மபொசி பேசுகிறார் என்று கொள்ள வேண்டும்.

---

109. மபொசி : ஆன்மீகமும் அரசியலும்—பக்.73

> தமிழரல்லாத இந்து மக்களோடு உறவு கொள்ளத்தான் இந்த மாநாட்டிற்கு நான் ஓடோடிவந்தேன்.''[110]

என்று கூறும்போதே தொடர்ந்து அதிலுள்ள 'குறைபாடு' பற்றியும் குறிப்பிட அவர் மறக்கவில்லை.

> ''இதிலேயும் ஒரு குறைபாடு இருக்கத்தான் செய்கிறது. நான் இந்துவாக இருப்பதால், என் அண்டை வீட்டுக்காரரான அந்தோணிசாமியோடும் என் எதிர்வீட்டுக்காரரான அப்துல்காதரோடும் நெருங்கி உறவு கொள்ள என்னால் முடியவில்லை. இந்த இடத்திலேதான் மொழி எனக்குக் கைகொடுக்கிறது. அந்தோணிசாமியும் அப்துல்காதரும் மதத்தால் எனக்கு அந்நியரானாலும், அவர்களும் என்னைப் போலத் தமிழையே தாய்மொழியாகக் கொண்டவர்களாதலால், அவர்களோடு இன அடிப்படையில் உறவு கொள்ள என்னால் முடிகிறது.''[111]

என்று அவர் எழுதும்போது, 'இந்து' என்ற எல்லைக்குள் நிற்பதால் ஏற்படக்கூடிய 'குறை' நீங்குவதற்கு மொழிவழி இன உணர்வு உதவுகிறது என்பதைச் சுட்டுகிறார்.

> ''மதம் பிரிக்கிற இடத்திலே இனம் பிணைக்கிறது
> இனம் பிரிக்கிற இடத்திலே மதம் பிணைக்கிறது''[112]

என்று அவர் தரும் முடிபு ஒரு சூத்திரமாகவே அமைகின்றது. எந்த சிக்கலுக்கும் குறைக்கும் இடையே நன்னெறி காணும் மபொசியின் ஆளுமையை இங்கே உணரமுடிகின்றது. 'தர்ம சங்கடம்' சோதனையாக உருப் பெறும்போது தம் நுண்மாண் நுழைபுலம் கொண்டும் சான்றாண்மை கொண்டும் சோதனையில் வெல்ல வழி காண்பது மபொசியின் இயல்பு.

**சமயச் சிறைக்குள் சிக்காத சமரசம்**

தம்மை இந்து என்று கட்டுப்படுத்திக்கொள்வதால் பிற சமயங்கள்பால் காழ்ப்புக் கொண்டவரோ என்ற ஐயம் எழுவ

---

110. ஷை பக்.73
111. ஷை பக்.73-74
112. ''மொழிவழிப்பட்ட இனமும் ஆன்மீக வழிப்பட்ட மதமும் பரஸ்பரம் பகைகொண்டவை யல்ல.'' —ஆன்மீகமும் அரசியலும்—பக்.133 ''......இந்த இரண்டுக்குமிடையே வேற்றுமை இருக்கலாம். ஆனால், விரோதம் இல்லை'. ஷை பக்.166

தற்கு இடம் இல்லை. அந்தோணிசாமியோடும் அப்துல் காத்ரோடும் உறவுகொள்ள நினைப்பதை மேலே கண்டோம். மேலும், ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையினை வகுத்துக் கொடுத்த வள்ளலாரிடம் ஈடுபாடு கொண்டவரிடத்துப் பிற மத வெறுப்புக்கு இடம் இருக்க முடியாது என்பது தெளிவு. உயிர்க் கூட்டத்திடமே ஒருமைப்பாட்டு உரிமை காண நினைக்கும் வள்ளலாரின் தொண்டரிடம் எந்தத் துறையிலும் 'வெறி' இருக்க முடியாதன்றோ?

தனிப்படக் கூத்தப்பெருமானை வழிபடு தெய்வமாகவும், இந்து சமயத்தை நெறியாகவும் கொண்டவர்தான் மபொசி. அதனால், அவர் பிற தெய்வப் புறக்கணிப்புக் கொண்டவர் என்பதற்கு இடமில்லை.

> "எல்லாவற்றிலும் உள்ளதாக—எல்லாவற்றிற்கும் அப்பாலும் உள்ளதாகச் சொல்லப்படும் பரம்பொருளான சிவம், சைவம் என்பதற்குள்ளே மட்டும் சிறைப்படுவதில்லை."[113]

'பரம்பொருளான சிவம்' என்ற தொடரிலே தம் சைவப் பற்றைக் காட்டத் தயங்காத மபொசி, அந்தப் பரம்பொருள் சைவம் என்ற சிமிழுக்குள்ளே சிறைப்பட்டு ஒடுங்கிவிடாது என்பதையும் தெளிவாகவே குறிப்பிடுகிறார்.

சமயம் என்பது ஆன்மீக சாதகன் பின்பற்றுதற்கு உரிய வழி அந்த வகையில் மபொசி பின்பற்றும் சமயம் சைவம், ஒரு வழியைப் பின்பற்றுகிறவன் இன்னொருவன் பின்பற்றுகிற வழியைப் பழிக்க வேண்டியதில்லை. ஓர் ஊருக்குப் போய்ச்சேர வழிகள் பல இருக்கும். அவரவர்க்கு ஏற்படும் வாய்ப்பு வசதி சூழல்களுக்கு ஏற்ப ஒரு வழியிலே பயணம் செய்து, குறிப்பிட்ட ஊரினைச் சென்றடைவர். "இந்த வழி கோவைக்குப் போகிறது; அந்தச் சாலையும் கோவைக்குப் போவதே; அதோ தெரிகிற வழியாலும் கோவையை அடையலாம்..." என்று சொல்லிக் கொண்டேயிருந்தால் என்றுமே கோவைக்குப் போய்ச் சேர முடியாது. சமரசம் ஒரு சமயம் அன்று. சமரச சுத்த சன்மார்க்கம் என்று பெயரிட்டது ஒரு சமயமாகலாம். ஆனால், சமரச உணர்வு என்பது சமயம் ஆகாது.

---

113. மபொசி: ஆன்மீகமும் அரசியலும்—பக்.44

மபொசி சமரச உணர்வு கொண்ட சைவராக வாழ்கிறார். சமரச உணர்வு சமரச சுத்த சன்மார்க்க வழிக்கு அவரைக் கொண்டு சேர்க்கக் கூடும். வள்ளலார் முதலில் சைவராக—நல்ல சைவராக—வாழ்ந்தவர்; பின்னர்த் தனிப்பெருங் கருணை நெறியால் அருட்பெருஞ் சோதி கண்டு சமரச சுத்த சன்மார்க்க சமயத்தை வகுத்து, வெற்றி கண்டார். வெற்றிச் சாதனை பின் வந்தது; முன் இருந்த நிலை சமரச உணர்வு கொண்ட சைவ நெறி. மபொசியின் நிலையும் அதுதான்.

> ''எழுபது ஆண்டுகளுக்கு மேலும் வாழ ஆண்டவன்
> அனுமதித்தால் ஞானமார்க்கத்தை நாடுவது''[114]

தம்முடைய வருங்கால வேலைத் திட்டங்களில் முடிவானதாக 1966இல் தெரிவித்திருக்கிறார். ஆண்டவன் திருவருள் மபொசியை எண்பதுக்கு மேலும் வாழ அனுமதித்துள்ளது. நாமும் அவரை ''இன்னுமோர் நூற்றாண்டு இரும்'' என இறைவன் திருவருளைச் சிந்தித்து வழுத்துவோம். அவர் குறித்துள்ளபடி ஞான மார்க்கத்தை முழுமையாக நாடுவாராயின் சமரச சுத்த சன் மார்க்கியாய்—சமயங் கடந்த ஞானியாய் மலர்வார் என நாம் நம்பலாம்.

இன்றைய நிலையில் சமரச உணர்வுடைய சைவர்—மொழி வழிப்பட்ட இன உணர்வு கொண்டவர்—ஆன்மீக வழிப்பட்ட சைவர் என வருணிக்கத் தக்க நிலையிலேயே மபொசியின் ஆளுமை அமைகின்றது.

## மொழிக் கொள்கை

இனி, அவருடைய ஆளுமையின் மிகச் சிறப்பான பகுதியாக மொழிக் கொள்கையைக் கருதிப் பார்க்க வேண்டும். இங்கும் அவரது ஆளுமை சிக்கல்களிடையே தெளிவு காண்பதாகவே அமைகிறது. அவருடைய நிலை தெளிவானதாக—செறிவும் தெளிவும் உடையதாகவே இருக்கிறது. காந்தியம் வகுத்துக் கொடுத்த கொள்கையே மபொசியின் மொழிக்கொள்கை ஆனால், அடிகளார் வகுத்துக்கொடுத்த எந்தத் திட்டத்தையும் நாம் பின்பற்றுவதில்லை என்று நமக்குள் நாமே 'சத்தியம்' செய்துகொண்டிருக்கிறோம். நமக்குள் இருக்கின்ற ஆசை—ஆதிக்க நாட்டம், ஆன்மீக மையங்கொண்ட அடிகளார் கருத்துகளை முரண்படவே காணச் செய்கிறது. நம்முடைய கோளாறான கருத்தோட்டத்தில் ஊன்றி நிற்கிறோம்; அதனால், காந்தியம் தவறுடையதாக நம் அடிமனத்தில் தோன்றுகிறது.

114. சிலம்புச்செல்வர் மபொசி மணிவிழாமலர்—பக்.68

‘‘எங்கும் எதிலும் தமிழ்’?

‘‘எங்கும் எதிலும் தமிழ்’’ என்ற மபொசியின் முழக்கத்தை அரைகுறையாகக் கேட்டுவிட்டோ, அல்லது ‘தமிழ்’ என்று கேட்டாலே ‘கேட்டுமுட்டு’ என்று கருதுவதாலோ—அவருடைய கொள்கையின் முழுவடிவம் என்ன என்பதைப் பற்றி நம்மவர்கள் கவலைப்படுவதில்லை.

‘எங்கும் தமிழ்’ என்றால் லண்டனிலேயும் தமிழ்—தில்லியி லும் தமிழ்தான் என்று அவர் கருதுவதாக நினைக்கிறோம் போலும். ‘எதிலும் தமிழ்’ என்பதுபற்றியும் நாம் அப்படித்தான் அவரைப் பற்றி எண்ணுகிறோம் போலும்.

தமிழகத்தில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதே அவர் முழக்கம். அந்த முழக்கமும் ஏன் எழுகிறது என்றும் நாம் சிந்திக் கக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ் நிலத்தின் உரிமை மொழி யாகிய தமிழ் என்ன நிலையில் இருக்கிறது? இதற்கு மபொசியின் நூல்களிலிருந்து அடுக்கடுக்காக எடுத்துக்காட்டுகள் தரமுடியும். ஆனால், தருவதாக இல்லை. காரணம், ‘தமிழ் நாட்டில் தமிழ் தான் இல்லை’ என்ற பாவேந்தரின் கருத்து முற்றிலும் சரியானது என்பது நம் எல்லோருக்கும் தெளிவாகவே தெரியும். ‘‘காக்கையின் நிறம் கறுப்பு’’ என்பதற்குமேற்கோள்கள் காட்டி னால் சிரிப்பார்கள். அதுபோலத்தான் தமிழகத்தில் தமிழுக்கு உரிய சிறப்பு இல்லை என்பதற்கு ஆதாரம் காட்ட முனைவதும் ஆகும்.

என்றாலும் நிலவரத்தின் கடுமையை உணர்த்துவதற்கு— சிந்திப்பது பாவமில்லை என எண்ணும் பழக்கமுடையோர் மனச் சான்றை எழுப்புதற்கு ஒரே ஓர் உண்மையை மட்டும் இங்கே சுட்டுவோம். அதுவும் மபொசியின் கூற்றாக இல்லை.

தமிழகத்தில் மூன்றாம் வகுப்பைத் தாண்டவேண்டுமென்றா லும் ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும். ஆனால், பட்டங்களி லேயே உயர்ந்த பட்டம்—டாக்டர் பட்டம்—பெறுவதற்குத் தமிழகத்தில் ஒரு தமிழ் எழுத்துக்கூடத் தெரிய வேண்டியதே இல்லை....

ஆங்கிலம் இல்லாமல் எதுவுமே இல்லை; தமிழ் இல்லாமல் எல்லாமே கிடைக்கும். இதுதானே தமிழகத்தின் நிலை? உரிமை வாழ்வு வந்து—மொழிவழி மாநிலம் அமைந்து—ஒரு தலை முறைக்கு மேல் ஆகிவிட்டது. என்றாலும், தமிழ் பெற்றுள்ள ‘வாழ்வு’...என்னத்தைச் சொல்ல!

தமிழில் பாட்டா! ஓர் இயக்கம் வேண்டியிருக்கிறது. பாடங்களைத் தமிழிலே சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், 'காட்டுமிராண்டிக் காலத்துக்குப் பின்னேறிச் செல்லவா' என்று கேட்கிறது படித்த கூட்டம்! ஆட்சி மொழி தமிழாகாதா? ஓ சட்டம் இயற்றிவிட்டோமே' என்று முப்பதாண்டுகளாகப் பேசிவருகிறோம். அலுவலகங்களில் தமிழ் பலகணி வழியாக எட்டிப் பார்க்க முடிகிறது; ஆசாரவாசல் வழியே போகவும் வரவும் இன்னும் உரிமை பெறவில்லை...இந்த வயிற்றெரிச்சல் பட்டியலை விரித்துக்கொண்டு போவதால் பயனில்லை. ஏனென்றால், ஆளும் கட்சி எதிர்க்கட்சி ஆளப்படும் கூட்டம் அத்தனையும் ஆதிக்கவாதிகளின் கைப்பாவைகள், பகடைக் காய்கள்!

காந்தியம் காட்டிய வழியா இது! தாய்மொழிக்கு முதலிடம் கொடுக்கத் தயங்குவோரை நினைத்தால்

> நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
> குலத்தின்கண் ஐயப் படும்[115]

என்றே சொல்லத் தோன்றுகிறது. ஆலகாலம் போன்ற கொடிய சொற்கள்போல—காய்கவர்ந்த பாங்கு போலப் பலர்க்குத் தோன்றலாம். ஆனால், இதைவிடக் கடுமையாகச் சொல்லிக் காட்டினாலும் தமிழன் தோலில் உறைக்காதோ என்ற ஐயம் எனக்கு. வளர்ந்துவிட்ட கூட்டத்தாரின் பேராசை வெறி—உயர்வடைந்துவிட்ட ஆணவச் செருக்கு...இவையெல்லாம் வளர வேண்டிய பெருங்கூட்டத்தை நசுக்கிவிட முனையும் முயற்சியால் தான் தமிழகத்தில் தமிழுக்கு உரிய இடம் இன்னமும் கிடைக்கவில்லை.

> "இந்தியாவில் பல தலைமுறைகளாக ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்திவருவது ஆங்கில எதிர்ப்பாளர்களுக்கு ஆத்திர மூட்டியுள்ளது. ஆங்கில அறிவு, அந்தஸ்தைக் குறிப்பதாக ஆங்கிலம் படித்தவர்கள் மனத்தில் ஒரு எண்ணம் வளர்ந்துள்ளது. இந்த எண்ணம் மிகவும் முறையற்றதும் ஆட்சேபிக்கக் கூடியதுமாகும். நாம் ஆங்கிலத்தை விரும்புவது வேறு விஷயம். ஆனால், ஆங்கிலத்துக்கே மதிப்பு என்ற மனோபாவத்தை ஆட்சேபிக்கிறோம்."

> "இந்தியாவில் சாதிமுறையை ஒழித்ததுபோல் 'ஆங்கிலம் படித்தவர்கள்' என்ற சாதி மனோபாவத்தையும் ஒழிக்க வேண்டும். இந்தியாவில் ஏராளமான

---

115. குறள் 958

சாதிகள் இருக்கின்றன. இங்கு எதுவும் தனிச்சாதியாக மாறிவிடுகிறது. ஆங்கிலம் தெரியாதவர்களைவிடத் தாங்கள் மேலானவர்கள் என்று ஆங்கிலம் படித்தவர்கள் கருதுகின்றனர். ஆங்கிலத்தையோ, வேறு மொழியையோ கற்பது அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும். ஆனால், மொழிப் பிரச்சினை அரசியலோடு கலந்துள்ளது.

''தாய்மொழிதான் போதனா மொழியாக இருக்க முடியும். ஆங்கிலம் அந்த ஸ்தானத்தை வகிக்கவே முடியாது. ஆங்கிலத்திற்கு நீங்கள் எந்த அந்தஸ்து கொடுப்பதாயிருந்தாலும் அது போதனா மொழியின் அந்தஸ்தைப் பெற முடியாது. போதனா மொழியில் மாறுதல் வந்துகொண்டுதான் இருக்கிறது, வந்து விட்டது. வந்தே தீரும்.''

''இராஜ்யத்தைப் பொறுத்தவரையில் பிரதேச மொழியே பிரதான மொழி. பிரதான மொழி என்று சொன்னால் போதாது. அதைவிட அழுத்தமான வார்த்தையே பொருந்தும்.''

''அந்தந்த ராஜ்யத்தில் அந்தந்தப் பிரதேச மொழியே வளம் பெறும். ஆங்கிலத்தின் ஸ்தானத்தை அது பாதிக்குமேயல்லாது, தமிழை அல்ல. 'தமிழ்மொழி வேண்டுமா, ஆங்கிலம் வேண்டுமா'—என்பதே பிரச்சினை. ஆங்கிலத்தின் இடத்தைத் தமிழ் எடுத்துக் கொள்ளும்.''

''ஆங்கிலத்தைக் கற்றதால் பல வழியில் நாம் நன்மை அடைந்திருக்கிறோம். ஆங்கிலத்தின் உபயோகத்தை நான் மறுக்கவே இல்லை. ஆங்கிலம் தெரிந்த மக்களை ஆங்கிலம் தெரியாத மக்களிடமிருந்து அம்மொழி பிரித்து வைத்துவிட்டது. இதன் மூலம் ஒரு பெரிய பிரிவு (ஆங்கிலம் தெரிந்தவர்களின் பிரிவு) ஏற்பட்டு விட்டது.''

''மொழிப் பிரச்சினை விஷயத்தில் உண்மையான அடிப்படையான மாறுதல் ஆங்கிலத்திற்குப் பதில் தமிழ் போன்ற ஒரு ராஜிய மொழிக்கு மாறுவதாகும். அதுவே உண்மையான மாறுதல். போதனா மொழி

மாறியவுடன் ஆங்கிலத்தின் ஆணிவேர் போய் விடுகிறது.''[116]

—நீளமான பகுதிதான். ஆனால், மொழிச்சிக்கலில்—குறிப்பாகப் பயிற்சி மொழிச் சிக்கலில் நிலவரம் என்ன என்பதை ஓரளவு அழுத்தமாக உணர்த்துகிறது. அன்புகூர்ந்து இன்னொரு தரம்—மேலும் ஒருதரம் மேற்கண்ட மேற்கோளை வரிவரியாகப் படியுங்கள்.

இது மபொசியின் பேச்சு அன்று.

22-7-63இல் பிரதமர் ஜவாஹர்லால்நேரு ஐதராபாத்தில் பேசியது; மத்திய ஆங்கிலப் பயிற்சிக் கழகத்தின் ஆசிரியர்களும் மாணவர்களும் அடங்கிய கூட்டத்தில் பேசியது.

இந்திய நாடு ஆங்கிலேயன் பிடியிலிருந்து விடுபட்டது 1947இல்; இங்கு எடுத்துக்காட்டிய நேருவின் பேச்சு நிகழ்ந்தது 1963இல்.

1938இல் மூதறிஞர் இராஜாஜி அமைச்சரவை பொறுப்பேற்ற போது சென்னை மாநிலத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்சி மொழியாக இருந்த ஆங்கிலத்தின் இடத்தில் (தமிழ்ப் பகுதிகளில்) தமிழ் அமர்த்தப்பட்டது. அப்போதே தொடர்ந்து கல்லூரி களில் அதே மாற்றம் வருமென அறிவிக்கப்பட்டது. 1946இல் சோதனை செய்வதாக ஒரே ஒரு கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாக்கித் 'தோல்வி' முத்திரை குத்தி நீக்கினார்கள். 1960இல் தமிழகக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதில் தீவிர நடவடிக்கைகள் திரு. சி.சுப்பிரமணியத்தால் மேற் கொள்ளப்பட்டன. இந்த நிலையில் திரு. எம்.பக்தவத்சலனார் கல்விப் பொறுப்பை ஏற்றார். ஆங்கிலத்துக்கு அவர் கடைக்கண் பார்வையால் புதுவாழ்வு- மறுமலர்ச்சி-விரிவாக்கம்- ஆதிக்கம் பழையபடி திரும்பியது. அதிலிருந்து கல்வித் துறையிலே தமிழ் உரிய மதிப்பினைப் பெறவில்லை- பெறுமாறு நன்முயற்சிகள், ஆக்கவழிப்பட்ட முயற்சிகள் நடைபெறவில்லை என்பதுதான் உண்மை நிலை.

மபொசியை விட்டால் தமிழுக்கு உண்மைத் தொண்டர் காணுமாறு இல்லை- இது பாவேந்தர் பாரதிதாசனார் கணிப்பு:

116. ஜவாஹர்லால் நேரு-ஐதராபாத்தில் ஆற்றிய உரையி லிருந்துமபொசி மேற்கோள் ; எனது போராட்டம்— பக்.904-5

''மபொசி ஒருவர்தான் இன்று தமிழுக்காகப் பாடுபடு கின்றார். நானும் தேடித் தேடிப் பார்க்கின்றேன், தமிழுக்காகப் பாடுபடுகிறவர்கள் யாரேனும் இருக் கிறார்களா என்று. என் கண்ணில் மபொசி ஒருவர்தான் படுகிறார்.''[117]

ஆனால், அவருடைய வளமான துணையைப் பெற்ற தி.மு.க., அ.தி.மு.க. அரசுகள்கூட மனநிறைவு தருகிற வகையில் பயிற்சி மொழித் திட்டத்திலும் ஆட்சிமொழி மாற்றத்திலும் தீவிரமாகச் செயல்படவில்லை என்பது பெரிதும் வருந்துதற்கு உரியது.

1835இல் மெக்காலே பரிந்துரைத்த கல்வித்திட்டத்துக்கு உருவாக்கம் கொடுத்த சர் சார்லஸ் வுட் என்பவரும் தாய் மொழியைப் பயிற்சி மொழியாக்குவதற்கு அரசு ஊக்கம் தர வேண்டுமென்ற குறிப்பை வைசிராய்க்கு எழுத்துமூலம் கொடுத் தார். அது தொடங்கினபிரிட்டிஷார் காலம் தொடங்கி-உரிமை வாழ்வு வந்ததுவரை- ஆங்கிலத்தின் இடத்தில் வட்டார (தாய்) மொழியை அமைப்பதற்குப் பல்வேறு குழுக்கள் பரிந்துரைத்த வரலாற்றுச் செய்திகளையெல்லாம் தொகுத்து 'ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு' என்ற நூலிலே வழங்கியுள்ளார்.

பக்தவத்சலனாரின் தமிழ்மொழி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக மபொசி கிளர்ந்தெழுந்தபோது உருவான பல நூல் களிலே அதுவும் ஒன்று...... எத்தனை செய்தும் என்ன! வித்தகர் வேத நாயகர் சொன்னதுபோல

ஆங்கிலம் ஒன்றையே கற்றார்; தங்கள்
ஆவியொடு ஆக்கையை விற்றார்;
தாங்கும் அன்னியர் ஆனார்; இன்பத்
தமிழின் தொடர்பு அற்றுப் போனார்[118]

என்பதுதான் இன்று எஞ்சியுள்ள நிலை.

தமிழுக்குரிய உரிமையை மீட்கும் பணியைப் பொறுத்த வரையில் வெற்றிகளே இல்லையென்றோ, மபொசியின் பங்கும் பணியும் இந்த வெற்றிகளிலே குறைவென்றோ யாரும் கருதமுடி யாது. முன்னைவிடத் தமிழ் ஓசை கேட்கிறது; தமிழ் என்றால் தலைகுனிவின் மறுபெயர் என்று பரம எதிரிகளும் பேசத் துணிவ

117. பாரதிதாசன் 74 ஆம் பிறந்தநாள் விழா (29-4-62)வில் பாரதிதாசன் பேசியது-மபொசி மேற்கோள்—எனது போராட்டம்— பக்.902

118. வேதநாயகம் பிள்ளை பாடல்

தில்லை...சரிதான் ஆனால், அறிவாலயங்களிலும் அரசவை நிர்வாகங்களிலும் உரிமைக்குரிய இடங்களிலும் அரசோச்சும் பேரரசியாக—உரிமைப் பெருமாட்டியாகத் தமிழ்த்தாய் இடம் பெற்றுவிட்டாள் என்று யாரேனும் கருதினால்—சொல்லத் துணிந்தால்—பொய்ம்மைப் பண்ணையின் சொந்தக்காரர்கள் என்றே அவர்களைக் கருதவேண்டியுள்ளது. மனச்சான்று உள்ளவர்கள் எவரும் இதனை மறுத்திட முடியாது.

மபொசியின் அகவொலி இன்றைச் சூழலுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க முடியாது.

எண்பதாண்டு எல்லையைத் தொட்டுவிட்ட அவருக்குத் தமிழ்மொழி எங்கும் எதிலும் இடம் பெறும் வரையில் அமைதி இருக்கமுடியாது.

அம்மையை மம்மியென்றும்
அப்பனைத் 'தாடி' யென்றும்
செம்மைசேர் தமிழகத்துச்
சிறுவர்கள் நெஞ்சில்நஞ்சின்
வெம்மையைப் பாய்ச்சுகின்ற
வீணர்கள் கொடுமை நீங்கி
நன்மையே பெறநூறாண்டு
மபொசி வாழவேண்டும்[119]

என்று அவர் இதயமறிந்த இயக்கக் கவிஞர் கு.சா.கிருஷ்ண மூர்த்தி, மபொசியின் எண்பதாம் பிறந்தநாள் விழாவில் பாடினார். அதாவது, தமிழகத்தில் தமிழ் உரிமை இடம் பெறுவதற்கு இன்னும் ஒரு தலைமுறைக் காலம் ஆகு மென்று கவிஞரே எதிர்பார்க்கிறாரா? இதை நினைத்தாலே உள்ளம் எரிகிறது!

பல துறைகளும்—குறிப்பாக அறிவியல் துறை—வளர்ந்து வரும் வேகத்தை நோக்கினால் நாம் வீணாக்கும் ஒவ்வொரு நாளும் பல பதிற்றாண்டுகளின் மதிப்புடையது என்பதை மறக்க வேண்டா.

பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்ள வேண்டுமானால்—உண்மையான மக்களாட்சி வளரவேண்டுமென நாம் ஒலி எழுப்புவது சத்தியமான உணர் வென்றால்—சோஷலிச சமுதாயம் உருவாகி ஏழையென்றும்

119. கிருஷ்ணமூர்த்தி, கு.சா.— 'செங்கோல்': 30-6-85 & 7-7-85 இதழ்

அடிமையென்றும் எவனுமில்லை எனஆக்குவதே நம் குறிக்கோள் என்பது சத்தியமானால்...... தாய்மொழிக்கு உரிமை வாழ் வளிப்பதில் தாமதம் செய்யக் கூடாது. தடைக்கல் அமைப்போர் யாராயிருந்தாலும் அவர்களின் ஆசைக்கு நச்சூட்டி அந்தப் 'பெருமான்' களைத் தூக்கி எறியவேண்டும்.

மபொசியின் ஆளுமையிலே உறுதியான நம்பிக்கை உடைய வன் நான். அந்த ஆளுமையின் செயல்திறத்திலும் ஐயம் கொள்ளும் திறம் எவர்க்கும் கிடையாது. அவர் இப்போது தீவிரம் காட்டாமலிருப்பதைப் பார்த்தால் 'பொருதகர் தாக்கற்குப் பேருந் தகைத்து' என்று ஆறுதல் அடைகிறேன். காளை சற்றே பின்வாங்குகிறது, புலி பதுங்குகிறது என்றால் அச்சமோ தயக்கமோ காரணம் ஆகாது. முழுவேகத்தோடு பாய்வதற்கான முன் ஏற்பாடு என்பதே உண்மை. சிவஞானச் சிங்கம் சீறி எழும் என்பதே என் நம்பிக்கை. முதுமை என்பது அவரைப் பொறுத்தவரையில் முதிர்ச்சியே தவிரத் தளர்ச்சி அன்று. அவருடைய ஆளுமையே தளருமானால்—'சரிதான் இவ்வளவுதான் நம்மால் முடிந்தது' என்று அவரும் அமைந்து விடுவாரானால்...... என்ற நினைப்பே கசப்பாக இருக்கிறது. ஆண்டவன் திருவுளக் குறிப்பை அறிய முடியவில்லை. ஐயாவை யும் ஆண்டவனையும் தமிழ் நலம் குறித்து இறைஞ்சுவோமாக!

இராமநாமம் ஒலிக்கப்படும் இடத்திலெல்லாம் சிறிய திருவடி எவர் அழைப்பையும் எதிர்பார்க்காமலே எழுந்தருளுவார். இது சமய உலகின் நம்பிக்கை. தமிழ்மொழியின் நலம், அம்மொழி யின் உரிமை...என்ற நினைப்பு எழும் களங்களிலெல்லாம் சிலம்புச் செல்வர் மபொசி இடம் பெறுவார்.

**கலப்பு: கலப்படம்**

மொழிப்பற்றுக்கும் மொழி வெறிக்கும் இடையே உள்ள தன்மை வேறுபாட்டை நன்கு அறிந்தவர் மபொசி. மொழிப் பற்று ஆக்கத்தையே நாடும்; மொழிவெறி பகைமையிலேயே முடியும்.

> "புல்மையுடையோர் தமிழ்மொழியைப் புறக்கணிப்பதும் தமிழின் தனித்தன்மை கெடும்வகையில் வடமொழியைப் புகுத்தி மணிப்பிரவாள நடையில் எழுதுவதும் வழக்க மாகிவிட்டது."[120]

என்று அவர் எழுதுவதைப் படித்தால் 'வடமொழி வெறுப்பாளர் பட்டியலில் இவர் பெயரையும் சேர்க்க வேண்டியதுதான்' என நினைவர் —

120. மபொசி: ஆன்மீகமும் அரசியலும்—பக். 86

> "தமிழில் நிறைபுலமை பெற்றோர் வடமொழியைப் புறக்கணிப்பதும் பகைப்பதும்தான் தமிழ்மொழிப்பற்று என்று கருதிவரும் நிலையும் இருக்கிறது."[121]

இதைப் படிப்பவர்கள் 'மபொசி ஆரிய அடிவருடி' என்று நாக் கூசாமல் பேசத் துணிவர். இரண்டு கருத்துகளும் அடுத்தடுத்துத் தொடர்ச்சியாக எழுதப்பட்டவை என்பதை நினைவிலே கொள்ளவேண்டும்.

எந்தத் துறையிலும் ஆதிக்கத்தையும் வெறியையும் காந்தியம் ஏற்காது. காந்தி வழியில் உருவாகி வளர்ந்த மபொசியின் ஆளுமை இந்த விதிக்குக் கட்டுப்பட்டது. புலமையின் பெயராலோ வேறு போலித்தனத்தாலோ தமிழின் தனித்தன்மையைக் கெடுக்கும் மணிப்பிரவாளத் திணிப்பை எதிர்ப்பவர் மபொசி; அதே சமயத்தில் வடமொழி என்ற ஒரே காரணத்திற்காக அதனை வெறுப்பதே நெறி எனக் கருதும் வெறியையும் ஏற்காதவர்.

> "தமிழ் மொழியில் போதிய அன்பில்லாமையாலோ, அல்லது வடமொழியில் அதிக அளவில் பற்று வைத்திருந்ததாலோ, தமிழை வடமொழி மயமாக்கிவிட முயன்றனர் வைதிகர்கள்! அன்னார், மிகுதியும் சமஸ்கிருதச் சொற்களைப் பெய்தும், கிரந்த எழுத்துக்களைக் கலந்தும் எழுதிய கலப்படத்துக்கு 'மணிப்பிரவாளம்' என்றும் பெயர் வைத்தனர். இந்தப் 'புண்ணியவான்கள்' தான் தனித்தமிழ்க் கிளர்ச்சி தோன்றக் காரணமாயினர்........"[122]

> "......காரணம் எதுவாயினும், தமிழருடைய நெஞ்சங்களிலே வடமொழி மீது வஞ்சம் வளருவதற்கும், 'தனித் தமிழ்'க் கிளர்ச்சி தோன்றுவதற்கும் 'மணிப்பிரவாள' மொழியே காரணமானதை மறைப்பதற்கில்லை."[123]

> "வடமொழியிலுள்ள காப்பியங்களும் கதைகளும் தமிழில் புகுந்ததோடு, அம்மொழியின் சொற்களும், எழுத்துக்களும் கூடத் திருந்தியும் திருந்தாமலும் தமிழில் நுழைந்தன. இந்த நிலையை நீடிக்கவிட்டால் தமிழின் தனித்தன்மை அழிந்துவிடுமோ என அஞ்சினார் மறைமலையடிகள்."[124]

---

121. ஷை
122. மபொசி : தமிழும் கலப்படமும்—பக்.20
123. ஷை பக்.21
124. ஷை பக்.24

> ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் புதியதோர் 'மணிப் பிரவாளம் புறப்பட்ட தெனலாம். ஆம்; 'தமிழ்' என்ற பெயரே 'டமில்' ஆகிவிட்டது. மதுரை 'மஜுரா' வாக வும், திருச்சிராப்பள்ளி 'ட்ரிச்சி'யாகவும், திருநெல்வேலி 'டின்னவேலி'யாகவும் தமிழர் நாவில் நடமாடிய கொடுமையையும் கண்டுவிட்டோம். படித்தவரேயன்றி, பாமரர் நாவிலும் இம் 'மணிப் பிரவாளம்' கோலோச் சியது!''[125]

வாழும் இனங்களிடையே அளவளாவுதல் தவிர்க்க முடியாதது. அன்பு கொண்டு உறவாடுதலாலும் முரண் கொண்டு போராடுத லாலும் ஒருவருரோடு ஒருவர் கலப்பது இயற்கை. நட்பும் பகையும் இல்லாமல் நொதுமல் நிலையிலேயும் 'தனிக்காட்டு ராஜா'வாக யாரும் வாழமுடிவதில்லை. மக்களின் பழக்க வழக்கங்களும் மொழி வழக்காறுகளும் கலப்புறுவது இதனால்தான். உலக வரலாற்றில் எந்த நாட்டினை எடுத்தாலும் - மக்களினத்திலே எந்தக் குழுவைக் கணித்தாலும் - பேச்சிலும் எழுத்திலும் உள்ள எந்த மொழியைப் பார்த்தாலும் கலப்பிலாத் 'தனிமை' இருப்ப தாகச் சாதிப்பது ஒருவரின் வன்கண்மையைக் காட்டுமேயன்றி வாய்மையைக் காட்டாது.

கலப்புக்கு இடம் உண்டு என்பதாலேயே தனித்தன்மையைக் காவு கொடுக்க வேண்டுமென்பதில்லை. கி. மு. மூன்றாம் நூற் றாண்டில் தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியப்,

> வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே[126]

என ஒரு விதி வகுத்துள்ளதை யாவரும் அறிவர். தமிழின் ஓசை யாகிய தனித்தன்மை கெடாமைக்கு ஒரு வரையறை வகுப்பது இந்த விதி. வடமொழிச் சொல் தமிழிலே இடம்பெறும் நிலையை ஏற்பதால் ஏற்பட்ட விதிதானே இது? வடமொழிச் சொற்களையெல்லாம் வரையறை ஏதுமில்லாமல் தமிழ் அகத் தின் வாயிலை அகலத் திறந்துவிட வேண்டுமென்பது இவ்விதியின் அடிப்படையாக இருக்க முடியாது. ஆயின், இரண்டு இனத்தவ ரின் ஊடாட்டத்திலே எப்படியும் விரவுதல் ஏற்பட வழியுண்டு என்பதை இலக்கண விதியே உறுதிப்படுத்துகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

---

125. ஷை பக். 55-56
126. தொல்காப்பியம் : சொல்லதிகாரம் : எச்சவியல் 5

ஊடாடி அளவளாவுதல் மட்டுமே கலப்புக்குக் காரணம் என்பதில்லை. பணிநிலை, பணிவகை, காலத் தேவை, இடச் சூழல் போன்ற பல காரணங்களாலும் வழக்கத்துக்கும் இயல்புக்கும் மாறான - வேறான வழியைப் பின்பற்ற நேரிடலாம். சங்க காலத்துப் போர்வீரனின் சீருடையும் இன்றைய போர்வீரனின் சீருடையும் ஒரே வகையினதாக இருக்க வில்லையன்றோ? வடமொழிக் காதலர்களெல்லாம் வேதகாலத்து முனிவர்களைப் போல உடுத்துவதும் இல்லை; தனித்தமிழ் வாணர்கள் மேலை நாட்டு உடுப்பு முறையைத் தவிர்ப்பது மில்லை. அவரவர் தேவை, பயன்பாடு என்றினைய காரணங்களால் பிற சூழற்குரியவற்றை எவரும் மேற்கொள்கின்றனர்.

ஆனால், இனங் காணமுடியாத அளவு - தனித்தன்மையைக் காவு கொடுத்துவிடும் அளவு அயன்மைக் கலப்புக்கு இடம் தருவதை எவரும் அறிவொடு சார்ந்த நிலையில் ஏற்கமாட்டார்கள்.

ரசிக சிறோன்மணிகளுக்கு உபயகுசலோபரி
கவர்ஸ்டோரி
மெட்ராஸ் பை நைட்

என்றெல்லாம் தமிழ் எழுத்திலே எழுதி விட்டால் தமிழாகி விடாது. இப்படித் தமிழைக் கொச்சைப் படுத்துகிறவர்களை வரலாறு மன்னிக்காது.

> ''கலப்பு வேறு; கலப்படம் வேறு. கலக்கப்படும் பொருளின் அசல்தன்மையை அழிப்பது கலப்படம். அது போலவே, தமிழின் தனித்தன்மை அழிக்கும்வகையிலோ அல்லது அந்த மொழிக்கே உரிய அழகைக் குறைக்கும் வகையிலோ பிறமொழிச் சொற்களைத் திணிப்பது கலப்படம்தான். அந்த கலப்படத்திற்கு நான் எதிரி.''[127]

தமிழில் பிறமொழிச் சொற்கலப்புப் பற்றி மபொசியின் கருத்து இங்கே தெளிவாகிறது. இந்தத் தெளிவிலே களிப்புக் கொள்வோரில் சிலருக்கு இதற்குமேல் அவர் தரும் விரிவு விருப்பத்துக்கு ஒவ்வாமலிருக்கலாம்:

> ''ஆனால், தமிழின் வளர்ச்சியைக் கருதி, தமிழ் மக்களின் வாழ்க்கை நலனை ஒட்டி, தமிழின் தனித்தன்மையையும் அழகையும் கெடுக்காமல், பிறமொழிச் சொற்களை வரவேற்பதில் தவறில்லை; வரவேற்கவும் வேண்டும்''.[128]

---

127. மபொசி : தமிழும் கலப்படமும்-பக்.60
128. ஷை

'தமிழர்' என்ற இனவேலியைக் கடந்து உலக மக்களோடு உறவு கொள்ளக் கூடிய' (தமிழும் கலப்படமும் பக். 64) துறைகளில் தமிழ் அல்லாத சொற்களை வரவேற்க வேண்டும், வரவேற்பதில் தவறில்லை என்பதே ம்பொசியின் கருத்து. இந்தக் கருத்தின் மேல் விளக்கம் வருமாறு :

> ''தேவையை முன்னிட்டுப் பிறமொழிச் சொற்கள் தமிழில் கலக்கலாம். என்று நாம் கூறினாலும், வரம்பு மீறி, தமிழின் தனித்தன்மையைக் கெடுக்கும் வகையில் கலப்பதை நாம் விரும்பவில்லை. அவ்வகையில் வட மொழியும் ஆங்கிலமும் நமக்கு ஒன்றுதான். இந்த இரண்டில் எந்த ஒரு மொழியும் தமிழைக் கெடுப்பதற்கு அனுமதிக்க நாம் தயாராக இல்லை.''[129]

நம்மவரிலே சிலர் வடமொழி எதிர்ப்பாளராக இருப்பர்; ஆங்கிலச் சொல் கலந்தால் கண்டும் காணதவராக வாளாமை மேற்கொள்வர். 'ஆகாஷ் வாணி'க்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் 'ஆல் இண்டியா ரேடியோ'வுக்கு வரவேற்பு அளிக்காவிட்டாலும் எதிர்ப்புக் குரல் எழுப்பமாட்டார்கள். வடமொழியும் பிறமொழி தான், ஆங்கிலமும் பிறமொழிதான். 'பிறமொழி' என்றதொடர் தமிழல்லாத ஏனைய மொழிகள் அனைத்தையும் குறிக்கும்.

மொழிக் கலப்பைப் பற்றிப் பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ ஒரு முறை பேசும்போது : ''ஷேக்ஸ்பியர் இஸ் எ படாபடா நாடகாசிரியன்'' என ஒரு வாக்கியத்தைப் படைத்து மொழிந் தார். ''ஆங்கில வாக்கிய அமைப்பு இருப்பதால் இதனை ஆங்கிலம் என்று கூற முடியுமா?'' என்ற வினா எழுப்பி, ''என தருமை ஆங்கிலமே! ஷேக்ஸ்பியர் வளர்த்த செழுங்கொடியே! உன் கதி இப்படியா ஆக வேண்டும்?'' என இரங்கலுரை கூறி னார். பிற மொழிக் கலப்பும் பிற வழிக் கலப்பும் வரை மீறிப் போகுமாயின் விளைவு யாதாகும் என்பதற்கு இது நல்ல எடுத் துக்காட்டாகும்.

**மொழியும் வழியும்**

வான்மீக இராமாயணத்துள் உள்ள உத்தரகாண்டக் கதையைக் கம்பராமாயணத்துள் காணமுடியாது; தமிழில் உத்தர காண்டத்தைக் கம்பர் பாடவில்லை. காரணம், இராமாயணத்தைத் 'தமிழ் மொழியில் பாடிய கம்பருக்கு அதனைத் தமிழ் வழியிலும் பாடவேண்டுமென்ற ஆர்வமே

---

129. ஷெ பக்.32-33

யாகும். இந்த ஆர்வத்தினால் உயிர்நாடியனைய பல மாற்றங்களைக் கதையமைப்பிலேயே செய்துள்ளார் என்பது இலக்கிய உலகம் அறிந்த செய்தி.

மூலக் கதையின் உத்தர காண்டப் பகுதியில் இராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்பும் செய்தி வருகிறது. இலங்கையில் இருந்த காலத்து இராவணன் 'கரம் படாதவளாக'ச் சீதை இருந்திருக்க முடியாது என்ற எண்ணத்தால், அப்பெருமாட்டியின் கற்பொழுக்கம் பற்றி அயோத்தியரிடையே பரவலாக ஐய முணுமுணுப்புகள் எழுந்திருக்கின்றன. அதைக் காரணமாகக் கொண்டு இராசா இராமன் சீதையைக் கானகத்துக்கு விரட்டுகிறான்.

இந்தக் 'கதை' தமிழகத்தில் உலவும் தகுதியுடையது அன்று எனக் கருதிய கம்பர் இராவணன் சீதையைத் தீண்டமுடியாமைக்கு ஒரு சாபக் கதையைப் படைத்ததோடு அவள் இருந்த குடிசையோடு பெயர்த்தெடுத்துச் சென்றதாக ஆரணிய காண்டத்திலேயே கதையை மாற்றிவிட்டார். இந்த மாற்றம் தமிழ் வழியினைப் போற்றும் மனத்தே எழுந்ததாகும்.

தீண்டாத திருமேனியளாகச் சீதையை ஆக்கியபின் உத்தர காண்டத்துக்கு வேலை இல்லை. மபொசி சொற்களில் சொல்வதானால், "ஆரணிய காண்டத்தில் கம்பர் செய்த ஒருசிறு மாறுதல் காரணமாக, உத்தரகாண்டம் முழுவதுமே அவருக்குத் தேவையற்றதாகி விட்டது."[130]

அரசியலாயினும், சமயமாயினும், இலக்கியமாயினும் தமிழ் வழி பேணப்பட வேண்டும்; இது தமிழில் அக்கறையுடையோர் தொன்றுதொட்டு மேற்கொண்டுவரும் மரபுவழியாகும். அந்த நெறியினை உளமாறப் பேணும் எண்ணத்தை உறுதியாக உடையது மபொசியின் ஆளுமை.

மொழியைப் பேணுவது போல்வே அதற்குரிய வழியையும் பேணுகின்ற மபொசிக்குச் சூழலும் தேவையும் நோக்கித் தகுந்த முறையிலும் உரிய அளவிலும் பிற மொழிச் சொற்களை ஏற்பது தவறில்லை என்பதே கருத்து. இரண்டு ஓரங்களிலும் நிற்காமல் அரிமா நோக்குக் கொண்டு இரண்டு நிலைகளையும் கணித்து— அறம் பேணுவது மபொசியின் ஆளுமை.

> இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
> பெருமை பிறங்கிற்று உலகு[131]

130. மபொசி : கம்பரிடம் யான் கற்ற அரசியல்-பக்.24
131. குறள் 23

எனத் திருவள்ளுவர் நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தில் கூறுகிறார். அவர் குறிப்பிடும் 'இருமை' வேறு இரு முரண் நிலைகளின் வகை தெரிந்து அறநெறி மேற்கொள்ளும் மபொசிக் கும் ஒரு வகையால் இக்குறளை இணைத்துச் சொல்வது மிகை யாகாது. தனித்தமிழ்—கலப்படத் தமிழ் என்ற இருமை வகை தெரிந்து, நடுகின்ற செம்மையை வகுத்துக்காட்டியது மபொசி யின் ஆளுமை அறன்.

## பொதுமொழி

இனி, மொழிச் சிக்கலின் இன்னொரு பக்கலில் நாட்டம் செலுத்துவோம்.

பாரத நாட்டின் பொதுமொழி—மைய அரசின் ஆட்சிமொழி எது? இவ்வினாவுக்கு மபொசி தரக்கூடிய விடையும் சற்றே சிக்கலானதுதான். சிக்கல், சிலம்புச் செல்வரின் சிந்தனைக் காட்சியிலே இல்லை. அவருடைய கருத்தினை ஏற்போருக்கும் மறுப்போருக்கும் உள்ள காட்சி வேறுபாட்டால் சிக்கல் இருக்கிறது.

> ''மத்தியில் ஆட்சிமொழி இந்தியா, ஆங்கிலமா—
> என்ற சிக்கல் இறுதிக் கட்டத்துக்கு வந்துவிட்டது''[132]

என்று ஒரு நூலைத் தொடங்குகிறார்; 1963இல் வெளிவந்த 'இன்பத் தமிழா, இந்தி—ஆங்கிலமா' என்ற நூலில் தம் கருத் துரையை மேற்கண்ட வாக்கியத்தைக் கொண்டு தொடங்கு கிறார். 'இறுதிக் கட்டத்துக்கு, மத்திய ஆட்சி மொழிச் சிக்கல் 1963இல் வந்துவிட்டதாக அன்றைய சூழலில் அவருக்குத் தோன்றியது; ஆயின், அப்போதும் அந்தச் சிக்கல் முடியவில்லை; இப்போதும்—நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில்—முடிந்து விடவில்லை. மூதறிஞர் இராஜாஜி ('இந்தி நெவர், இங்கிலீஷ் எவர்') 'இந்தி எப்போதும் இல்லை—ஆங்கிலமே யாங்கும் எப் போதும்' என்ற கருத்தியக்கத்தை முன்னின்று இயக்கி நடத்திய போது மபொசி எழுதிய நூல் அது.

குடியரசுத் தலைவருக்கு இல்லாத அதிகாரத்தோடு ஆளுநர் நாயகமாக (கவர்னர் ஜெனரலாக) இருந்தபோது கையெழுத் திட்டு 'இந்தி'யின் மதிப்புக்குச் சட்ட முறையிலான மேலாண் மையை நல்கியவர் மூதறிஞரே. பின்னர் ஏற்பட்ட 'இராசதந்திர' வேதிவித்தையால் இந்தியின் தீவிர எதிர்ப்பாளராகவும் ஆங்கிலத் தின் பாதுகாப்பு முனைவராகவும் மூதறிஞர் மாறினார். ஆட்சி

132. மபொசி : இன்பத் தமிழா, இந்தி—ஆங்கிலமா?-பக்.5

மொழி பற்றி மட்டுமல்லாமல், பயிற்சிமொழி பற்றியும் நீதிமன்ற நிர்வாக மொழிபற்றியும் அவர் கருத்திலே மாற்றம் ஏற்பட்டது தமிழகத்தின் போகூழ் என்றே கொள்ளவேண்டியுள்ளது. அவர் கையாண்ட இராசதந்திர நடவடிக்கைகளால் தமிழக அரசியல் அரங்கிலே உருவாகி நிகழ்ந்த செயல்களைக் கணித்து முடிவு கூறுவது என் நோக்கம் அன்று; இங்கு அது தேவையும் இல்லை.

மொழிக் கொள்கையில் காந்திய நெறியிலிருந்து அவர் பிறழ்து ஆங்கிலராக ஆனதும், பிறரை அவ்வழியில் தவறாகச் செலுத்தியதும் நலம் தரவில்லை; தமிழினத்தின் மனக் குழப்பத்துக்கும் தமிழ் மொழி வளர்ச்சியின் தளர்ச்சிக்கும் அவர் உதவிக் கொடுத்தார் என்பதே தமிழகத்தில் காந்தியம் பேணுவோரின் மதிப்பீடாக இருக்க முடியும். இராசதந்திரத்துக்காகச் சத்திய நெறியைப் பலியிடுவது காந்தியமாகாது.

காந்தியத் தத்துவத்தின் உரைவிளக்கப் பெருந்தகையாக—பாஷ்யகாரராக—ஒரு காலத்தில் விளங்கிய அந்தப் பெருமான் இராசதந்திரத்துக்காகச் செய்துவிட்ட 'பலி' தலைமுறைகளையே பாதிக்கிறது என்பது உண்மை.

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை[133]

என்பது வள்ளுவம். மூதறிஞர் இராஜாஜியைத் தந்தைக்குரிய இடத்தில் அமைத்து, தலைவர்க்கெல்லாம் தலைவராகப் போற்றியவர்—போற்றுபவர்—மபொசி.

தம் தலைவரின் மாறிய போக்கால் வேதனைப்பட்டு எழுதிய நூலே 'இன்பத் தமிழா, இந்தி—ஆங்கிலமா,' என்ற நூல். அந்த நூலின் தனித்தன்மை பற்றியும் சிறப்புப் பற்றியும் முன்னுரையில் மபொசி பின்வருமாறு எழுதியுள்ளார்:

> ''முன்னர் எத்தனையோ கருத்தோவியங்களை எழுதித் தமிழ் மக்களுக்குக் காணிக்கையாக்கியிருக்கிறேன். அவை எல்லாவற்றையும்விட இந்தச் சிறிய பிரசுரத்தை மக்களுக்கு வழங்குவதில் யான் பெருமையடைகிறேன்.
>
> பரங்கி மொழி படித்த புதிய சாதியினரிலே பலர் தம்மை வளர்த்து வாழ்வளித்த மக்களுக்கெதிராகப் போர் கோலங் கொண்டிருக்கின்றனர். அதற்கெதிராகப் பயன்படுத்தி வெற்றி காண இந்தச் சிறிய சாதனம் போதும்

133. குறள் 990

> மானதல்ல வென்பதை நான் உணர்கிறேன். ஆயினும், இதையேனும் வழங்க முடிந்ததற்காக ஆறுதலடைகிறேன்.''[134]

ஆம், படித்த கூட்டமெல்லாம், அலுவல் வேட்டை (உத்தியோக)க் கூட்டமெல்லாம், இதழ்களெல்லாம் கூட்டணி அமைத்து விட்ட ஒரு சூழ்நிலையில்—வலிமை மிக்க சாதனங்களையெல்லாம் எதிர்த்து நிற்கவேண்டிய சூழ்நிலையில் குரல் எழுப்புவது ஏறத்தாழ இயலாது என்பதை எண்ணிப்பார்த்தால்தான் மபொசியின் ஆளுமையின் உரத்தை உணர முடியும்.

> அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
> பெருமை முயற்சி தரும்[135]

என்றார் வள்ளுவர். தமிழின் உரத்தால் வளம்பெற்ற பண்ணைக்கு உரியராக இருந்த திராவிட இயக்கத்தினரையும் ஆங்கில மாயைக்கு இரையாக்கிவிட மூதறிஞரால் முடிந்தது. அந்தப் பருவத்தில், ''தமிழை அறவே கைவிட்டு வீட்டு மொழியாகவும் ஆங்கிலத்தை ஏற்க நான் தயார்'' என்று தந்தை பெரியாரே சொல்லுமளவுக்கு ஆங்கில மாயையை மூதறிஞரால் விரித்துப் பரப்பமுடிந்தது. ('கலைக்கதிர்'—பயிற்சி மொழி மலரிலும் பெரியார் இந்தக் கருத்தை விரிவாக எழுதியுள்ளார்.)

மபொசியின் நூல் சிறியதே; ஆயினும், மிகச் சிறந்தது. எத்துணைக் காலம் கடந்தாலும் மொழிச் சிக்கல் பற்றிய வரலாற்றை ஆராய்வோர்க்கு இன்றியமையாத முதல்தரமான ஆவணம் என்று அதனைக் குறிப்பிடுவது மிகையாகாது.

மூன்று கோணங்களிலேயிருந்து இந்தச் சிக்கல் ஆராயப்படுகிறது. மபொசி எழுதுகிறார்:

> ''மத்தியில் ஆட்சிமொழி இந்தியா ஆங்கிலமா—என்ற சிக்கல் இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டது. இந்தச் சிக்கலிலே மூன்று கோணங்கள் இருக்கின்றன.
>
> ''ஒரு கோணத்தில்—மாநிலத்தில் ஆட்சிமொழி, பயிற்சிமொழி, நீதிமன்ற நிர்வாகமொழி ஆங்கிலமாகவே இருக்கவேண்டுமென்று முடிவு கட்டிக்கொண்டு அதற்குப் பின்பலமாக மத்தியிலும் ஆங்கிலமே என்றென்றும் ஆட்சிமொழியாக நீடிக்கவேண்டும் என்று கூறுவோர் நிற்கின்றனர். இவர்களின் இணையற்ற தலைவர் ராஜாஜியாவார்.

134. மபொசி : இன்பத் தமிழா, இந்தி—ஆங்கிலமா-பக்.1
135. குறள் 611

''இன்னொரு கோணத்தில்—மாநிலத்தில் ஆட்சி மொழி, பயிற்சிமொழி, நீதிமன்ற நிர்வாகமொழி பற்றித் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளாமல், மத்தியில் என்றென்றும் ஆங்கிலமே நீடிக்கவேண்டும் என்று கோருவோர் இருக்கின்றனர். இவர்களுடைய பலம் வாய்ந்த அமைப்பு தி. மு. கழகம் ஆகும்.

''மூன்றாவது கோணத்தில்-மாநிலங்களில் அந்தந்த மாநிலமொழியே ஆட்சிமொழியாக, பயிற்சிமொழியாக, நீதிமன்ற நிர்வாக மொழியாக இருக்கவேண்டும் என்ற முடிவெடுத்து, அந்த முடிவுக்குத் தடையாக இருக்கிற தென்ற காரணத்தாலும் மத்தியில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கக் கூடாது என்று கூறுவோர் இருக்கின்றனர். அவர்களுக்கு முன்னோடியாக விளங்கு கின்றது தமிழரசுக் கழகம்.''[136]

மேற்கண்ட மூன்று அணுகுமுறைகளிலே இந்தியப் பொதுவரங்கி லும் மாநில அரங்கிலும் சிக்கல் தருகின்ற பொதுமொழிச் சிக்கலை ஆராய்கின்றார் மபொசி. 'ஆதிக்கம்' என்பது ஒரு சிலரின் தன்னலத்தால் பெரும்பான்மையோர் வாய்ப்புகளை நசுக்குவதாகவே முடியும். படித்து, 'உத்தியோக' வேட்டைக் களத்தில் நன்னிலையிலுள்ள ஒரு புதுச் சாதியார் சாதாரண மக்களின் வளர்ச்சிக்கும் வாய்ப்புக்கும் தடையாக இருக்கிறார் கள் என்பதே மொழிச்சிக்கலின் அடிப்படை என்பது மிகையா காது. கல்வி இயக்கம் பரவலாக்கப்படுவதற்கு எதிர்ப்புக் காட்டும் கூட்டத்தினரின் இயலையும் செயலையும் எண்ணிப்பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.

மாநில அளவிலே மட்டுமல்லாமல் நாடு முழுமையிலும் அலுவல் 'சாதி'யினர்—முன்னேறிவிட்ட கூட்டத்தினர் காட்டும் எதிர்ப்பே மாநில மொழிகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருக் கிறது.

காந்தியம் இதனை ஏற்காது, ஏற்கமுடியாது. அந்த நெறி யினை ஏற்றிருக்கும் மபொசியின் நிலை அதுதான். எதிர்ப்பதற்கு முன் நிற்கும் அணியின் திறமையும் செயல் வீச்சும் வசதிப் பெருக்கமும் அவருக்குத் தெரியும். ஆயினும், முன்னுரையில் சொல்லியிருப்பதுபோல, 'பரங்கி மொழி படித்த புதிய சாதி'யினரை எதிர்த்து வெற்றிகாணத் தன் வயமுள்ள சாதனம் போதுமானதா என்பதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை.

136. மபொசி : இன்பத் தமிழா, இந்தி—ஆங்கிலமா-பக்.5-6

'வாய்மை வெல்லும்' என்ற நம்பிக்கையோடு காந்திய ஊற்றத்தோடு போராடுவதே மபொசியின் ஆளுமை.

**மாறியுள்ள சூழல்**

மபொசியின் கருத்துக்கு 'வக்காலத்து' வாங்கி இங்கே வாதிடுவதாக இல்லை. எளிமையாக—அற நெறிப்படி—சிறு குழப்பமும் இல்லாமல் முடித்திருக்க வேண்டிய மொழிச்சிக்கலை வேண்டுமென்றே அரசியல் சாயம் ஏற்றி, தன்னல வெறிக் கூட்டம் பெருஞ்சிக்கலாக ஆக்கியிருக்கிறது.

இன்றைய நிலையில்—அது

'இந்தியை நுழைய விடமாட்டோம்'
'ஆங்கிலத்தை இடம்பெற விடமாட்டோம்'

என்ற வகைக்குப் பொதுமொழிச் சிக்கல் இருக்கிறது. இது ஒரு வகையில் 1963ல் இருந்த நிலையைவிட மாறியுள்ள நிலையாகும்.

தமிழகத்தில் உள்ள செல்வாக்குள்ள அரசியல் கட்சியினர் இந்தியைத் தடுத்து நிறுத்துகிறார்கள். மையத்தில் ஆங்கிலம் என்றென்றும் நீடிக்கவேண்டும் என்பதில் உறுதி காட்டுகின்றனர்.

வடக்கே உள்ளவர்களோ ஆங்கிலம் நீடிப்பதை அனுமதிப்பதாக இல்லை. இந்தி மிக விரைவாகப் பரவுவதற்கு—அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்து நிலவுவதாக இருக்க முனைப்போடு செயல்படுகிறார்கள்.

தமிழகத்தில் உள்ளவர்கள் ஆங்கிலத்தில் காட்டும் அக்கறையின் அளவுக்குத் தமிழ் நலத்திலே அக்கறையோ ஆர்வமோ காட்டுவதில்லை. பரவிவரும் ஆங்கிலப் பயிற்சிக் கல்வி நிலையங்களின் பெருக்கமும் தமிழ்ப் பயிற்சிமொழித் திட்டத்துக்கு அதிகார வர்க்கம் திரைமறைவில் குழிதோண்டும் துணிகரமும் இல்லையென்று மறுக்க முடியாது. 'கொள்கையளவில் தமிழே எங்கும்' என்று சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. ஆங்கிலம் அசையா உறுதி பெறுவதற்குச் செய்யும் முயற்சியைப் பார்க்கும்போது, ஆங்கில ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு இங்கே ஆங்கில வெறி ஆட்டம் போடுகிறது என்று சொல்வதே உண்மை நிலையாகும்.

வடக்கே உள்ளவர்களின் இந்தி வெறி ஒரு பக்கம்—இங்கே உள்ளவர்களின் ஆங்கில வெறி ஒருபக்கம்: இடையிலே தமிழ் மொழி. வேங்கைகளின் மோதுகளத்திலே மறி 'விழிப்பது' போலத் தமிழ் இரங்கத்தக்க நிலையில் உள்ளது. மோதல் என்னவோ

வேங்கைகளிடையேதான்; ஆயின், அந்த மோதலால் நடுநடுங்கித் தளர்கிறது ஆட்டுக் குட்டி.

தமிழே தெரியாதவர்கள் தமிழகத்தில் கல்வியின் முழுநிறை வளர்ச்சி பெற முடிகிறது. தமிழே தெரியாதவர்கள் தொழில் துறையிலும் அலுவல் துறையிலும் இடம் பெறவும் செழிக்கவும் முடிகிறது.

போதாக் குறைக்குத் தொழிற் கல்விநிலையங்களிலே குறிப்பிட்ட அளவு பிற மாநிலத்து மாணவர்க்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. இதுதான் பாரத நாட்டுக் கல்விக் கொள்கை என்றால்—மாநிலங்களும் இதை ஏற்பதுதான் நிலை என்றால்... வட்டார மொழிகள் பயிற்சி மொழியாவது எப்போது? வாய்ப் பந்தல் போடுவதை விட்டு வாய்மைக்கு வழிவகுப்பது எப்போது?

இதே நிலைமை - அதாவது இந்தியா - ஆங்கிலமா : இதுவே முடிவுக்கு உரிய பிரச்சினை என்ற நிலைமை நீடிக்குமானால்—

தமிழகத்தைப் பொறுத்தவரையில்—

ஆங்கிலம் மேலாண்மை செலுத்த வாய்ப்பிருக்கிறது.

அல்லது

பிரிவினைக் கருத்து வலுப்பெறும் வாய்ப்பிருக்கிறது.

ஆங்கிலம் மைய அமைப்பிலே உரம் பெற்று உயரும் என்ற நம்பிக்கைக்கு இடம் இல்லை; காரணம், தமிழகம் தவிரப் பிற மாநிலங்கள் இந்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை. பல வட மாநிலங்கள் பள்ளிகளில் ஆங்கிலத்தை விருப்பப் பாடம் ஆக்கியுள்ளன. ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்த வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும்; ஆங்கிலத்துக்கு ஆதரவாகவும் இந்திக்கு எதிராகவும் பாராளுமன்றத்தில் இந்த நிலை உருவாகும் என்று எதிர்பார்ப்பது இயலுமா என்பது கடுஞ் சிந்தனைக்கு உரிய கேள்வி.

தமிழகத்தின் எதிர்காலம் பாரதத்தோடு பிணைந்து இருக்கப் போகிறதா, பிணங்கி இருக்கப் போகிறதா?

> ''குடியரசுத் தலைவருக்கு இல்லாத சர்வாதிகாரம் அன்றைய கவர்னர் ஜெனரல் ராஜாஜிக்கு இருந்தது. அவர் அரசியல் சட்டத்தில் கையெழுத்திட மறுத்திருந்தால்......''[137]

இன்று இந்த அளவுக்கு மொழிச் சிக்கல் பூச்சாண்டி ஆகியிராது. பூதத்தையும் கிளப்பி விட்டு, அதற்குத் தூபமிட்டு வெறியும்

137. ஷை பக்.18

ஏற்றிய பாவத்திற்கு அப்பாவிப் பொதுமக்கள் 'பலி' யாகவேண்டியுள்ளது.

மொழிச் சிக்கலின் சூழல் மிகப் பெரிதும் மாறியுள்ளது என்பதைப் புலப்படுத்துவதற்கு இவ்வளவு கூற வேண்டி நேர்ந்தது.

எண்பதாண்டு ஆன மபொசி இப்போது என்ன செய்யமுடியும் என்பது கேள்வி அன்று. மபொசிக்கு வயது ஆகியிருக்கலாம்; அது காயத்தைப் பொறுத்தது. ஆனால், அவர் ஆளுமை என்றும் இளநலம் கொண்டது - வயது அறியாதது; அது கருத்தைப் பொறுத்தது.

காந்திக்கு முடிவு கட்டிவிடக் கோட்சேயால் முடிந்தது; காந்தியத்துக்கு முடிவுகட்டும் 'காலன்' தோன்ற முடியாது. மார்டின் லூதர் கிங் வரை அந்தத் தத்துவத்தால் ஈர்க்க முடியும், முடிந்தது. காந்தியம் மபொசி வாயிலாகச் செயல்படும் என்றே நம்புவோமாக.

'தமிழக அளவில் எங்கும் எதிலும் தமிழே' என்ற நிலைக்கு எதிரணி அமைந்து, அந்த எதிரணியே ஓங்கிஉயருமானால்,என்ன நடக்கக்கூடும் என்பதை மற்றொரு மொழி - இனத்துக்கு என்ன நடந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி விளக்க விழைகிறேன்.

**அவ்பிக் அவலம்**

கருங்கடலுக்குக் கீழ்த்திசையிலே காகேசியப் பள்ளத்தாக்கில் அவ்பிக் இனத்தவர் 50,000 பேர் ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் அவ்பிக் மொழியைப் பேசி வந்தனர். இன்று அந்த மொழியை பேசத் தெரிந்தவர் ஒரே ஒருவர்தான். அந்த இனத்தவர் இன்னும் இருக்கிறார்கள்; ஆனால், அவர்கள் மொழியைப் பேசத் தெரியாது; வேறு யாரேனும் பேசினாலும் அவர்களால் தங்கள் சொந்த மொழியைப் புரிந்து கொள்ள முடியாது. டெவ்ஃபிக் எசினி என்ற பெயருடைய 82 வயதுகொண்ட முதிய விவசாயி ஒருவரால்தான் அந்த மொழியைப் பேசமுடியும்.

மொழியியலார் நோக்கில் அவ்பிக் மொழி தனிச்சிறப்புமிக்கது எண்பத்திரண்டு மெய்யெழுத்துக்கள் உண்டெனினும் உயிரெழுத்துகள் மூன்றே கொண்டது அந்த மொழி. 'ஷ்' என்ற ஒலிக்குரிய எழுத்துக்கு நான்கு வெவ்வேறு வகையான உச்சரிப்புகள் உண்டாம். ஒலியன் (ஃபொனீம்) வகையிலும் அவ்பெக் மொழிக்குத் தனிச்சிறப்பு உண்டு. ஆங்கிலத்திலுள்ள ஒலியன்களின் எண்ணிக்கை ஏறத்தாழ முப்பது; அவ்பெக் எண்பதுக்கு மேற்பட்ட ஒலியன்கள் கொண்டது...... இப்படிப் பல சிறப்பியல்புகள் அந்த மொழிக்கு

மொழியின் தன்மை - சிறப்புத் தன்மை - தனித் தன்மைகளை ஒருபால் இருக்க, அவனவனுக்கு அவனவன் மொழி சிறப்புடையது என்பதை எவரும் ஏற்கத்தான் வேண்டும். இப்படித்தான் பொதுவாக எதிர்பார்ப்போம். ஆனால், அவ்பெக் மொழியினரின் நிலை வேறு.

டெவ்ஃபிக் எசினியின் பிள்ளைகள் மூவர்; அவர்களுக்கு அவர்களின் தந்தையாரோடு தாய்மொழியில் பேச முடியாது. எசினியின் பிள்ளைகள் மட்டுமல்லாமல், அவ்பெக் இனத்தவர். எவருக்குமே தங்கள் தாய்மொழியில் பேசக் கூடத் தெரியாது. பேசவே முடியாத மொழியை எழுதவோ - படிக்கவோ யார் இருப்பார்கள்! மொழி என்றால் நாம் நம் உயிர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்; அவ்பெக் மொழியினருக்கு உயிர் இருக்கிறது; மொழி இல்லை. மொழி மறந்தே போய்விட்டது. பழகாத கருவி துருப்பிடித்து மட்டும்; வழங்காத மொழி முடங்கிச் சுருங்கிச் சாகும். அந்த நிலைதான் அவ்பெக் மொழிக்கு ஏற்பட்டுள்ளது. எசினியின் மூச்சு அடங்கும்போது அவ்பெக் மொழியும் செத்த மொழிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிடும்.[138]

அவ்பெக் மொழிக்கு இந்த நிலை ஏன் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது?

அவ்பெக் மொழியைப் பேசினாலும் பயின்றாலும் வாழ்க்கைக்குப் பயன்படுவதில்லை. துருக்கி மொழிதான் எங்கும் எதிலும். எனவே, வயிற்றுப் பிழைப்புக்கும் வாழ்க்கை வாய்ப்புக்கும் அவ்பெக் மொழியைக் 'கட்டி அழுவ'தால் பயனில்லை. மெல்ல மெல்ல மூச்சடங்கி எசினியின் நாவிலே மட்டும் நடமாடும் நிலை வந்துவிட்டது. மக்கள் பலர் இருந்தும் தாய் பட்டினி கிடந்து செத்தாற் போன்றது அவ்பெக் மொழியின் நிலை.

வாழ்க்கைப் பயன்பாடு இல்லையென்றால் செல்வாக்குப் பெற முடியாது; செலாவணியும் இராது. வாய்ப்புநல்காத மொழி செலாவணி யாகாத நாணயம்தான். அருங்காட்சியகத்தில் வைத்து வரலாற்றாய் வாளர்க்கும் வாழ்க்கையைச் சர்க்கசாக்குவோருக்கும் வேண்டுமானால் வழக்கிறந்த மொழிகள் பயன்படலாம். ஏடுகளில் - அதுவும் தேடிப் பிடிக்கவேண்டிய ஏடுகளில் -

---

138. அமெரிக்க நாட்டுத் தென்னசி மாநிலத் தலைநகர் நாஷ்வில் நகரிலிருந்துவெளிவரும் நாளிதழ் 'தென்னசியன்'; அந் நாளிதழ் 1984 ஜூலை முதல் தேதி வெளியிட்ட விரிவான செய்தியே இதற்கு ஆதாரம். இப்போது எசினி இருக்கிறாரா என்பது தெரியவில்லை.

நூலகச் சிறையில் கிடக்கலாம்; நாவிலும் நாட்டிலும் நடமாட முடியாது.

பிறரை விடத் தமிழினத்தான் 'கோட்டைவிடுவதில்" மன்னன்!

தமிழினைப் போல் இனிமைமொழி தாரணியில் இல்லை
இந்நாள் தமிழரைப் போல் தாய்க் கொலையில் தலை
சிறந்தார் எவருளரே[139]

சினம் அடங்கப் பெற்ற தமிழ் முனிவர் திரு. வி. க. கூற்றுஇது. அரசியல் ஏமாளித்தனத்தாலோ பிற காரணத்தாலோ வரலாற்று மூடமாகத் தமிழினம் ஆகிடும் 'விபத்து' முற்றி விட்டால் அவ்பெக் மொழியின் நிலைதான் என்பதை மறக்க வேண்டாம்.

காந்தியத்துக்கு வேண்டுகோள்

சமயத்தின் பெயரால் கோவிலில் ஒரு மொழி-ஆட்சியாளர் மாற்றத்தால் அரசவை இசைஞர்களின் அடிமைத்தனத்தால் இசையரங்குகளில் இன்னொரு மொழி - உத்தியோக வேட்டைக் காரர்களால் சமுதாயத்தில் பரவலாக வேறொரு மொழி..., இந்தச் சூழ்நிலை தமிழகத்தில் நிலவவில்லை என்று எவனும் சொல்லமுடியாது! தாய்மொழி தமிழ் என்கிறோம்; அந்தத் தாயையே 'மம்மி' ஆக்கி வருகிறோம்... இந்தப் போக்கிலே இங்கே ஒரு காகேசிய விபத்து நடவாது என்று உறுதி கூற யார்? இருக்கிறார்கள்?

கல்விக் கூடங்களிலே - அலுவலகங்களிலே - நீதி மன்றங் களிலே - திருக்கோயில்களிலே - சந்தைக் கடையிலே..... எங் கெங்கும் அயல்மொழிதான் என்றால், அருந்தமிழுக்குரிய இடம் எது? பயன்பாடில்லாமல் கடைசியில் போய்ச் சேர வேண்டிய அருங்காட்சியகம் தானா?

என்னை மன்னிக்க வேண்டும். உணர்ச்சி முழுவதையும் கொட்ட முடியவில்லை. எவ்வளவோ எல்லைக் கட்டுப்பாட்டுக் குள் நின்றுதான் மொழிச் சிக்கலைத் தொட்டேன். சிக்கலின் வெம்மைஎன்னைச் சுடுகிறது; சூடுபட்ட வேதனையால் குரல் எழுப்புகிறேன்.

என் வேதனைக் குரல் மிகமிக நொய்ம்மையானது. சிங்கம் முழங்க வேண்டும் – சிங்கங்கள் முழங்க வேண்டும். வேட்டை முழக்கமாக வேண்டா; வேட்கை முழக்கமாக, ஆக்கப் பணி முழக்கமாக- அமைதி வழியிலானாலும் ஆழமாக ஊன்றி நிற்கும்

139. திரு.வி.க.

போராட்ட முழக்கமாக உரிய இடத்திலிருந்து முழக்கம் புறப் படட்டும்!

காந்தியத்தில் ஆழங்காற்பட்ட ஐயா அவர்களின் சத்தியக் குரல் - இன்னும் சரித்திரம் படைக்கும் குரலாக எழும், எழுந்து எழுச்சி ஊட்டும்... அந்த ஆளுமையில் எனக்குள்ள நம்பிக்கை இது.

## இதுகாறும்...இதன்மேலும்

மபொசி வாழ்க்கையில் எதிர்நீச்சலிட்டு வளர்ந்தவர்.

மபொசி இடருற்ற போதெல்லாம்—சோதனைகள் வந்தபோதெல்லாம் உற்ற நோய் நோன்றவர்; உறுதியாக அறம் பற்றி நின்றவர்; இலட்சியவாதி.

தாம் வளர இடந்தந்த தாய்ச் சபையே யாயினும், அதன் தலைமைப் பொறுப்பிலிருந்தவர்கள் தமிழினத்தின் நலத்துக்கு ஊறு விளையும் வகையில் நடந்துகொண்டபோது, காந்தியநெறி ஒன்றையே நினைந்து, கட்சிக்குள்ளேயே போராடினவர். கட்சிக்குள்ளும் தலைவர்களிடையே மோதல்கள் ஏற்பட்ட வேளைகளில் தமிழினத்துக்கு உதவும்படியாக நிற்கக்கூடியவர் பக்கமே நின்று—தம் இழப்பையும் தொல்லையையும் பாராட் டாமல்—பாடுபட்ட வீரர்.

மோதுகின்ற நிலையிலும்-எதிராளிகளை எதிரிகளாக்கிக் கொள்ளும் புன்மைக்கு இடம் கொடாமல் பண்பாட்டு நெறியிலே நின்ற பண்பாளர்.

போராடும் காலங்களில் குறிக்கோளைப் பற்றி நிற்பதில் திண்மை காட்டினாலும் ஆணவத்திற்கு இடம் தாராத செம்மையாளர்.

அரசியலாயினும், சமுதாயமாயினும், இலக்கியமாயினும், சமயமாயினும்......எந்தத் துறைப் பணியை மேற்கொண்டாலும் அந்தத் துறைக்குரிய வரலாற்றுச் செய்திகளையெல்லாம் மனங் கொண்டு கணித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அறிஞர்.

சமுதாய உணர்விலே கனிவுகொண்டு, பொதுநலப் பணிக்கு வழிவகுக்கும் திறனாளர்.

சமயத் துறையில் தாம் சைவராயினும், பிற சமயநெறிகளின் மாண்பையும் ஏற்றொழுகும் சமரசவாதி.

தமக்குரிமையான தமிழினிடத்து எல்லையற்ற பற்றுக் கொண்டவர்; அதற்குரிய திருப்பணிகளைச் செய்வதிலே எவர் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் ஆக்கப் பணி செய்யும் நெறி

யாளர். தமிழினிடத்துப் பற்றுக் கொண்டவரெனினும் மொழி வெறிக்கு இடம் தாராத தகைமையாளர்.

எந்த நிலையிலும் மனச்சான்றின் வழிநின்று சத்திய நெறியிலே பீடு நடையிடும் வாகை மன்னர்.

எல்லை காவலர், ஆத்திகத் தொண்டர், அரசியல் தலைவர், சமூக நீதியாளர், சமயவாதி, இனவுரிமை எழுச்சியாளர், மொழிப் பணி நாயகர்........எல்லா நிலைகளிலும் காந்தியத்தை உயிரும் உயிர்ப்புமாகக் கொண்ட மாமனிதர்.

இவ்வாறு அவருடைய ஆளுமை பரந்து விரிந்து அகன்றிருப்பது. துறைகளின் பன்மையாலும் துறைகளுக்கு உரிய தொண்டுகளின் விரிவாலும் அகலங்கொண்ட அவர்தம் ஆளுமை அறிவாற்றலிலும் வினைசெயல் வகையிலும் வினைத் திட்பத்திலும் ஆழமாகவும் வேர் பாய்ச்சுவது.

இதுகாறும் பல்வேறு துறைகளில் மபொசிக்கு வாய்த்த ஆளுமையின் அகலமும் ஆழமும் கண்டோம்.

ஆனால், இலக்கியத் துறையிலே அவர் ஆளுமைக்குஅமைந்த அகலமும் ஆழமும் காட்டினாலொழிய இவ்வாய்வுரை நிறைவு பெற்றதாகாது.

## இலக்கிய அரங்கிலே

இலக்கியத் துறையிலே அவர் ஆற்றியுள்ள-ஆற்றிவரும் பணிகளும் பல, பல திறத்தன.

எழுத்தாளர் மட்டுமா?

அச்சுக் கோப்பாளராக இருந்தபோதே பேனாவைக் கைப்பிடித்து எழுதாமல், அச்செழுத்துகளைக் கோத்தே 'கப்பலோட்டிய தமிழனை' நூல் வடிவிலே கொடுத்தவர்.

அதன்பின் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதிய நூலாசிரியர்—

மாத இதழ், வார இதழ்களின் ஆசிரியர்—
தொகுப்பாசிரியர்—
பதிப்பாசிரியர்—
படைப்பிலக்கிய ஆசிரியர்—
திறனாய்வாளர்

என எழுத்துத்துறையிலே பல்வகைத் திறங்கொண்டது மபொசியின் ஆளுமை.

சொற்பொழிவுகளால்-ஆயிரக்கணக்கான சொற்பொழிவு களால் நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் எல்லை கடந்த மாநிலங்களிலும் நாடுகளிலும் இலக்கியப் பணி புரிந்தவர் மபொசி.

இலக்கியச் சொற்பொழிவுப் பணியிலே அவருடைய தனித் திறமையை விளக்குவதற்கு ஒரு சான்று:

**சக்கையில் எடுத்த சாறு**

இலங்கையிலே ஒரு பெருவிழா-சிலப்பதிகார விழா. மூன்று நாள் தொடர்ந்து நடைபெற்ற அந்த விழாவிலே தமிழகத்தி லிருந்தும் ஈழத்திலிருந்தும் தமிழ்ப் பேரறிஞர்களும் ஆய்வாளர் களும் விரிவுரைகள் ஆற்றினர். பேசிய நாற்பது பேர்களில் கடைசி யாகப் பேசியவர் மபொசி...... "இத்தனை பேரறிஞர்களும் தொடர்ந்து மூன்று நாள்கள் பேசி முடித்தபின்-சிலப்பதி காரத்தைப் பிழிந்து பிழிந்து சக்கைப்போடு போட்டுச் சக்கை யாகப் போட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் புலவர்கள், பேராசிரியர்கள். நான் தொழிலாளி. ஆகையால், அவர்க ளெல்லாம் போட்டுவிட்ட சக்கையை நான் பிழிந்தால் சாறு இருக்கும்" என்று முன்னுரை சொன்னார். சொன்னபடியே சிலப்பதிகாரச் சாற்றை விருந்தாக-பிறர் காணாத, காட்டாத நயங்கள் செறிந்து சுவை கெழுமிய விருந்தாகப் படைத்தார்.

**அரசியல், இலக்கியம்: புதிய மரபு**

அரசியல் மாநாடு ஒன்று நடத்துவதற்குமுன், அதனோடு தனியாக இலக்கிய மாநாடு நடத்தும் மரபையும் மபொசியே தொடங்கி வைத்தார் எனலாம்.

> "கலாசாரத் தொடர்புடைய அரசியல் இயக்கமான தமிழரசுக் கழகம் எடுத்துக்கொண்ட இந்தப் புது முயற்சியை மற்ற அரசியல் கட்சிகள் பின்பற்றியிருக்கு மானால், தமிழினம் இதற்குள் புதுவாழ்வு பெற்றி ருக்கும்."[140]

என்று அவர் தம் தன்வரலாற்று நூலிலே தம் நம்பிக்கையைப் புலப்படுத்துகிறார்.

தமிழ் மறை என்று சிறப்பிக்கப்படும் திருக்குறளுக்கோ அன்றிக் கவிச்சக்கரவர்த்தியாகக் காப்பிய அரங்கிலே இமாலயச் சாதனை புரிந்த கம்பரின் இராமாயணத்துக்கோ விழா

140. மபொசி : எனது போராட்டம்-பக்.548

எடுக்காமல், சிலப்பதிகாரத்தைத் தேர்ந்தெடுத்தமைக்கு அவரே விளக்கம் தருகிறார்:

> ''தமிழரசுக் கழகத்தின் சார்பில் காங்கிரஸ் பாரம் பரியத்தின் பிரதிநிதியாகவும் நின்று சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்கள் மத்தியிலே கொண்டுவர நான் விரும்பியதற்குக் காரணமுண்டு. திருக்குறளையோ கம்பராமாயணத்தையோ நான் விரும்பாதவனல்லன். மனமார விரும்பக்கூடியவன். ஆயினும், இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில் தமி ழினத்தை ஒன்றுபடுத்த நான் எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஒரு இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரம்தான்; வேறில்லை. இளங்கோ தந்தசிலம்பு தமிழினத்தின் பொதுச்சொத்து, இந்தியாவின் தேசிய இலக்கியம். அதனால்தான் சிலப்பதிகாரத்தை ஒரு கருவியாகக் கொண்டு பொது மக்கள் நடுவில் இலக்கிய இயக்கத்தைத் தொடங்கி வைத்தேன்.[141]

சத்திய நெறியும் சான்றாண்மைக் குறிக்கோளும் கொண்ட மபொசியின் கை, 'ஆகிவந்த' மங்கலக் கை. ஆதலால், அவர் கருத்தில் பதிந்த. அவர் திருப்பணிக்குக் களமாகிய சிலப்பதி காரம் அதன்பின் தமிழினத்தாரிடையேயும் அயலினத்தா ரிடையேயும் அளவிறந்த செல்வாக்குப் பெற்றுவிட்டது. இதனை நல்லவர் நெஞ்சறியும், நாடறியும்.

### திறனாய்விலே புதிய உத்திகள்

இலக்கியத் திறனாய்விலும் புதிய உத்திகளை அறிமுகப் படுத்திய தனித்தன்மையும் அவருக்கு உண்டு.

மொழிவழி இனக் கோட்பாடு அவருடைய பொதுவாழ்க்கை யின் மையம் என்பது தெள்ளத் தெளிவான உண்மையாகும். அந்தக் கண்ணோட்டத்தோடு இலக்கியத்தை ஆராய்ந்து எண்ணிறந்த கட்டுரைகளும் நூல்களும் படைத்துள்ளார். விடுதலை பெற்ற நிலையை மையமாக வைத்துக்கொண்டு, அதற்கு முன்னும் பின்னும் நிலவிய நிலைமையினை அவர் தம் எழுத்தோவியங்களில் கணித்துள்ளார். விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு (1970), விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு (1978) என்ற நூல்கள் மொழி வரலாற்றில் மட்டுமன்றித் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் மிகச் சிறப்பான

141. ஷை பக். 547-8

இடம் பெறுதற்கு உரியவை. 'இலக்கியங்களில் இனவுணர்ச்சி' (1976) 'கலிங்கத்துப்பரணி-திறனாய்வு' (1975) என்ற நூல்களும் இன வழி அணுகுமுறையிலே மிகச் சிறந்த நூல்களாகும்.

ஆய்வுக் கட்டுரை ஒன்றைத் தொடங்கி, அதிலே விவாதத்துக் குரிய செய்திகளைக் கொடுத்து, புலவர்களின் கருத்துரைகளைக் கட்டுரைகளாக வெளியிட்டு, இறுதியில் தம் கருந்தோடு பிறர் எழுதிய கருத்துகளை ஒப்பிட்டும் உறழ்ந்தும் முடிவாகத் தம் கருத்தை வெளியிடும் உத்தி, மபொசி மிக விருப்பத்தோடு செய்யும் பணியாகும். மனுநீதிச் சோழன் 'தன் ஒரே மைந்தன் மீது தேரேற்றிய செய்தி'யைச் சிலப்பதிகாரமும் சொல்கிறது; பெரியபுராணமும் பாடுகிறது. கதை நிகழ்ந்த இடம் புகார் என்கிறது சிலம்பு; திருவாரூர் என்கிறது பெரியபுராணம். 'புகாரா, ஆரூரா' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரை மேற் குறித்தவாறு கட்டுரை விவாத முறையில் வெளிவந்ததாகும். 'இளங்கோவின் மறதி' என்ற கட்டுரையும் அவ்வாறு வந்ததே.

தமிழரசுக் கழகத்தின் இயல்பிலும் இயக்கத்திலும் இலக்கிய மும் அரசியலும் முருகியற் பொலிவுடன் பொருத்தமுற இயைந் துள்ளன. காரணம், அக் கழகத்தினைத் தொடங்கி அதன் மூல நாயகராக உள்ள சிலம்புச் செல்வரின் ஆளுமை அத்தகையது.

**மபொசி, இலக்கியம் : பிணைப்பு நிலை**

1966ல் வெளிவந்த மணிவிழா மலரில் வெளிவந்துள்ள வினாவும் அதற்கு அவர் இறுத்த விடையும் வருமாறு:

> ''தங்களுடைய பொதுவாழ்க்கையில் தங்களுக்குத் திறமையையும் செல்வாக்கையும் தந்தது அரசியலா, இலக்கியமா''?
>
> ''என்னுடைய ஊனுடலைத் தந்தது அம்மாவா, அப்பாவா என்று கேட்டால், இருவரும்தான் என்று பதிலளிப்பேன், என்னைப் பொறுத்தவரையில் அரசிய லும் இலக்கியமும் தாயும் தந்தையும் போல, அரசியலோடு தொடர்பற்ற இலக்கியவாதி உலகியலறி வில் சூனியமாக இருப்பான். இலக்கியத்தோடு தொடர் பற்ற அரசியல்வாதி ஒழுக்கம் குன்றித் தன்னல வெறி பிடித்தலைவான். இலக்கியம் தெரிந்து பிரதமர் பதவி யில் இருந்ததனால்தான் அதனை எளிதில் துறந்தனர் மாணிக்கவாசகரும் சேக்கிழாரும். கொடுங்கோலராக வாழ்ந்தவர்களெல்லாம் பெரும்பாலும் இலக்கிய ஞான மற்றவர்களே. இலக்கிய ஞானமுடையவர்களிலும்

கொடுங்கோலர்கள் உண்டென்றால், அவர்கள் இலக்கியத்தைப் பொழுதுபோக்குக்காகப் பயின்றவர்களாகத் தான் இருக்கமுடியும்''[142]

பண்புக்கும் பண்பாட்டுக்கும் இலக்கியம் தேவை என்றும் உலகியலறிவுக்கு அரசியல் தேவை என்றும் மபொசி கருதுவதை மேலே கண்ட கருத்துரை தெளிவாக்குகிறது. இரண்டின் இணைப்பே சமநிலைப்பட்ட ஆளுமையைத் தரும் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்தித் தம் ஆளுமையின் 'ரகசிய'த்தை இங்கே தெளிவு படுத்தியுள்ளார்.

இலக்கியத்தை மிகவும் சுவையான பொழுதுபோக்காகக் கருதுவோரைச் சான்றோர் உலகு என்றுமே ஏற்றதில்லை, ஏற்காது. எனினும், மபொசியின் ஆளுமையாக்கத்திற்கு இலக்கியம் உதவியதைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதற்கு மேலும் ஒரு வினா-விடை:

''இலக்கியம் வெறும் பொழுதுபோக்குச் சாதனமா''?

''சிலபேர் அதனை அப்படியும் பயன்படுத்துகிறார்கள் என்பது உண்மைதான். என் அனுபவத்தில் பொழுதைப் போக்குவதற்காக அல்லாமல், தானாகவே வந்துபோகின்ற பொழுதை நம் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு இலக்கியம் ஒரு சாதனம் என்றே கருதுகின்றேன். இலக்கியங்கள் தோன்றவில்லையானால், மனித சமுதாயம் முழுவதுமே மிருகத்தனத்தை அடைந்திருக்கும், ஆனால், படித்தவர்கள் கூட இலக்கியத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாத குறையைக்காண்கின்றேன். இலக்கியத்தை ரசிப்பது வேறு, மதிப்பது வேறு. ரசிப்பவர் அதனைக் கொண்டு பொழுதுபோக்குகிறார்; மதிப்பவர் அதனால் மக்களிடையே மதிப்புப் பெறுகிறார்.''[143]

'படித்தவர்கள்கூட இலக்கியத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை' என்று மபொசி குறிப்பிடுவதை நன்கு மனங் கொள்ளவேண்டும். 'வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம், என எல்லை கூறும் வரிகளைப் படித்துப் படிப்பித்த படிப்பாளிகளெல்லாம் 'வடவேங்கடம்', 'தென்குமரி' இரண்டையும் வேற்றுமைத் தொகையாக மட்டும் கண்டனரே

142. சிலம்புச்செல்வர் மபொசி மணிவிழா மலர்-பக்.67
143. ஷை பக்.66

யன்றி அந்த எல்லைகள் இன்றைய தமிழகத்தில் இருக்கின்றனவா என வினா எழுப்பவோ, அல்லது அவற்றை மீட்பதற்கோ முற்படவில்லையே! தமிழினத்தின் 'வினைத்தொகை'யால் ஒதுங்கிப் போய்விட்ட அந்த எல்லைகளை மீட்கும் முயற்சி மபொசியிடம் தொடங்கித் தொடர்ந்தது. என்றால், இலக்கியம் அவருக்கு 'வெறும்' சுவைப் பொருளாக இல்லாமல், மதிப்புக்குரிய ஆவணங்களாக இருக்கிறது என்பது தெளிவு. கண்ணகியின் கதையைச் சிலப்பதிகாரத்திலே படித்துவிட்டு, 'ஆறிய கற்பு' 'சீறிய கற்பு' என்று எதுகைச் சுவையேற்றித் திறனாய்வு செய்து சுவைத்த படிப்பாளிகளிடையே கண்ணகியை அநீதியை எதிர்த்த வீராங்கனையாகவும் சிலப்பதிகாரத்தை அரசியற் காப்பியமாகவும் மபொசி கண்டார், காட்டினார்.

இலக்கியத்துக்கும் தமக்கும் உள்ள பிணைப்பினை மேலும் தெளிவாக ஒரு நூலின் முன்னுரையிலே விளக்கியுள்ளார்:

> ''பல்வேறு அலுவல்களுக்கிடையே என் மனத்துக்கு அமைதி தேடும் வகையில் நான் அடிக்கடி இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுவருகிறேன்...அரசியல், மொழி, பொருளாதார, சமய, இனக் கொள்கைகளுக் கேற்பப் பழைய இலக்கியங்களைப் புதிய கண்ணோட்டத்தில் ஆராய்வதை நான் வழக்கமாகக் கொண்டிருக்கிறேன்... பொழுதைப் போக்குவதற்காக நான் இலக்கியம் படிப்பதில்லை. புதிய தமிழகம் படைக்க வேண்டும், அந்தப் பணிக்கு இலக்கியத்தையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் நான் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுவருகிறேன்.''[144]

பொதுநலத் தொண்டருக்கு எதுவுமே தொண்டுக்குரியதாகவே வேண்டும். பொழுதைக் கழிக்க—களிக்க—விழையும் 'வீண'ருக்கு எதுவுமே இன்ப வேட்டைக்கான ரசனைக் கூடம்தான்! மபொசி முன்னைய கூட்டத்தைச் சேர்ந்தவர். 'கீதை' திலகருக்கும் காந்தியடிகளுக்கும் வினோபாவுக்கும் வெற்று உபதேச இலக்கியமாகவா பட்டது? போராட்டக் களத்திலே மக்களை அணிவகுத்து நின்ற அந்தப் பெருந்தகைகளின் ஆன்மாவையே இயக்குகின்ற இலட்சியத் தூண்டுகோலாக அன்றோ அந்நூல் அமைந்தது!

## ''குயில்'' ஆய்வு: விவரப் பசி

மபொசியின் இலக்கிய நூல்களை மிக ஆழமாக ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றார் என் நண்பர் டாக்டர் ப. அன்பு;

144. மபொசி : திருக்குறளிலே கலைபற்றிக் கூறாததேதன்—முன்னுரை. மேலும் ஒப்பிடுக : அந்நூல் பக்.116

விரிவான நூலும்கூட. எனவே, மபொசியின் பல இலக்கிய நூல்களையும் இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதாக இல்லை. பிற துறைகளிற் போலவே இலக்கியத் துறையிலும் மபொசியின் ஆளுமை அகலமும் ஆழமும் உடையது என்பதைச் சுட்டிக் காட்டுவது இவ்வாய்வின் போக்குக்குப் போதுமானது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றிச் சிலம்புச் செல்வர் மயிலை, பாரதிய வித்தியா பவனில் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்; பின்னர் அவை நூல்வடிவில் (1983)ல் வெளிவந்தன. பாரதியாரின் 'குயில்' பற்றிய சொற்பொழிவிலிருந்து ஒரு பகுதியை இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம்.

## தலைப்பு

பாரதியார் பாடல்களைப் பதிப்பித்தவர்கள் இக் குறுங் காவியத்தின் தலைப்பைக் 'குயில்' என்று சிலரும், 'குயில்பாட்டு' என்று வேறு சிலரும் குறிப்பிட்டுள்ளனர். வ. உ. சி. தொடர்பாகப் பாரதியார் பாடிய பாடல்களைப் பின்வந்தவர்கள் தலைப்பை மாற்றி வெளியிட்டிருக்கிறார்கள். குயில் பாட்டைப் பற்றி அப்படிக் குற்றஞ்சாட்ட இடமில்லை; எனினும், இரண்டு வகையில் தலைப்பு அமைந்தது எப்படி? பெரும்பாலும் உள்ளுறையாக இருக்கின்ற கருத்துகளில் நாட்டம் செலுத்துவது மபொசியின் வழக்கம் என்றாலும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது எதுவாக இருந்தாலும், இயன்றவரையில் எல்லா விவரங்களையும் அறிந்தே தீரவேண்டும் என்ற பேரார்வம் அவருக்கு உண்டு.

குயிலா, குயில் பாட்டா—எது சரியான பெயர்? 'முல்லையை என்ன பெயரிட்டழைத்தால் என்ன, மணம் நன்றாக இருக்கிறது —அது போதாதா' என்று மபொசியால் விடமுடிவதில்லை.

> ''அவர் படைத்த 'குயில் பாட்டு' 1923ல்தான் அச்சாகியிருக்கிறது. அதற்கு இரண்டாண்டுகட்கு முன்பே அவரது வாழ்வு முடிந்துவிட்டது. அந்த மகாகவியின் கையெழுத்துப் பிரதி கிடைக்குமானால், அவர் தந்த தலைப்பை ஐயத்திற்கிடமின்றி அறிந்துகொள்ளலாம். அப்படி ஒரு பிரதி இருப்பதாகத் தெரியவில்லை.''[145]

ஆம், பாரதியாரே இட்ட தலைப்பு இதுதான் என்று தெரிந்து கொள்ள இயலாமற் போய்விட்டதே என்பது மபொசியின் மனக் குறை. இந்த மனக்குறைக்குக் காரணம் அவருக்கு இருக்கின்ற

145. மபொசி: பாரதியார் பற்றி மபொசி பேருரை-பக். 475.

விவரப் பசிதான். விவரங்களை முழுமையாக அறியவேண்டும் என்ற அவர் பசி, ஆனைத் தீப் பசிதான்.

அறிவியல் செய்தி

'குயில்பாட்டு'ப் பற்றியது மபொசி மேற்கொண்ட ஆராய்ச்சி. அதன் கவிதை நயம், பண்பாட்டு எதிரொலி, கதைக் கட்டமைப்புப் போன்றவற்றை விளக்கி—தேவையும் இடமும் இருக்குமாயின் ஒப்பீட்டு முயற்சி மேற்கொண்டு—வேதாந்தமாக விரித்துரைக்க இடமிருப்பதாகக் கருதினால் அவ்வகையில் விளக்கங் கூறிக் குயில்பாட்டு ஆராய்ச்சியை முடிக்கலாம். அது போதுமானது; எவர்க்கும் மனநிறைவு தருவது. ஆனால். மபொசியின் ஆனைத் தீப் பசி அப்படி அமைதி கொள்ளவில்லை,

> ''குயில் பாட்டைப் பற்றிய பேச்சாதலால், அந்தப் பறவையின் பிறப்புப் பற்றியும் விளக்குவது பயன்தரும் என்று கருதி.''[146]

விஞ்ஞானச் செய்திகளைத் தமிழிலக்கியச் செய்திகளோடு இணைத்துத் தருகிறார்.

> ''குயில் கூடுகட்டி, முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரித்து வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதில்லை. ஆண் குயிலைக் கண்டால் காக்கைகள் துரத்தும். காக்கையின் கூட்டின் அருகே ஆண்குயில் சென்றதும் காக்கைகள் தமது எரிச்சலில் முட்டைகளையும் கூண்டையும் மறந்து அதைத் துரத்திவிரட்டும். அச்சமயம் பார்த்துப் பெண்குயில் காக்கைக் கூண்டில் முட்டையிடும். பிறகு, குயில் குஞ்சைப் பொரித்து வளர்க்கும் கடமை காகத்தையே சேரும். குயில் குஞ்சுகளுக்குப் பருவம் வந்தபின், அவற்றின் குரல் வேற்றுமை கண்டு வெறுத்து, காகம் அவற்றை விரட்டிவிடும்.''[147]

தமிழ்க் கலைக் களஞ்சியத்திலிருந்து உயிரியல் உண்மைக்கு ஆதாரம் கண்டு எடுத்துரைகிறார் மபொசி.

குரல் வேற்றுமை

உயிரியலார் விளக்கும் இச் செய்தி பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும் காணப்படுவதை மபொசி எடுத்துக்காட்டுகிறார் சீவக சிந்தாமணிச் செய்யுள் ஒன்றை (1661) எடுத்துக் காட்டி,

146. ஷெ பக்.488

147. ஷெ நூலில் தமிழ்க் கலைக்களஞ்சிய மேற்கோள்-பக். 48

அதற்கு நச்சினார்க்கினியர் வரைந்த உரையையும் காட்டுகிறார்.[148] குயிலின் உயிரியல் செய்தியைக் கதை போலக் கலைக்களஞ்சியம் சுவையாக விளக்குகிறது. அதைப் போலவே சிந்தாமணிச் செய்யுளும் சுவை பெறச் செய்தியைக் காப்பியக் கதைச் செய்திக்குப் பொருத்தமுற இயைத்துத் தருகிறது.

> "சிந்தாமணிக் காப்பியத்தில் - கனகமாலையார் இலம்பகத்துள் வரும் தலைவியானவள், நல்ல இளவேனிற் காலத்தில் - அந்திமாலை நேரத்திலே - தலைவனைப் பிரிந்து காதல் நோயால் வருந்துகின்றாள். அந்த நேரத்திலே, தன்னுடைய வருத்தத்தை மிகுவிக்கும் வகையில் குயில் கூவக் கேட்டு, அதன் பிறப்பிலும் வளர்ப்பிலும், வடிவத்திலும் உள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறிப் பழித்துப் பேசுகிறாள்."[149]

இது அந்தச் செய்யுளுக்கும் உரைக்கும் தரும் மதிப்பீட்டுப்பின்னுரையாகும்.

சிந்தாமணிக் காப்பியத்தில் கதைக்குரிய பின்னணிக்குப் பொருத்தமாக உயிரியல் செய்தியைத் திருத்தக்கதேவர் பயன்படுத்திக் கொண்ட செய்தியை மபொசி எடுத்துக்காட்டி விளக்குவது அவர்தம் சுவையியல் திறனாய்வாற்றலைப் புலப்படுத்துகிறது; மேலும் ஆராய எடுத்துக்கொண்ட பொருளோடு இயைபுடைய செய்திகளையெல்லாமே தொகுத்துக் காண வேண்டுமென்று அவருள் இருக்கின்ற விவரப் பசியும் வெளிப்படுகின்றது.

மேலும், சிலப்பதிகாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் முதலான நூல்களின் குயில் பற்றி வரும் செய்திகளையும் தொகுத்து, அவற்றிடையே இயைபையும் காட்டி விளக்குகிறார்.

> "குயில் என்னும் பறவையைப் பற்றி முற்கால இலக்கியங்களிலே இங்குமங்குமாக அற்ப சொற்ப அளவியேயே குறிப்புகள் கிடைக்கின்றன. குயிலும் காக்கையும் தோற்றத்தில் ஒன்று போலத்தான். ஆனால், குரலில் வேற்றுமையுண்டு. குயிலின் குரல் இனிமையானது. அதனாற்றான், 'கீதமினிய குயிலே' என்றார், திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர். ஆண்டாளும், 'இசை பாடும் குயிலே' என்கிறார். காப்பிய நாயகியரை

148. ஷை பக்.480-7
149. ஷை பக்.487

வருணிக்குமிடத்து, குரலொற்றுமை காரணமாக, குயி லொடு ஒப்பிடுகின்றனர் கவிஞர்கள். கம்பன் கண்ட இராமன், 'இனிய குயிலே' என்கிறான் சீதையை.

''குரலின் இனிமையிலே குயிலுக்கு இணை குயில் தான். வேறொரு பறவையை அதனோடு ஒப்பிடுவதற் கில்லை. குயிலானது இசை பாடும் பறவையென்று இளங்கோவடிகளும் கூறுகின்றார். இதற்கு,

> *பூவார் சோலை மயிலாலப்*
> *புரிந்து குயில்கள் இசைபாட (சிலம்பு. கானல்வரி)*

என்ற வரிகள் சான்றாகும்.''[150]

குரலினிமைக்குக் குயில் என்றும், அவ்வினிமைப் பண்பு கருதியே காப்பிய நாயகியரின் குரலுக்கு அப்பறவையின் இன்குரலை உவமை கூறுவது மரபென்றும் எடுத்து விளக்கியது பெரிதில்லை. இச்செய்தி பலருக்கும் நினைவில் எழக் கூடியதே.

முரணி மோதும் சூழலிலே மிக ஆழ ஈடுபட்ட மபொசியின் ஆளுமைக்குக் குயிலோசையிலே இனிமைமட்டுமல்லாமல், கடுமை யும் உண்டென்று சொல்லும் இலக்கியச் செய்தி நினைவில் எழுகிறது :

> ''இதற்கு மாறாக, குயிலின் குரலை முழவின் ஒலியோடு ஒப்பிடுகின்றார் திருத்தக்கத்தேவர். 'முழவு' என்பது முரசு போன்ற தோற்கருவிகளுள் ஒன்று. அதன் ஒலி மென்மையாக இராது. சீவக சிந்தாமணியுள் 65 ஆம் பாடலிலே 'தாவில் பொன் விளக்கமாகத் தண்குயில் முழவமாக' என்கிறார் திருத்தக்கதேவர். இதற்கு, 'மெல்லிய ஓசையின்மையின் குயிலோசையை முழவ மாகக் கருதிற்று' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறியிருக்கிறார். இந்தப் பொருளுரைக்கு விளக்கம் தரப் புகுந்து டாக்டர் உ. வே. சாமிநாதையர் கீழ்வரு மாறு கூறுகின்றார் :
>
> 'குயிலின் ஓசை பஞ்சமஸ்வரம் என்று கூறப்படு மாதலின் இங்ஙனம் கூறினார். கார்ப் பருவத்தில் குயிலின் குரல் மெல்லியதாயிராது என்பதைப் பற்றிக் கூறினாரெனினுமாம்.'

150. ஷை பக்.476

"ஐயரின் விளக்கத்தை ஏற்பதனால், குயிலின் குரலானது இளவேனிற் காலத்தில் இனிமையாகவும், கார் காலத்தில் முழவொலி போன்று கடுமையானதாகவும் இருக்கும் என்று கொள்ளலாம். ஆனால், குயில் கூவுவதை முழவின் ஒலியோடு திருத்தக்கதேவர் ஒப்பிடுவது வேனிற்கால வருணனையில்தான்."[151]

குயிலின் குரலிலே கடுமையை இணைத்துக் கற்பனை செய்துகூட நாம் பொதுவாகப் பார்ப்பதில்லை. இசையமைதிக்கும் சிறப்புச் சேர்க்கும் இனிமையையே அதன் குரலோடு எண்ணிப் பார்த்து மகிழ்கிறோம். நமக்கு—அதாவது இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்வு பெற்று, இயற்கைநெறிக் கல்வியில் அக்கறை இல்லாத நமக்குக் குயிலின் ஓசையிலே கடுமையை இணைத்து உணரும் நிலை ஏன் ஏற்படவில்லை? நாம் நேராக இயற்கையைக் காண்பதோ, கண்டு ஈடுபடுவதோ பெரும்பாலும் இல்லை. ஒரோவழி இலக்கியப் படைப்பாசிரியர்கள் தரும் செய்திகளே நமக்குச் செய்திக் களஞ்சியங்களாகக் கொண்டிருக்கிறோம். நேரிடையான அனுபவம் இல்லாத நமக்குத் திருத்தக்கதேவர் அனைய புலவர் பெருமக்களே செய்தி வள்ளல்களாக உள்ளனர். இலக்கியத்தில் பெருவழக்காக இல்லாவிட்டால் பலவற்றை நாம் உணர முடியாமலே போக வாய்ப்பு உண்டு. குயிலின் கடுமைக் குரல்பற்றிய செய்தியும் அத்தகையதுதான். "இலக்கியங்களில் குயிலைப்பற்றி வரும் குறிப்புக்கள் எல்லாம் இளவேனிற் காலத்தைப் பற்றியவையாகவே இருத்தலால் கார் காலத்தில் அதன் குரல் மென்மையிராது என்ற செய்தி கிடைக்கவில்லை"—இவ்வாறு இலக்கிய அமைப்பு மரபைக் கொண்டு விளக்கம் தருகிறார் மபொசி.

சீவகசிந்தாமணி 65ஆம் பாடலில் குயிலோசைக் கடுமையைத் திருத்தக்கதேவர் சுட்டுகிறார். பின்னே கனகமாலையார் இலம்பகத்துச் (1661ஆம்) செய்யுளுக்கு உரை எழுதும்போது நச்சினார்க்கினியர் ஆசிரியர் முன் குறித்த செய்தியை நினைவிலே வைத்திருந்து, "எடுத்து வளர்த்தவளும் நின் சொல்லின் கடுமையால் இல்லினின்றும் கடிந்தாள்" என்று விளக்கம் தருகிறார். இரண்டு இடங்களையும் நமக்கு நினைவூட்டிக் குயில்பற்றிய ஓர் அருங்குறிப்பைச் சுட்டுகிறார் மபொசி. அவருக்குள்ள விவரப் பசியினால் இத்தகைய செய்திகளை வழங்கமுடிகிறது.

151. ஷெ பக்.477

## ஆனந்தக் குயில்—அவலக் குயில்

குயிலாகிய பறவை பற்றிய இலக்கியச் செய்திகளை மேலும் பொசி தந்துள்ளார். மணிவாசகர் சித்திரிக்கும் குயிலையும் ஆண்டாள் நாச்சியார் சித்திரிக்கும் குயிலையும் நம் முன் கொணர்ந்து நிறுத்தி, இருவர் காட்சியிலும் பட்ட குயில்களி டையே உள்ள ஒற்றுமையைக் காட்டி, தம் சொற்பொழிவுக்கு உரிய பாரதியாரின் குயிலையும் சுட்டிக் காட்டி, முன்னவர்களின் குயில்களுக்கும் புதுவைக் குயிலுக்கும் உள்ள வேறுபாட்டைச் சுட்டுகிறார் சிலம்புச் செல்வர். இடையிலே இளங்கோவடிகளின் குயிலும் குரல் காட்டுகிறது.

> ''மாணிக்கவாசகரும் நாச்சியாரும் பாடிய குயிற்பத்துள் நாம் காணும் குயிலிலிருந்து முற்றிலும் வேறுபட்டது மகாகவி பாரதியார் கண்ட குயில்.''[152]

என்று முன்னுரை கூறி,

> ''காதலர்களைச் சேர்த்துவைக்கும் குயிலை வில்லிபுத்தூர் நாச்சியாரும் வாதவூரரும் நமக்கு அறிமுகப்படுத்துகின்றனர். இந்த இருவருக்கும் காலத்தால் பன்னூறு ஆண்டுகட்கு முற்பட்டவரான இளங்கோவடிகளும் பிரிந்த காதலர்கள் திரும்பவும் கூடி இன்பந் துய்க்கத் தூண்டும் வகையிலே பாடும் குயிலையே சிலம்பில் அறிமுகப்படுத்துகிறார்.''

> ''பாவம்! மகாகவி பாரதியார் கண்ட குயிலோ சோகத்தால் புலம்புகின்றது! தன் கருத்திற் கிசைந்த காதலன் கிடைக்காததால், 'வாழ்ந்தால் காதலனோடு வாழ வேண்டும்; இல்லையேல் சாதலே நன்று' என்னும் பொருள்பட அவலப் பாட்டைப் பாடுகின்றது! முற் பிறப்பிலேயும் காதலிலே தோல்வி கண்டது கவிஞர் பாரதியார்காட்டும் குயில்!''[153]

காதற் குயில்களே எல்லாம்; ஆனாலும் களிப்பிலே திளைத்துப் பாடும் குயில்கள்—காதல் கைகூடாமல் கலங்கிப் பாடும் குயில் எத்தனை உணர்ச்சி வேறுபாடு! அங்கும் பாடும் குயில் இங்கும் பாடும் குயில்தான்: ஆனால், குரலிலே இழைந்தொழுகும் உணர் விலே தெற்கும் வடக்குமான வேறுபாடு!

---

152. ஷை பக்.481
153. ஷை

இந்த வேறுபட்ட நிலையை இலக்கியக் குயிலிலே நமக்குக் காட்டுவது மபொசியின் விவரப் பசி.

**வட்டார வழக்குணர்வு தந்த விளக்கம்**

வாதவூரர் காட்டியது குயிற் பேடு; நாச்சியார் காட்டியது குயிற் சேவல்—இப்படியும் ஒரு வேறுபாடு காட்டுகிறார் மபொசி.[154] இவ்வேறுபாட்டைக் கண்டுணர்வதற்கு மபொசிக்கு உதவியது வட்டார வழக்குச் சொல்லாட்சியாகும். மணிவாசகர் 'வாவிங்கே நீ குயிற் பிள்ளாய்' என்று விளிக்கிறார். 'பிள்ளாய்' என்ற சொல்லால் பெண் குயிலையே மணிவாசகர் குறிப்பிடு கிறார்.

> ''பெண்களைப் பிள்ளைகள் என்று சொல்வது பாண்டிய நாட்டு வழக்கம்,''[155]

என இதற்குக் காரண விளக்க ஆதாரம் காட்டுகிறார். மபொசியின் விவரப் பசிக்குத் தொண்டை நாட்டாராகிய அவருக்குத் தென்பாண்டி நாட்டின் வட்டார வழக்கறிவு பயன்பட்டுள்ளது.

## ஆழ முகக்கினும்....

பல் துறைச் சீர்மை, தொண்டிலே மேன்மை, கிளர்ச்சிகளிலே வாகை, சான்றோர் போற்றும் சான்றாண்மை, அரசியல் சூழ்ச்சிகளை இனங்கண்டு பொதுவாழ்வுக் கடலிலே திறனுறக் கலஞ்செலுத்தும் திறன்...சுருங்கச் சொன்னால் பணி நிலையின் கட்டளைக் கல் எனப் போற்றப்படும் திருநாவுக்கரசரின் இருபதாம் நூற்றாண்டுப் பதிப்பு—இமாலய ஆளுமை.

காந்தியத்தின் தூய்மை—
பண்பாட்டின் ஊற்றம்—
சமய உணர்வின் திளைப்பு—
மொழிக் காவலர்—
எல்லை கொண்டார்—...
இலக்கிய ஏந்தல்—
முதுமையின் கனிவு—
இளமையின் இலக்கு......

இந்த ஆளுமை நாயகரின் அகலத்தையும் ஆழத்தையும் கணித்தறியும் திறன் எனக்கு இல்லை. ஆழ முகக்கினும் நாழி முகவாது நானாழி.

---

154. ஷெ பக்.478-9
155. ஷெ பக்.478

அழுத்தி அழுத்தித்தான் முகந்திருக்கிறேன். ஆனால், அளக்கப்படும் கடல் அளக்கவரும் நாழிக்குள் அடங்க மறுக்கிறது.

நான் அகத்தியன் அல்லன்—கடலைக் கையால் முகந்திட.

ஆனால், பஞ்சவரில் இளையவன்-இளையான்: சகாதேவன் ஒரு சாதனை செய்தான். ஆண்டவன் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை என உணர்ந்தவன், தன் பெருமை தானறியா-எல்லை இகந்த பெருமான் இறைவன்; ஓத உலவா ஒரு தோழம் தொண்டருளான்; ஏது அவனைப் பாடும் பரிசு என வாசக வல்லுநரும் திகைத்திடும் நாதன்...பரமன் நிலை பாடுவார் பாவினுள் சிறைப்படாதது. ஆயினும், அவனைப் பிறர் உணரார் என்பதினும், தன்னையே தானுணராப் பேரெல்லை நாயகன் என்பதே அளப்பரிய அவனைச் சுட்ட முயலும் சிறு குறிப்பு.

சகாதேவன் சொல்லுகிறான்:[156]

உன்னைநீ தானும் உணராதாய் என்று அவனையே கட்டிவிட முடியும் என்கிறான், அந்தச் சகாதேவன்.

உன்னைநீ தானும் உணராதாய்
உன் வடிவம்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன்
யான் என்றான்[157]

ஆம், அப்போதும் ஆண்டவன் தன்னையே காட்ட வேண்டும். அந்த அருட்பெரு நிலையிலே அடியவனால் ஆண்டவனைக் கட்டிவிட முடியுமாம். மூலமாம் தோற்றம் உணர்ந்து சகாதேவன் மாயவனைத் தன் கருத்தினால் பிணித்தான் என்பது மாபாரதம். ஐயா மபொசியின் ஆளுமைத் திறம் எனக்கு எட்டாது. எனினும் அவர் தம் எழுத்தோவியங்களில் தம்மைக் காட்டியுள்ளார்; அத்தோற்றத்தின் மூலம் உணர முயன்று என் அன்பால் கட்ட முயன்றுள்ளேன்.

அன்புக்குக் கட்டுப்படுவதே மபொசியின் ஆளுமையில் தலைமை சான்றது—இறைவனின் எளிவந்த தன்மைபோல.

156. வில்லிபுத்தூரார் பாரதம் : கிருட்டிணன் தூது சருக்கம் 34.
157. ஷை

# துணை நூல்கள்


*கம்பர்* — இராமாயணம்
*கம்பன் கழகம், சென்னை* (1976)

*சேக்கிழார்* — பெரிய புராணம்
*காசி மடம், திருப்பனந்தாள்* (1958)

*திருவள்ளுவர்* — திருக்குறள்
*காசி மடம், திருப்பனந்தாள்* (1970)

*திரு.வி.கலியாண சுந்தரனார்* — இந்தியாவும் விடுதலையும்
*சாது அச்சுக்கூடம், சென்னை* (1947)

*தொல்காப்பியர்* — தொல்காப்பியம்
*எஸ். இராஜம், சென்னை* (1960)

*மபொ.சிவஞானம்* — ஆன்மீகமும் அரசியலும்
*விசாலாட்சி பதிப்பகம், சென்னை* (1980)
இன்பத்தமிழா, இந்தி -ஆங்கிலமா
*மாதவி பதிப்பகம், சென்னை* (1963)
எனது போராட்டம்
*இன்ப நிலையம், சென்னை* (1974)
கம்பரிடம் யான் கற்ற அரசியல்
*பூங்கொடிப் பதிப்பகம், சென்னை* (1979)
சிலப்பதிகாரத் திறனாய்வு
*பூங்கொடிப் பதிப்பகம், சென்னை* (1979)
தமிழும் கலப்படமும்
*இன்ப நிலையம், சென்னை* (1960)
திருக்குறளிலே கலைபற்றிக் கூறாததேன்
*பூங்கொடிப் பதிப்பகம், சென்னை* (1974)
பாரதியார் பற்றி மபொசி பேருரை
*பூங்கொடிப் பதிப்பகம், சென்னை* (1983)

*வில்லிபுத்தூரார்* — பாரதம்
*எஸ். இராஜம், சென்னை*

Gandhi — Selection From Gandhi
Navajivan Publishing House
Ahmedabad (1968)

**இதழ்கள்**

*'சர்வோதயம்'*, கோவை
*'செங்கோல்'*, சென்னை
'Tennessean', Nashville, Tn, Usa

**மற்றும்**

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. மணிவிழா மலர், சென்னை (1966)

பின்னிணைப்பு

# ம.பொ.சி.யின் நூல்கள்

(கால நிரல்—பொருள் நிரல்)

| வரிசை எண் | நூற்பெயர் | பொருள் வகை | ஆண்டு |
|---|---|---|---|
| 1. | கப்பலோட்டிய தமிழன் | 4ஆ | 1944 |
| 2. | புதிய தமிழகம், | 3 | 1946 |
| 3. | தமிழருக்குச் சுயநிர்ணயம் | 3 | 1946 |
| 4. | தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும் | 3 | 1946 |
| 5. | தமிழகத்தில் தமிழரசு | 3 | 1946 |
| 6. | சிலப்பதிகாரமும் தமிழரும் | 1ஆ | 1947 |
| 7. | ஆந்திரப் பொங்கல் | 5 | 1947 |
| 8. | தமிழரசுக் கழக முதல்மாநாடு-தலைமையுரை | 8 | 1947 |
| 9. | தமிழன் குரல் | 3 | 1947 |
| 10. | முடிவை மாற்ற முயல்வார்களா | 3 | 1947 |
| 11. | சுதந்திரப் போரில் தமிழகம் | 4இ | 1948 |
| 12. | தமிழர் கண்ட காந்தி | 2 | 1949 |
| 13. | வீரபாண்டிய கட்டபொம்மன் | 4ஆ | 1950 |
| 14. | பேச்சுக் கலை | 6அ | 1950 |
| 15. | திராவிடத்தார்களின் திருவிளையாடல்கள் | 3 | 1950 |
| 16. | மேதினப் புரட்சி | 3 | 1905 |
| 17. | தளபதி சிதம்பரனார் | 4ஆ | 1950 |
| 18. | வானொலியில் ம.பொ.சி. | 8 | 1950 |
| 19. | கயத்தாற்றில் கட்டபொம்மன் | 4ஆ | 1950 |
| 20. | பிரிவினை வரலாறு | 4இ | 1950 |
| 21. | கண்ணகி வழிபாடு (ஆராய்ச்சி) | 1ஆ | 1951 |
| 22. | மேடைப் பேச்சும் பொதுக்கூட்டமும் | 6அ | 1951 |
| 23. | திராவிடக் கழகமே வேங்கடத்துக்கு வெளியே போ | 3 | 1951 |
| 24. | சீர்திருத்தப் போலிகள் | 5 | 1951 |
| 25. | வள்ளுவர் வகுத்த வழி | 1அ | 1952 |
| 26. | தமிழரசுக் கழக மாநில மாநாட்டுத் தலைமையுரை | 8 | 1952 |
| 27. | தமிழரசா, திராவிடஸ்தானா | 3 | 1952 |
| 28. | எங்கள் கவி பாரதி | 1ஊ | 1953 |
| 29. | தமிழர் திருநாள் | 5 | 1953 |
| 30. | வடக்கெல்லைப் போர் | 3 | 1953 |
| 31. | இலக்கியச் செல்வம் | 1எ | 1953 |
| 32. | இலக்கியத்தின் எதிரிகள் | 3 | 1955 |

| | | | |
|---|---|---|---|
| 33. | முரசு முழங்குகிறது | 8 | 1955 |
| 34. | இன்பத் தமிழகம் | 5 | 1956 |
| 35. | கட்டுரைக் களஞ்சியம் | 8 | 1956 |
| 36. | பொம்மன் புகழிலும் போட்டி | 4ஆ | 1956 |
| 37. | ம. பொ. சி. கூறுகிறார் | 8 | 1956 |
| 38. | தி. மு. க. வின் கொள்கை மாற்றம் | 3 | 1957 |
| 39. | வீரக் கண்ணகி | 1ஆ | 1958 |
| 40. | இளங்கோவின் சிலம்பு | 1ஆ | 1959 |
| 41. | சுயாட்சி தமிழகம் | 3 | 1959 |
| 42. | சுயாட்சியா பிரிவினையா | 3 | 1959 |
| 43. | சுதந்திர வீரன் கட்டபொம்மன் | 4ஆ | 1959 |
| 44. | தமிழும் கலப்படமும் | 6எ | 1960 |
| 45. | பாரதியும் ஆங்கிலமும் | 1ஊ, 6 | 1961 |
| 46. | தமிழா? ஆங்கிலமா? | 6ஈ | 1961 |
| 47. | காந்தியடிகளும் ஆங்கிலமும் | 2 | 1961 |
| 48. | பாரதி கண்ட ஒருமைப்பாடு | 1ஊ | 1963 |
| 49. | வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு | 1உ | 1962 |
| 50. | இன்பத் தமிழா, இந்தி , ஆங்கிலமா? | 6ஊ | 1963 |
| 51. | ம. பொ. சி. பேசுகிறார் (பர்மா) | 8 | 1963 |
| 52. | ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு | 4ஈ | 1964 |
| 53. | சிந்தனை அலைகள் | 8 | 1964 |
| 54. | மலாசியாவில் ஒரு மாதம் | 7 | 1965 |
| 55. | வள்ளலாரும் பாரதியும் | 1உ | 1965 |
| 56. | இலக்கியத்தில் சோஷலிசம் | 3 | 1965 |
| 57. | வள்ளலார் வளர்த்த தமிழ் | 1உ | 1966 |
| 58. | உலக மகாகவி பாரதி | 1ஊ | 1966 |
| 59. | கம்பர் கவியின்பம் | 1இ | 1966 |
| 60. | தமிழிசை வரலாறு | 6ஆ | 1966 |
| 61. | ஏன் வேண்டும் எதிரணி? | 3 | 1966 |
| 62. | வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (மாணவர் பதிப்பு) | 1உ | 1967 |
| 63. | ஔவை - யார்? | 1எ | 1968 |
| 64. | மாதவியின் மாண்பு | 1ஆ | 1968 |
| 65. | மொழிச் சிக்கலும் மாநிலச் சுயாட்சியும் | 3 | 1968 |
| 66. | முதல் முழக்கம் | 4ஆ | 1968 |
| 67. | வள்ளலார் கண்ட சாவாக் கலை | 1உ | 1970 |
| 68. | வள்ளலார் கண்ட ஆன்மநேய ஒருமைப்பாடு | 1உ | 1970 |
| 69. | வள்ளலார் வகுத்த வழி | 1உ | 1970 |
| 70. | சான்றோரின் சாதனைகள் | 8 | 1970 |

| | | | |
|---|---|---|---|
| 71. | விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு | 4ஈ | 1970 |
| 72. | கோவலன் குற்றவாளியா? | 1ஆ | 1971 |
| 73. | காந்தியடிகளும் சோஷலிசமும் | 2 | 1971 |
| 74. | மாஸ்கோவிலிருந்து லண்டன் வரை | 7 | 1972 |
| 75. | கப்பலோட்டிய சிதம்பரனார் | 4ஆ | 1972 |
| 76. | சிலப்பதிகாரத் திறனாய்வு | 1ஆ | 1973 |
| 77. | மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு | 4இ | 1973 |
| 78. | திருக்குறளிலே கலைபற்றிக் கூறாததேன்? | 8 | 1974 |
| 79. | பாரதியாரின் பாதையிலே | 1ஊ | 1974 |
| 80. | காந்தியடிகளுக்கு முற்பட்ட காலத்தில் விடுதலைப்போர் | 4இ | 1974 |
| 81. | எனது போராட்டம் | 4அ | 1974 |
| 82. | சட்டமன்றத்தில் சுயாட்சிக் குரல் | 3 | 1974 |
| 83. | கல்விநெறிக் காவலர்— நெ.து.சு. | 8 | 1974 |
| 84. | கலிங்கத்துப் பரணி — திறனாய்வு | 1ஈ | 1975 |
| 85. | வானொலியில் வள்ளலார் | 1உ | 1976 |
| 86. | இலக்கியங்களில் இனவுணர்ச்சி | 1எ | 1976 |
| 87. | தமிழை வளர்க்கக் கோரி ஆளுநர்க்கு விண்ணப்பம் | 6உ | 1976 |
| 88. | தமிழகத்தில் பிற மொழியினர் | 5 | 1976 |
| 89. | வள்ளலாரும் காந்தியடிகளும் | 1உ | 1977 |
| 90. | வந்தே மாதரம் (வரலாறு) | 4இ | 1977 |
| 91. | சிலப்பதிகார யாத்திரை | 1ஆ | 1977 |
| 92. | சிலப்பதிகார ஆய்வுரை | 1ஆ | 1978 |
| 93. | தமிழிசை வாழ்க ! | 6ஆ | 1978 |
| 94. | விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு | 4ஈ | 1978 |
| 95. | கம்பரிடம் யான் கற்ற அரசியல் | 1இ | 1979 |
| 96. | தொல்காப்பியரிலிருந்து பாரதியார் வரை | 1எ | 1979 |
| 97. | பாரதியார் போர்க்குரல் | 1ஊ | 1979 |
| 98. | காந்தியடிகளைச் சந்தித்தேன் | 2 | 1979 |
| 99. | நாடகத் தமிழ் | 6இ | 1979 |
| 100. | மகாத்துமாவும் மதுவிலக்கும் | 2 | 1979 |
| 101. | ஆன்மீகமும் அரசியலும் | 1எ | 1980 |
| 102. | திருவள்ளுவரும் கார்ல் மார்க்சும் | 1அ | 1980 |
| 103. | சிலப்பதிகார உரையாசிரியர்கள் சிறப்பு | 1ஆ | 1980 |
| 104. | சுதந்திரப் போர்க்களம் | 4இ | 1980 |
| 105. | ம.பொ.சி. பேசுகிறார் | 8 | 1980 |

| | | | |
|---|---|---|---|
| 106. | வைகுந்தம் திறந்தது | 1ஏ | 1980 |
| 107. | ஔவையார் அருளிச்செய்த கல்வி யொழுக்கம் (பதிப்பு) | 1ஐ | 1980 |
| 108. | சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை | 8 | 1981 |
| 109. | ம.பொ.சி படைத்த புதிய தமிழகம் | 3 | 1981 |
| 110. | கம்பரும் காந்தியடிகளும் | 1இ,2 | 1981 |
| 111. | கல்வி மொழி தமிழா ஆங்கிலமா | 6ஈ | 1981 |
| 112. | வில்லிபாரதத்தில் தமிழ் உணர்ச்சி | 1ஒ | 1981 |
| 113. | ஆங்கிலம் வளர்த்த மூடநம்பிக்கை | 6ஊ | 1982 |
| 114. | நவபாரதத்தை நோக்கி | 3 | 1982 |
| 115. | விடுதலைப் போரில் தமிழகம் | 4இ | 1982 |
| 116. | கம்பரின் சமயக் கொள்கை | 1இ | 1983 |
| 117. | பாரதியார்பற்றி ம.பொ.சி. பேருரை | 1ஊ | 1983 |
| 118. | தமிழும் சமஸ்கிருதமும் | 6எ | 1984 |
| 119. | புதிய தமிழகம் படைத்த வரலாறு | 3 | 1985 |
| 120. | தோழர் சிங்காரவேலரின் வீரவாழ்க்கை | 4ஆ | 1985 |
| 121. | இலக்கியங்களிலே இன-சமயக் கலப்புகள் | 1எ | 1985 |
| 122. | சிலம்புச் செல்வரின் பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள் | 8 | 1985 |

மேலே கண்ட பின்னிணைப்புப் பற்றி ஒரு விளக்கம்

- என் அரிய நண்பர் டாக்டர் அன்பு அவர்கள்'ம.பொ.சி. யின் இலக்கிய நூல்கள் : ஓர் ஆய்வு' என்ற தலைப்பிலே முனைவர் பட்டத்துக்கு ஆய்வு செய்து தகுதிச்சிறப்பால் அப்பட்டத்தினைப் பெற்றார். அவர் உருவாக்கிய ஆய்வேட்டின் இரண்டாம் பகுதி பின்னிணைப்புகள் பல வற்றைக் கொண்டது; மேல் ஆய்வு செய்ய விழை வோருக்கு நல்ல ஆவணத் தொகுப்பு. ஆயின், அந்த இரண்டாம் பகுதி வெளிவரவில்லை.

  வெளிவாராத இரண்டாம் பகுதியிலுள்ள மூன்று பட்டியல்களைப் பயன்படுத்தியே இங்குள்ள பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது.

  முனைவர் அன்பு அவர்களுக்கு நன்றி—

- இந்தப் பட்டியலை நுணுகி நோக்கின்—
  - மபொசியின் நூலாக்கப் பணி தெளிவாகும்.

★ நூல்களின் எண்ணிக்கைமட்டுமல்லாமல் அவற்றுள் வடிக்கப்பட்டுள்ள எண்ணங்கள் படர்ந்த வழி யினையும் உய்த்துணரலாம்.

★ அவருடைய ஆளுமையின்—

அகலமும் தெளிவாகும்

ஆழமும் தெளிவாகும்.

★ அகலமும் ஆழமும் கொண்ட அவர் திறன் எத்துணைத் துறைகளில் பயன்பட்டுள்ளது என் பதும் தெளிவாகும்,

★ பொருள் வகை என்ற பாகுபாட்டில் கொடுக்கப்பட் டுள்ள குறியீடுகளின் விளக்கம் வருமாறு:

1. அ. இலக்கியம் திருக்குறள்
   ஆ. ,, சிலப்பதிகாரம்
   இ. ,, கம்பராமாயணம்
   ஈ. ,, சிற்றிலக்கியம்
   உ. ,, வள்ளலார்
   ஊ. ,, பாரதியார்
   எ. ,, பொது
   ஏ. ,, படைப்பிலக்கியம்
   ஐ. ,, பதிப்பு
   ஒ. ,, பாரதம்

2. காந்தியம்

3. அரசியல்

4. அ. வரலாறு தன்வரலாறு
   ஆ ,, வாழ்க்கை வரலாறு
   இ ,, அரசியல் வரலாறு
   ஈ ,, மொழிஇலக்கியவரலாறு

5. சமூகமும் பண்பாடும்

6. அ. தமிழ் முத்தமிழ் : இயல்
   ஆ. ,, ,, : இசை
   இ. ,, ,, : நாடகம்
   ஈ. ,, பயிற்சிமொழி
   உ. ஆட்சி மொழி
   ஊ. பொதுமொழி
   எ. தமிழ் : தனித்தமிழ்

7. பயணம்

8. பொது

★ இந்தப் பாகுபாட்டை யாவரும் அவ்வாறே ஏற்க வேண்டுமென்பதில்லை. கருத்து வேறுபடலாம்; கணிப்பும் வேறுபடலாம். பகுப்பின் அடிப்படை மாறலாம். முனைவர் அன்பு இத்துறையில் கடிதின் முயன்று, சிந்தித்துச் செய்துள்ள பாகுபாட்டை அவ்வாறே ஏற்றுக்கொள்வதில் குறைவோ குற்றமோ இல்லை, எனவே, அவர் முறையில் உருவாக்கிய பட்டியல்களே ஆதாரமாகக் கொள்ளப்பட்டன.

முனைவர் அன்பு, 'திருக்குறளிலே கலைபற்றிக் கூறாததேன்' என்ற நூலைத் திருக்குறள் பற்றியதாகக் குறிக்கிறார். ஆயின், அந்த நூல் பல இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு; ஒரு கட்டுரையின் தலைப்பு நூலுக்கும் பெயராகச் சூட்டப்பட்டது. 'பொது' என்ற (8) பிரிவிலே சேர்வதற்கு உரியது அந்நூல்.

அவர் ஆய்வு முடிந்தபின் மபொசி எழுதி உருவாக்கிய நூல்களும் (1985 ஜூன் முடிய) சேர்க்கப்பட்டுள்ளன.

# அருஞ்சொல்லகர வரிசை



அண்ணா 20
அ. தி. மு. க. 71
அரிசர்வோத்தமராவ் 52
அவ்பிக் 85, 86
அவ்வை சண்முகம் 20
அஹிம்சைத் தத்துவம் 9
ஆகஸ்டுத் தியாகி 16
ஆண்டாள் 100, 101
ஆளுநர் நாயகம் 79
ஆன்ம நேய ஒருமைப்பாடு 60, 65
இந்து முஸ்லீம் ஒற்றுமை 33
இராமாயணம் 60
இராஜாஜி 3, 13-19, 21, 22, 79
இலக்கியங்களில் இன உணர்ச்சி 92
இலங்கைத் தமிழர்ச் சிக்கல் 25, 28
இளங்கோ 4
இன்பத் தமிழா, இந்தி - ஆங்கிலமா 80
உத்தர காண்டம் 77, 78
உ. வே. சா. 31, 43, 95
எனது போராட்டம் 21, 46
கப்பலோட்டிய தமிழன் 89
கம்பர் 19, 77, 90
கருணாநிதி 20
கலிங்கத்துப்பரணி 92
கலைக் களஞ்சியம் 96, 97
காகேசிய விபத்து 87
காங்கிரசு 10, 11, 12, 19, 20, 22
காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா 52
காந்தியடிகள் 5, 6, 32, 55, 94
காந்தியம் 6, 13, 37, 66, 68, 74, 80, 85, 87, 88
காமராசர் 19, 20, 22-24
காஷ்மீர்ச் சிக்கல் 27
கிருஷ்ணமேனன் வி. கே. 11
கீதை 94
குடும்பக் கட்டுப்பாடு 38, 39, 42
குமரி கொண்டார் 9
குறள் 18, 24, 90
கையூட்டு 42
சஞ்சீவ ரெட்டி என். 11, 22,
சமய இலக்கியம் 31, 35
சமரச சுத்த சன்மார்க்கம் 65,
சர்வோதயம் 4
சாதிப் பாகுபாடு 54, 55
சார்லஸ்வுட் 71
சிந்தாமணி 96-98
சிலப்பதிகார விழா 90
சிலம்பு 91, 92, 94, 97
சிவா 52
சிவாஜி 33
சீனிவாசன் 53
சுதேசமித்திரன் 53
சுப்பிரமணிய ஐயர் ஜி. 53
சுப்பிரமணியம் சி. 70
சுயராஜ்யா 52
சூத்திரம் 64
செங்கோட்டைத் தாலுகா 12
செங்கோல் 9, 10, 14, 25
சேக்கிழார் 92
டெவ்ஃபிக் எசினி 85, 86
தட்சிணப் பிரதேசத் திட்டம் 14
தமிழ் இலக்கிய வரலாறு 29, 30, 32
தமிழக வரலாறு 29, 30, 32
தமிழரசுக் கழகம் 12, 14, 22, 27, 37, 91, 92
தயானந்தர் 52
தாகூர் 1
தி. க. 22, 82
தி. மு. க. 21, 25, 71, 82
திருக்காளத்தி 36
திருத்தக்கத் தேவர் 97, 99
திருநாவுக்கரசர் 101
திருவாசகம் 23, 97
திரு. வி. க. 22, 23, 49
திலகர்94
தெ. பொ. மீ. 77
தென்திருவிதாங்கூர் 12
தேவி குளம் 12
நச்சினார்க்கினியர் 97, 98
நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் 97
நேரு 10, 11, 14, 70
பக்தவத்சலம், எம். 70, 71
பகுத்தறிவு இலக்கியம் 31
பகுத்தறிவு வாதிகள் 30
பஞ்ச பூதத்தலங்கள் 36
பட்டினத்தார் 40, 41
பரிமேலழகர் 2

பனம்பள்ளி கோவிந்த
மேனன் 10, 11
பஸல் அலி கமிஷன் 12
பாரதிதாசன் 70
பாரதியார் 50, 52, 55, 57, 95
பீர்மேடு 12
புத்தகப் பித்தன் 56
பெரியபுராணம் 92
பெரியார் 81
போர்ச்சுக்கீசியர் 26
மணிப்பிரவாளம் 74, 75
மணிவாசகர் 92, 98, 100, 101
மணிவிழா மலர் 92
மதுவிலக்கு 5
மனுநீதிச் சோழன் 92
மெக் காலே 33, 71
மேனன், வி.வி. 11
மொழிக் கொள்கை 66
மொழிச் சிக்கல் 81-85
மொழிவழி இனக்கோட்பாடு 91
ராசாராம் மோகன் 52
வ. உ. சி. 52, 95
வங்கதேசச் சிக்கல் 27
வரதட்சிணை 55
வ. வே. சு. 52
வள்ளுவர் 1, 80
வள்ளலார் 56
வாஞ்சிநாதன் 52
வான்மீகி இராமாயணம் 77
விடுதலைக்குப் பின் தமிழ்
வளர்ந்த வரலாறு 91
விடுதலைப் போரில் தமிழ்
வளர்த்த வரலாறு 91
வினோபா 94
வீர அபிமன்யு 16
வேதநாயகர் 71
வேலையில்லாத் திண்டாட்
டம் 39

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | தமிழில் விடுகதைகள் | ரூ. 12-00 |
| 2. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | ரூ. 6-00 |
| 3. | தமிழர் தோற்கருவிகள் | ரூ. 10-00 |
| 4. | தமிழும் தமிழரும் | ரூ. 5-00 |
| 5. | தமிழர் இசை | ரூ. 70-00 |
| 6. | ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள் - ஓர் மதிப்பீடு | ரூ. 20-00 |
| 7. | இளங்கோவின் இலக்கிய உத்திகள் | ரூ. 12-00 |
| 8. | திராவிட மொழி இலக்கியங்கள் | ரூ. 35-00 |
| 9. | தமிழ் இலக்கியக் கொள்கை - 8 | ரூ. 20-00 |
| 10. | தமிழ் இலக்கியக் கொள்கை - 9 | ரூ. 20-00 |
| 11. | தொல்காப்பியம் - புணரியல் | ரூ. 10-00 |
| 12. | தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல் | ரூ. 12-00 |
| 13. | தொல்காப்பியம் - விளிமரபு | ரூ. 6-00 |
| 14. | தொல்காப்பியம் - பெயரியல் | ரூ. 12-00 |
| 15. | தொல்காப்பியம் - வினையியல் | ரூ. 20-00 |
| 16. | பிரபந்த தீபிகை | ரூ. 12-00 |
| 17. | கண் மருத்துவம் | ரூ. 50-00 |
| 18. | வர்ம சூத்திரம் | ரூ. 10-00 |
| 19. | தன்வந்திரி குழந்தை வாகடம் | ரூ. 14-00 |
| 20. | வெள்ளைக்காரன் கதை | ரூ. 7-00 |
| 21. | மெய்க்கீர்த்திகள் | ரூ. 20-00 |
| 22. | சிந்து இலக்கியம் | ரூ. 8-00 |
| 23. | தமிழ்ச் சுவடிகள் அட்டவணை | ரூ. 6-00 |
| 24. | தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | ரூ. 12-00 |
| 25. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 1 | ரூ. 12-00 |
| 26. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 2 | ரூ. 22-00 |
| 27. | இஸ்லாம் வளர்த்த தமிழ் | ரூ. 15-00 |
| 28. | உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | ரூ. 10-00 |
| 29. | டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள் | ரூ. 10-00 |
| 30. | தமிழரின் தாயகம் | ரூ. 10-00 |
| 31. | பாவாணரும் தனித்தமிழும் | ரூ. 12-00 |
| 32. | தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு | ரூ. 10-00 |
| 33. | விவிலியம் - திருக்குறள் - சைவ சித்தாந்தம் | ரூ. 20-00 |
| 34. | செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள் | ரூ. 25-00 |
| 35. | மொழி பெயர்ப்பியல் | ரூ. 10-00 |
| 36. | தமிழர் திருமணம் | ரூ. 25-00 |
| 37. | தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | ரூ. 35-00 |
| 38. | தமிழ் நாவல்கள் (அகர வரிசை) | ரூ. 40-00 |
| 39. | எண்பத்திரண்டில் தமிழ் | ரூ. 90-00 |
| 40. | Siddha Medicine (Heritage of the Tamils) | Rs. 45-00 |
| 41. | Cultural Heritage of the Tamils | Rs. 20-00 |
| 42. | Literary Heritage of the Tamils | Rs. 50-00 |
| 43 | Papers on Tamil Studies | Rs. 15-00 |
| 44. | Tamil Drama | Rs. 20-00 |
| 45. | Dr. Mu. Va. | Rs. 20-00 |
| 46. | Thiru Murugan | Rs. 5-00 |
| 47. | A Study of the Perunkatai | Rs. 12-00 |
| 48. | Tamil Writers Directory | Rs. 10-00 |
| 49. | Dissertations on Tamilology | Rs. 10-00 |
| 50. | Tamil-Text (An-Auto Instructional Course) | Rs. 25-00 |
| 51. | Siddha Medical Manuscripts in Tamil | Rs. 8-00 |
| 52. | Karaikkal Ammaiyar | Rs. 6-00 |
| 53. | Heritage of the Tamils-Temple Arts | Rs. 50-00 |
| 54. | Tolkāppiyam | Rs. 25-00 |

Japonica – Dial 441913